உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கயிலாய ஞானவுலா

## விருத்தியுரை

335

மவுலிவாக்கம் ஏகபோக மிராசுதாரரும்

திருவேற்காடு தேவஸ்தான தர்மகர்த்தருமான

ஸ்ரீமான் பா. ல. முருகேச நாயகர்

அவர்களால்

சென்னை

மாடல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right] 1936 [விலை 0-12-0.



இந்நூல் வெளிவர உபகரித்த மவுலிவாக்கம்
ஏகபோக மிராசுதாரரும் திருவேற்காட்டு
தேவஸ்தான தர்மகர்த்தருமான
ஸ்ரீமான். பா. ல. முருகேச நாயகர் அவர்கள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேரமான் பெருமாணுயனுர்

அருளிச்செய்த

# திருக்கயிலாய ஞானவுலா

மூலமும்


பிரசங்க பூஷணம்

பு. பா. இரத்தின சபாபதி நாயகர்

அவர்கள் இயற்றிய


விருத்தியுரையும்.


திருவேற்காடு தேவஸ்தான தருமகர்த்தர்

பா. ல. முருகேச நாயகர்

அவர்களால்



சென்னை

மாடல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

Registered] 1936 [விலை 0-12-0

௨

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

" காவலர் மகோதையார் கொடுங்கோளூர்கோ;
கழறியவை யறிந்தகோ; சிலம்போசைக் கருத்தார்
நாவலர்கோன் நண்பர்; அடிச்சேர னென்றே
நவின்றுவரும் வண்ணனை நயந்த கோ; நல்
பாவலர்கோ பாணபத் திரனுல் வாய்ந்த
பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ; வெற்பின்
மேவியகோ; வானைக்குக் குதிரை வைத்த
வீரர்கோ; எனையாளுஞ் சேரர்கோவே "

# முகவுரை

திருக்கயிலாய ஞானவுலா என்னும் இந்நூல், திருக்கயிலாயத்தில் எழுந்தருளிய அமலன்மேல் சேரமான் பெருமாள் நாயனாரால் பாடப்பெற்றது. திருக்கயிலாயம் என்பது தேவாரம் பெற்ற வடநாட்டுத் தலங்களுள் ஒன்று.

உலா என்பது தமிழ்மொழியில் அமைந்துள்ள 96 பிரபந்தங்களுள் ஒன்று. பேதை முதலிய எழுவகைப் பருவ மாதரும் தன்னைக்கண்டு காதல் கொள்ளத் தலைவன் ஒருவன் உலாப்போந்தான் என்று அத்தலைவனுடைய அரிய செயல்களைப் பல்லாற்றான் விளக்கிக் கலிவெண்பாவால் பாடுக என்பது இவ்வுலாப் பிரபந்த விதி.

வீதி யென்றது உருத்திர கணிகையர் வீதியை என உரைப்பர். ஊன்றி நோக்கின் இதன் மறுதலையான உண்மை ஒன்று மேலெழுந்து திரளலாகின்றது.

பெருமான் பவனி வருகின்றான்; காதல் என்ற அத்தன்மையே உருவம் பெற்று வருவதாக ஒவ்வொரு மாதரும் எண்ணி, பெண்மைப் பிறப்பால் எய்தவல்ல பயனை இன்று அடைவேம் எனக் கூறி, வானம் மழைபெய்யாது வரண்ட காலத்தில் உண்ணற்குரிய நீரைக்கண்டு ஓடுகின்ற மான் கூட்டமேபோல் அடர்ந்து வருகின்றார். மெய்ம்மறந்து உணர்வும் வேறுபட்டு இவர் செய்தசெயலும் செப்பியமொழியும் பற்பல. அழகுள ஆண்மகன் ஒருவன் வீதியில் உலாச் சென்றானெனின், அரிவையர் தம்தம் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனும் குணங்கள் நான்கனையும் கற்பையும் சிந்திவிட்டு காம வேட்கையால் கலங்குவது பெண்மைப் பிறப்பிற்கு இயல்பாமோ? அவ்வவ் அரிவையர்தம் நாயகரும் இதனை அறிந்திருந்தனரோ? சமயத்திற்கு ஏற்றவாறு கற்பினை மேற்கொளல் நங்கையர்க்கொரு நல்லறங் கொல்லோ? ஒருக்கால் இப்பெண்களெல்லாம் இன்னும் திருமணம் புரிந்து கொளாக் கன்னியர்தாமோ? பேதைமுதல் பேரிளம்

பெண்வரை இவ்வுலாவிற் குறிக்கப்பெறும் மாதரெலாம் கடிமணம் புரியாதிருந்த கன்னியரே என்று எண்ணும் இது ஒருக் கால் பொருந்துவ தாகலாமே! கன்னிய ரெனினும் என்? எந்த உலா வைப் படித்தாலும் அதனுள் அழகுடைய பெருமகன் ஒருவன் உலாக்கண்டு அவ்வெழுவகைப் பருவமாதரும் காமத்தால் உயங்குஞ் செய்தி யொன்றே அதனுள் அறியக் கிடத்தலின், கட்டழகுக் காளையரைக் காணுந்தோறும் காணுந்தோறும் அன்னார் கைக்கிளை யெய்துதல் அறமன்றே என ஊசலாடிய மனத்தராய், தகாதிது மாதர்க்கு எனும் சூழ்ச்சியால் மயல் போம் வழி உழன்ற அச்செயல் களைப் பெண்மையின் எல்லைக்கு அப்பாற்பட்டு நடக்கும் கணிகை யர்க்கு உரிமையாக்கினர்; தலைவன் பவனி சென்றது உருத்திர கணி கையர் வீதியாம் என்று முடிவு கட்டிச் சிலர் அமைதிகாண முயல லானர். இழிவுடைப் பரத்தையர் செய்தியிது எனக் கழிப்பதைக் காட்டிலும் அம்மாதராரை உயர்குலமும் நாற்குணமும் உற்றவ ராகவே கொண்டு, அவர்களை இவ்வண்ணம் செய்யத் தூண்டினவ னும் வீதியிற் சென்ற தலைவனை தாயுதாம் தோய்ந்த ஒருமகன் எனும் அத்தன்மையின்றி, தாயுதாங் காணுத் தருமத் திருவுடம்புடைய தனிப்பரம்பொருள் என்பது சிந்தையிற் செறியுமாயின் பின் இவ் வுலாவில் இழிவும் இடரும் இல்லாமை புலனும்.

மானுஷ்ய விதிகளைக் கடந்திருக்கும் அஃதே தெய்வம். மனித தருமமெலாம் எல்லையிலா உயிர்த்தொகுதிகளைக் குறிப்பிட்ட எல்லைக்கு உட்படுத்தி யுள்ளன. இவ் எல்லைக்கு மக்கள் உட்பட்டு உளர். ஒருவருடன் ஒருவர் கலக்கும் நிலைமையில் இவ்விதிகளனைத் தையும் கடவாது கைப்பிடித்தே உய்யும் இவ் உலகம். கற்பு முதலியன மனித அறம் கடவுள் தன்மையுள்ளன எனினும் அவ்விதி மனித்தர்க்குள் மாத்திரம் செல்லும். இறைவனுக்கும் உயிர்கட்கும் இடையில் அக்கற்பனைய விதிகளின் ஆட்சிக்குச் செல் வாக்கு இல்லை திண்ணம். சைவ முதலிய சமயங்களை உயிர்த் தொகுதிகள் உய்ய வகுத்த சிவபிரான் தான் அச்சமயங்களை யெலாம் கடந்து நிற்றலேபோல், ஒழுக்க முறைகள் வகுத்

திருப்பினும், காரணம் கற்பனை யனைத்தையும் கடந்து நிற்கும் அமலன் திருமுன் மக்கள் தமடகுள் வகுத்த விதிகளைக் கடந்து நிற்பர் என்பது தேற்றம். " நீதியும் அநீதியும் ஆதியொ டனாதியும் நிர்விஷய விஷய வடிவும், அத்தனையும் நீ அலது எள்ளத்தனையும் இல்லையெனில் யாங்கள் உனையன்றி யுண்டோ" எனற்கு உரிய மெய்ப்பொருளுடன் மக்கள் தொடர்புபெறும் அமயத்தில், மனிதர்க்குள் மட்டும் வகுத்துள ஒழுக்க முறைகளுக்கு அறுபடாது நிற்கும் வன்மை இல்லை.

பரமான்மாவைக் கண்ட உயிர்க் கூட்டங்கள் ஆவைக்கண்ட கன்றெனக் குதித்துக் கூத்தாடி அதனுடன் இயைதர விரைவது இயற்கை. இவ்விரைவின் எதிரில் மக்களுக்கென வரையறுத்துள நாணமும் நிறையும் ஆன விதிகள் சிறிதும் நிலைபெறா; எனவே, மூவர்க்கும் முதலான முழுமுதற் பொருளைக் கண்டதும் நங்கையர் தம்மை வலித்தவன்பால் செல்லும் உள்ளத்தைப் பிடித்தெனை ஓடினரே யானார். அவன் ஈர்த்ததால் சென்றனரே யல்லாமல் தமது இச்சையால் சென்றாரென எண்ணல் பிழை.

காலத்தாலும் தேயத்தாலும் வேறுபாடு அடைந்து காணப் பெறும் கற்போ ஓர் செயற்கைக் கற்பனை யென்பர். செயற்கையும் இயற்கையும் நேர் நேர் நிற்கும் அமயம் வென்றிபெறுவது இயற்கையே. இறைவன் இம்மாதரைத் தன்வயின் செயற்கை பின்பட ஈர்த்ததெலாம் இயற்கையின் இயக்கத்தாலேயாம். காந்தம் ஊசியை யீர்ப்பதேபோல் உயிர்களைத் தன்பக்கல் ஈர்த்துக்கொள்வது இறைவனுக்கு இயற்கையான சத்தியே. எனவே, விதிகளெலாம் மனித சம்பந்தத்திற்கே அடங்கிய எல்லையில் உள்ளன என்றும், எல்லையிலா மூலப் பரம்பொருளுடன் உள்ள இயற்கை நட்பில் இவைகளெலாம் பிணிப்பற்று விடுமெனவும் அறிகின்றோம்.

திருவிளையாடற் புராண வளையல் விற்ற படலத்தில்

........" தாருவன தெய்வ முனிவர் பன்னியர்தம்,

நிறையன் றளந்து காட்டுகென நெடியோன் மகனைப் பொடி
யாக்கும்,
மறவன் தானோர் காபாலி யாகிப் பலிக்கு வருகின்றான்"

எனப் பரஞ்சோதியார் கூறிய செய்யுளில், பரமன் 'முனிவர் பன்னியர் நிறையை அளந்து காட்டுகென்" என்று கூறிக்கொண்டு வருகின்றான். இது பகைமையால் அறை கூவிய மொழியன்று. எல்லையுள்ள எதுவும் அளக்கும் வல்லமை யுடையதாம். நிறையை அளந்து காட்டும் அதனால் அதற்கு எல்லையுளது எனுமிதை அறிவித்து, உயிர்த்தத்துவத்தை உலகுணர உணர்த்தவேண்டும் என்பது சிவபிரான் நோக்கம் என்பர். இந் நுண்மை யுணர்ந்தோர் உலாவின் உட்பொருளும் உணர்ந்தவரே யாவர்.

மேலும், உயிர்களெலாம் பெண்மையன, மூலப்பரம்பொருள் ஒருவனே ஆண்மையன். அப்பரமனைக் கண்ட உயிர்களெலாம் அவனிற் கலக்க அங்கலாய்க்கும் செய்தியே இவ் உலாவின் உட்கிடை யென்று ஊகிக்கப்பெறும்.

உயிரின் பெண்மையை உன்னுவமேல், இதனைப்பாடிய சேரமான் பெருமாள் நாயனாரே எழுவகைப் பருவ மாதராக மாறி மாறி நடிக்கும் மன்க்காட்சி திரண்டெழுந்து இந்நூலாக உருக்கொண்கொண்டதெனத் தூய உணர்ச்சி மிக்கார் ஓதுவர்.

முழுமூட்சுக்களே யன்றி அகப்பொருளிலக்கணத் துணைமட்டும் கொண்டு இந்நூலை ஆய்வது பிழையென்பதை அறிவேன்.

மொழிவளர்ச்சிப் பெயரெழுப்பி முடங்கி, சமயவளர்ச்சிக் குரலெடுத்து ஒடிந்து, உள்ளத்தில் செம்மை யின்மையும் அம்மம்ம! தெய்வ நிந்தையுமாக இருந்து, மேடைமேல் மட்டும் என்னே இவர் சமயப்பற்று என்னே இவர் மொழிப்பற்று எனப் பிறர் மதிக்குமாறு வெற்றுக்குப் பேசும் திறத்திற் சாய்ந்து முடியும் பொல்லா நெறியில் போகாமல், சாந்திபெறச் சமயக்கண் சார்க என்பது பண்டைக் காலச் செய்தி.

மனத்தின் செம்மையே அச் சமயக்கண் பெறுதற்குத் தக்க நெறி யென்ன அறவோர் உறஉற ஓதுவ கேட்டு, பிறதுறையில் ஈடுபடாது இத்தகைய நூற்களில் சிற்றில் விளையாடியும் சிறுதேரு ருட்டியும் போது போக்கி வரும் எளியனும் என்னையும் ஒருபொரு ளாக்கி, தெய்வச் சேக்கிழாரின் திருவவதாரத் தலமான குன்றத் தூரிலும், காஞ்சீபுரத்திலும் சேரமான் பெருமாள் நாயனர் திருநாள் உற்சவத்தைக் கொண்டாடும் திருவேற்காட்டுத் தருமகர்த்தரும், பெருந்தருமகுண சீலரும் ஏகபோக மிராசுதாரருமான சம்புகுலவள் ளல் பா. ல. முருகேச நாயகர் அவர்கள் ஊக்கியவாறு இவ்வுலாவிற்கு என் சிற்றறிவிற்கு எட்டியவரை இவ்வுரை யெழுதத் துணிந்தேன்.

எல்லா உலாக்களுக்கும் முதல் தோன்றிய காரணத்தால் ஆதி யுலா என்றும், ஞானவாக்கினையுடைய நாயனரால் அருளிச்செய்யப் பெற்றமையின் ஞானவுலாவென்றும், திருக்கயிலாயத்தில் அரங் கேற்றஞ் செய்தமையின் தெய்வீகவுலாவென்றும் பேர்பெற்ற இவ் அருமையான பிரபந்தத்திற்கு, ஞானம் ஒரு சிறிதுமில்லா அடியேன் உரைகாணல் பொருத்தமன்று எனினும், அன்புடைய நாயகர் தூண்டியவற்றை யெண்ணி என் சிற்றறிவிற் கெட்டியவாறு இவ் வுரையை ஒருவாறு எழுதினேன். இதனில் பல குறைகளிருக்க லாம். மும்மல வசத்தால் முறைமறந்து சொல்லிய உரையென்பதை யறிவர் அறிஞர்; பிழையுள இடம் இதுவென உணர்த்துவர்; அடுத்த பதிப்பில் விளக்கினர் சீர்த்தியைப் பாராட்டிப் பதிப்பிக்கலாம் என்று நம்பியுளேன்.

இந்நூல் வெளிவருதற்கு முதல் முதல் மூல்காரணமாய்த் தூண்டிய அன்பர் சோழங்க நல்லூர் மிராசுதாரர் சைவத்திருவாளர் வேலு நாயகர் அவர்கள். பெருங்கருணையாளராம் அவர்களது பேரு தவியால் சேரமான் பெருமாள் நாயனர் பாடிய பிரபந்தமான பொன் வண்ணத்தந்தாதியும் மும்மணிக்கோவையும் உரையுடன் மிக விரை வில் வெளிவரும். அந்த நூலில் அவர்களது அருங்குணத்தைக் கூறியுளேன்.

இந்நூல் வெளிவர உதவிய அன்பர் ஸ்ரீ. பா. ல. முருகேச நாயகர் அவர்கட்கும், குறிப்பிட்டகாலத்தில் இதை அழகுற அச் சிட்டு உதவிய மாடல் அச்சுக்கூடத்தார்க்கும் எனையாளுங் கந்தக் கடவுள் திருவருளால் எல்லா நலனும் நிறைவதாகுக.

அன்பன்,
பு. பா. இரத்தின சபாபதி.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சேரமான் பெருமாணயனர்

## வரலாறு

சேரநாட்டின் தலைநகரான கொடுங்கோளூரில்* அழற்குல மன்னராம் சேரர் மரபில் நற்றமிழ் நாடு முற்றிய தவத்தால் அவதரித்தவர் சேரமான் பெருமாள் நாயனர். இவர் இளம் பருவத்திலேயே § சிவத்தைக் காதலித்து, திருவஞ்சைக்களம் அடைந்து

---

* சேரர்கள் அங்கிகுலோற்பவர் என்பதை "பரிதியும் மதியும் வன்னியும் முதலாம் பல்வகைக் குலத்தும் உற்பவித்த நரபதிகுழாம்"; "சூரன் குலத்தோர் குபேரன் குலத்தோர் சுடர்ப்பாவகப் பேரன் குலத்தோர்" எனவரும் வில்லிபாரதத்தானும்,

ஜீவக சிந்தாமணி இயற்றப்பெற்ற காலத்தில் இயற்றப்பெற்ற சூளாமணி எனும் காவியத்துச் சுயம்வர சருக்கத்தில் உள்ள

"மழைக்கரும்புங் கொடிமுல்லை மருங்கேற
வரம்பணைந்து தடாவி நீண்ட
கழைக்கரும்பு கண்ணீனுங் கரபுரத்தார்
கோமானிக் கதிர்வேற் காளை
யிழைக்கரும்பு மிளமுளையா யெரிகதிரோன்
வழிமருக னிவனீ ரீர்ந்தண்
டழைக்கரும்பின் முருகுயிர்க்குந் தாரகலஞ்
சார்ந்தவர்க டவஞ்செய் தாரே"

எனுஞ் செய்யுளாலும், அறிகின்றும். (இதனில் கரபுரம் என்பது, சேரர்களின் இராஜதானியான கருவூர்; எரிகதிரோன் வழிமருகன் என்பது, அக்கினிக் கடவுளின் வழித்தோன்றலான சேரன் எனும் பொருளது.

§ சேரர்கள் மிகத்தொன்மை வாய்ந்த காலத்திலேயே சைவ சமயத்தாராய்த் திகழ்ந்தனர் என்பது ஆராய்ச்சியாளர் கூற்று.

பரமனை வழிபட்டுக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் சேர நாட்டைப் புரந்துவந்த செங்கோற் பொறையன் எனுங் காவலன், சிவப் பேறுன்னித் தவஞ்செய்ய வனஞ்சென்றான். காவலன் இன்றிக் கலங்கிய குடிகள் ஒன்றுகூடி, சேரமான் பெருமாளிடம் வந்து பணிந்து, * அரசை யேற்றுத் தம்மைக் காக்குமாறு குறையிரந்து

---

சேரன் செங்குட்டுவன் சிவபிரானை வழிபட்ட செய்தியைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது. 26 ஆவது கால் கோட் காதையில் 'செங்குட்டுவன் இமயம் செல்லப் போதரும் அமயம் [அடி 54–57] "நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி, உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி, மறஞ்சேர் வஞ்சி மாலையொடு புனைந்து, இறைஞ்சாச் சென்னி யிறைஞ்சிவலங் கொண்டு" எனவும்; [அடி 62–67] "ஆடக மாடத் தறிதுயி லமர்ந்தோன், சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத், தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுளை, வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின், ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத், தாங்கின னாகி" எனவும்; [செங்குட்டுவனை நோக்கி இமயத்தினின்றும் போந்த முனிவர்கள் உரைத்ததாக [அடி 97–98] "செஞ்சடை வானவன் அருளினில் விளங்க, வஞ்சித் தோன்றிய வானவ கேளாய்" எனவும்; வரந்தரு காதையில் மாடலன் உரைத்ததாக [அடி 141–142] "ஆனே றூர்ந்தோ னருளினில் தோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவ னாதலின்" எனவும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் உரைப்பது ஈண்டு நினைக்கப்பெறும். சேர நாட்டு வஞ்சிநகர் ஆண்ட நெடுஞ் சேரலாதன் மக்கள் இருவருள் மூத்தவன் சேரன் செங்குட்டுவன்; இளையவர் இளங்கோ. சேரன் செங்குட்டுவன் அரசியலை யேற்க, இளங்கோ துறவு பூண்டார். துறவு பூண்டார்க்கு அடிகள் எனப் பட்டம் புணர்ப்பது பண்டைக் கால மரபு. அடிகள் என்பது சைனத் துறவிகளையே உணர்த்தும் என்பது பிழை.

* சேரநாட்டு அரசியல் சகோதரியின் மைந்தர்க்கே உரிமையெனவும், அந்நெறிப்படி செங்கோற் பொறையனது உடன் பிறந்தாள் புதல்வர் சேரமான் பெருமாளாகலின் அரசியலை யேற்குமாறு குடிகள் அவரை வேண்டினர் என்பர்.

வேண்டினர். சிவத்தின் திருவுளச் சம்மதத்தை அறிந்த சேரர் பிரானும் பரமன் திருவருளால் யாரும் யாவும் கழறியதை அறியும் ஆற்றல்பெற்று, நன்னுளொன்றில் முடிசூடி, அமலனை யிறைஞ்சி, அரசர் குலமரபின் வண்ணம் பரிவாரம் புடை சூழ்ந்துவர யானை மேல் நகர்வலம் வருவாராயினர்.

அதற்குமுன் பெய்த மழையால் சுமந்த உவர்ப்பொதி கரைந்து உலர்ந்து உடலெலாம் வெளுத்துவரும் வண்ணுன் ஒருவனை நகர்வலம் வரும்† பெருமாள் நோக்கினர். முழுநீறு பூசிய முனிவர் போலும் இவர் என எண்ணி யானையினின்றும் இழிந்து ஓடிவந்து அவனைப் பணிந்தனர். அரசர் பெருமான் தன்னை வணங்கக் கண்டு அஞ்சிய அவன்; என்னை என்னென்று பெரும! எண்ணினீர்; அடியேன் அடிவண்ணுன் அடிவண்ணுன் என அலறினுன். நிகழ்ச்சி யறிந்த பெருமாள், குற்றமில்லை, ஐய! திருநீற்று வேடத்தை நினைவுக்குக் கொணர்ந்தீர்! சென்மின் என அவனுக்கு விடையளித்து அனுப்பினர். யான் எனதென்னும் செருக்கற்ற மன்னர் மனநிலை யறிந்து மந்திரிகள் மகிழ் வெய்தினர். நகர் வலத்திற்குப் பின்னர் அனைவரும் போற்ற அரசர்பிரான் அரியணையேறினர். உயிர்களின் கருத்தறியும் திறத்தை சிவத்தின் திருவருளால் உணர்ந்திருந்த மன்னர் ஆட்சியில் அறநெறி நிகழ்ந்தது.

அரச குலத்தில் அவதரித்து வளர்ந்து வாழ்ந்து பேரரசராய்த் திகழ்கின்ற சேரமான் பெருமாள், அரசபோகத்திற் சிந்தனை சிறிதுமின்றி நாதாந்தம் கண்ட சிவயோக நெறி நிற்கும் அருந்தவத்தராய், வழிபாட்டின் இறுதியில் சிவபிரான் திருவடிச்‡ சிலம் பொலியை நாடோறும் செவியிற் கேட்டு மகிழ்வாராயினர்.

---

† அரச மக்களுக்குப் பெருமாள் பட்டமும் தொன்மை வழக்குப் போலும்.

‡ பத்து வகை ஒலி சிவயோகிகட்குக் கேட்கும் என்பதை, " மணிகடல் யானை வளர்குழல் மேகம், மணிவண்டு தும்பி' வீளபே

மதுரையில் வறுமையுற்ற இசைவல்ல அடியாரான பாணபத்திரர் என்பவர் ஒருவர், அப்பதியில் எழுந்தருளிய சோமசுந்தரர் எனும் திருநாமம் எய்திய சிவபிரான் சேரமான் பெருமாளிடம் கொடுக்குமாறு எழுதிக் கொடுத்த திருமுகம் பெற்று சேர நாட்டை அடைந்தார். பாணபத்திரர் வருகையைச் சொர்ப்பனத்தில் சிவபிரானல் அறிந்த சேரமான் பெருமாள், உடனே விழித்து எழுந்து மகிழ்வெய்தி, பாணபத்திரரை எதிர்கொண்டு வந்து பணிந்து யானைமேல் ஏற்றி நகர்வலஞ் செய்வித்து, பின் தம்அரியணை யமர்த்தி உபசரித்து அவர் கொணர்ந்த திருமுகத்தை வாங்கி, உச்சிமேற் கொண்டு போற்றினர்.

“ மதிமலி புரிசை மாடக் கூடல்
பதியிசை நிலவும் பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யாம் மொழிதரு மாற்றம் ;
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க ;
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பால் அன்பன் ; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன் ;
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே ”

எனச் சிவபிரான் தம் திருக்கரத்தால் வரைந்திருந்த பாசுரத்தைப் படித்தனர். தன் வசங் கெட்டுப் பரவசப்பட்டு பாணபத்திரரைப் பணிந்து, தம் அரசையே ஏற்குமாறு வேண்டினர். எமக்கு அரசியலை ஏற்க பரமன் உத்தரவில்லை யென மறுத்த பாணபத்

---

ரிகையாழ், தணிந்தெழு நாதங்க டாமிவை பத்தும், பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே” எனவரும் திருமந்திரத்தாலும் அறிகின்றேம்.

திரர்தம் வறுமை நீங்கப் பொன்னையும் மணியையும் வாரி யானைமேல் ஏற்றி வழிக்கூட்டி அனுப்பினர் மன்னர் பிரான்.

பின் ஒருநாள் சேரமான் பெருமாள் சிவ வழிபாட்டில் இருக்கின்றார்; இறுதிவரை சிலம்பொலி கேட்கவில்லை; வழிபாட்டில் ஏதோ தவறு நேர்ந்துளது என எண்ணினார். தவறுடையார் உயிர் வாழ்வது பிழையென உன்னி உயிர்மாய்க்க உடைவாளை உருவினர். உடனே அவ் ஒலிகேட்டது; சுந்தரர் தமிழ்ப்பதிக இனிமையில் வயப்பட்டேம்; ஒலிகேட்பிக்க அதனாற்றான் காலம் தாழ்த்தது எனச் சிலம்பொலியுடன் அசரீரியும் எழுந்தது. அதுகேட்ட பெருமாள், அடியர் மாட்டு அமலன் எளிமையனுதல் இவ்வாறே என இறும்பூதெய்தினர். பதிகம்பாடி இறைவனை வயப்படுத்தும் சுந்தர மூர்த்திகளைக் காணும் ஆர்வம் நெஞ்சகத்து மிக, உடனே புறப்பட்டார்.

வழியில் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டே சிதம்பரம் அடைந்தார். பொன்னம்பலத்தில் பொன்னார் மேனியன் திருக்கூத்தைக் கண்டார்; மனமகிழ்வுற்றார்; அம்மகிழ்வு பொன் வண்ணத் தந்தாதியாக முகிழ்த்தது. பாலிற்படு நெய்யென விளங்கிய பரமன் சிலம்பொலி கேட்டது. பரவசப் பட்டாராய் பின் ஆங்கிருந்து புறப்பட்டார்.

திருவாரூர் அடைந்தார். இவர் வருகையை அறிந்த சுந்தர மூர்த்திகள் எதிர்கொண்டு வந்தார். கண்டதும் கொண்ட களிப்பால் ஒருவரை யொருவர் வணங்கினர்; தழுவினர்: இன்ப வெள்ளத்துள் மூழ்கிக் கரையேற இயலாராய், என்புருக உயிரொன்றி உடலும் ஒன்றே என ஆனார். இதனால் சுந்தரர்க்குச் சேரமான் தோழர் எனும் திருப்பெய ரொன்று திகழ்ந்தது. சுந்தரர் சேரமான் பெருமாளைத் தியாகேசர் திருக்கோயிற்கு அழைத்துச் சென்றார். இருவரும் இறைவனை இறைஞ்சினர். ஊற்றெடுத்த மன்னர் பிரான் மனத்தன்பு மும்மணிக் கோவையாக மலர்ந்தது. அதன் பிறகு சுந்தரர் சேரமான் பெருமாளை பரவையார் மாளிகைக்கு அழைத்துச்

சென்றார். அம்மையார் உபசரிப்புக்கு அளவில்லை. சிலநாள் அங்குத் தங்கினார். அதன்பின் இருவரும் பலதலங்களை யடைந்து பரமனைத் தரிசித்து, சோழ பாண்டியரால் உபசரிக்கப்பெற்றுத் திரும்பித் திருவாரூரை யடைந்து சிலநாள் தங்கினார்.

சேர நாட்டிற்கு எழுந்தருள வேண்டுமென மன்னர் பிரான் நாடோறும் செய்து வந்த வேண்டுதலுக்கு சுந்தரர் ஒருநாள் ஒருப்பட்டுப் புறப்பட, இருவரும் கொடுங்கோளூர் சேர்ந்து திரு வஞ்சைக்களத் தப்பனை வணங்கிப் பின் மாளிகை யடைந்தனர். பலநாள் சேரமான் பெருமாள் நாயனார் திருமாளிகையில் விருந்தினராக இருந்த சுந்தரர், தியாகேசன் நினைவெழ மன்னரிடம் பிரியா விடை பெற்றுத் திரும்பிச்சென்றார். கருவூல நிதிகளை ஏராளமாக யானைகளின்மேல் ஏற்றி சுந்தரர்க்கு முன் போக்கினர் மன்னர். திருவாரூர் சென்று சிலநாள் தங்கிய சுந்தரர் மீட்டும் தம் தோழரான அரசர் நினைவெழக் கொடுங்கோளூர் அடைந்து மன்னர் மாளிகையில் பல நாள் தங்கினார்.

ஒருநாள் சேரமான் பெருமாள் நீராடிக் கொண்டே இருக்கிறார். அவ்வமயம் சுந்தரர் திருக்கோயிலுக்குச் சென்று அஞ்சைக்களத் தப்பரை உருகிய உள்ளத்தோடு போற்றினார். அவர் கண்ணெதிரே சிவ கணங்கள் காட்சி யளித்தனர். கொணர்ந்த வெள்ளை யானைமேல் சுந்தரரை யேற்றித் திருக்கயிலை நோக்கி அழைத்துச் சென்றனர். நம் தோழரான சேரமான் பெருமானை விட்டு வந்தோமே என்று வழியில் சுந்தரர் எண்ணினார். அவர் தம்மை எண்ணுவதை சேரமான் பெருமாள் உணர்ந்து, உடனே விரைந்து போந்து தம் குதிரையின் செவியில் ஐந்தெழுத்தை ஓதி யதன்மீது ஏறினார். உணர்ச்சியுற்ற அப்பரி விண்ணில் விரைந்து சென்று சுந்தரரை யணுகி வலம்வந்து அவர்க்குமுன் சென்றது. இஃதுணர்ந்த மன்னரது மந்திரிகள் முதலினோர், உடைவாளால் தம் தம்மை மாய்த்துக் கொண்டு வீரயாக்கை பெற்று மன்னரைச் சூழ்ந்து தொடர்ந்தனர். யாவரும் திருக்கயிலை யெய்தினர்.

திருக்கயிலாயத் தென்வாயிலை யடைந்ததும், சுந்தரரும், மன்னவரும் தத்தம் ஊர்தியினின்றும் இறங்கி வாயில் பல கடந்து திருவணுக்கன் திருவாயிலை யடைந்தனர். சுந்தரர்மட்டும் உள் நுழைந்து சிவபிரான் திருமுன் வந்து பணிந்து, பெரும! சேரமான் பெருமாள் திருவணுக்கன் திருவாயிலில் நின் தரிசனத்திற்குக் காத்துளார் என்றார். பெருமான் உத்தரவால் சேரமான் பெருமாளும் உள் நுழைந்தார். திருமுன் வந்து வணங்கினார். சிவபிரான் புன்னகை பூத்து, யாம் அழையாமுன் நீ வந்ததென்? என வினவினான். பரம! ஆரூரர் பூங்கழல் போற்றி யானைக்கு முன்வந்தேன். இங்குப் போந்தபின் உமது கருணை வெள்ளம் அடியேனை யீர்த்துத் திருமுன் இருத்தியது என உரைத்து, திருவுலா ஒன்று பாடி யுளேன்! அதனைத் திருச்செவி சாய்த்தருள்க என வேண்டினர். இறைவன் உரைத்தியென அருளலும், சேரமான் பெருமாள் அமலன் திருமுன் உலாவை அரங்கேற்றினார். கேட்ட பெருமான் மகிழ்ந்து சேரமான் பெருமாளையும் சுந்தரரையும் கணநாதர் தலைவராய்த் தங்க அருள் புரிந்தான். சேரமான் பெருமாள் நாயனார் அரங்கேற்றிய திருக்கைலாய ஞானவுலாவை, திருக்கயிலையில் அன்று கேட்டிருந்த மாசாத்தா என்பவர், திருப்பிடவூரில் அதை வெளிப்படுத்தி நிலைபெற அருளினார்.

சிவமயம்

# உரைச் சிறப்புப்பாயிரம்

சைவ சித்தாந்த மகா சமாஜ போஷகரிலொருவரும்
செம்பியம் கிராம மிராசுதாரரும்
ஆனரரி மாஜிஸ்டிரேட்டுமாகிய
பண்டிதரத்தினம் குகஸ்ரீ
பு புழலை திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
இயற்றிய

## ஆசிரிய விருத்தம்

1. முருக்கிதழ் நிறத்துச் சீரின் முகவடிக் கவுரி யோடு
பெருக்களி யொருங்கு பூத்துப் பிறங்கவீற் றிருக்கும் பெம்மான்
திருக்கயி லாய ஞானப் புறவுலாத் திகழ்விற் பாடி
யுருக்குளச் சேரமானி னுயர்புக ழுரைக்க வாமோ.

2. தகைமைசா லந்நூற் கிட்ட சகலமுன் னுரைக டம்மில்
மிகைபடக் கூறிப் போந்த வேறுபா டனைத்தும் போக்கி
வகைபடு மான்மா யாவும் மருவிய தலைவி யாக
நகைமுகத் தலைமைத் தெய்வந் திருவுலா நயந்த தென்ன

3. விளக்கமாப் பொருத்த மிக்க விரிவுரை விழைந்த ளித்தான்
அளக்கருங் கலைக ளான வாழ்கடற் கெல்லை கண்டான்
உளக்கம லத்தி லோங்கு முருகனின் புகழை யோதித்
துளக்கமி லடியர் போற்றித் துலங்கிடு மேற்ற மிக்கான்

4. முன்னவர் முறையாய்க் கற்ற முதிர்சுவை பருகு மேன்மை
யின்னன பலவு மெய்தும் இரத்தின சபாப திப்பேர்
நன்னலம் வயங்கு நண்பன் நலங்கிளர் வாய்மை பூண்ட
பொன்னமர் நற்பிரசங்க பூடணப் பட்டம் பெற்றோன்.

5. அன்னவர்க் குவந்த தோழ னழகிய திருவேற் காட்டுத்
தொன்னகர்த் தேவத் தானத் தொடர்புறுந் தரும கர்த்தன்
இன்னநந் நூலை யச்சிட் டெளிதினின் யார்க்குந் தந்தான்
மன்னரும் புகழ வந்த மகிழ்முரு கேச னம்மா.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# மதிப்புரை

வரகவி—திரு. அ. சுப்ரமண்ய பாரதி எழுதியது

என்னிடம் உழுவலன்புடைய எனது நண்பர் பிரசங்க பூஷணம் பு. பா. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் அன்பு கூர்ந்தனுப்பிய, திருக்கையிலாய ஞானவுலா என்னும் அரியதோர் நூலின் மூலமும் அதற்கு அவர் இயற்றிய விருத்தி யுரையும் அடங்கிய புத்தகத்தை நான் பெருமகிழ்ச்சியுடன் படித்துப்பார்த்தேன்.

மூலம், சீர்பிரித்து எழுத்துப்பிழை சிறிதும் ஏற்படாமல் பரிசோதிக்கப்பட்டிருக்கிறது. உரை விருத்தியுரைக்கு உரிய அமைப்பினை மேற்கொண்டதாய்ப் பெரியார் கருத்தையும் அகப்பொருளிலக்கணத்தின் நுட்பமான பொருளையும் விளக்குவதாய், மயக்கத்திற் கிடமில்லாததாய் மாணவரும் எளிதில் உணரத்தக்கதாய் அமைந்திருக்கின்றது. இந்நூல் தெய்வத்தன்மை வாய்ந்த சேரமான் பெருமாள் நாயனார் அருளியதாதலின் இதனைப் பக்தியுடன் கவனித்தல் கடமையென்பதை உரையாசிரியர் தம் மனத்திற்கொண்டு உரை வரைந்திருப்பது ஆங்காங்குப் புலப்படுகின்றது. ஆசிரியர் இத்தகைய முறையில் இன்னும் பல நூல்களுக்கு உரையெழுதுவதற்கு ஏற்ற உடல் நலத்தையும் அறிவையும் ஆற்றலையும் ஊக்கத்தையுமடைய, எல்லாம்வல்ல இறைவனாகிய முருகப்பெருமான் திருவருள் பெருகுமாறு அவனடி மலர் முடி சூடுகின்றேன்.

திருச்சிற்றம்பலம்

# சேரமான் பெருமாணாயனார்

அருளிச்செய்த

# திருக்கைலாய ஞானவுலா

---

திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமா லுறவழலாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான்—முறைமையால்
ஆழாதே யாழ்ந்தா னகலா தகலியான்
ஊழா லுயராதே யோங்கினான்—சூழொளிநூல்
ஓதா துணர்ந்தா னுணுகாது நண்ணியான்
யாது மணுகா தணுகியா—னாதி
அரியாகிக் காப்பா னயனாய்ப் படைப்பான்
அரனா யழிப்பவனுந் தானே—பரனாய
தேவ ரறியாத தோற்றத்தான் றேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தா—னேவாதே
எவ்வுருவில் யாரொருவ ருள்குவா ருள்ளத்துள்
அவ்வுருவாய்த்தோன்றியருள்கொடுப்பா-னெவ்வுருவுந்
தானேயாய் நின்றளிப்பான் றன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய வெம்பெருமான்—ஆனாத
சீரார் சிவலோகந் தன்னுட் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயி லுள்ளிருப்ப

(பதவுரை). திருமாலும்-நாரணனும், நான்முகனும்-பிரமனும், தேர்ந்து உணராது-(தாம் யார் என்பதை) ஆராய்ந்து அறியாது, அன்று-முன்னொரு நாள், அரு மால் உற-(தாம் தாம் பிரமம் என நீங்குதற்கு) அரிய மயக்கத்தை யடைய, அழல் ஆய் நின்ற பெருமான்-(அவர்கள் மயக்கம் நீங்கி மூலப்பரம்பொருள் பரமசிவமே என்று தெளியும் வண்ணம், அவர்கள் எதிரில்) அக்கினி சொரூபமாய் நின்ற சிவபெருமான்;

பிறவாதே தோன்றினன்-(கருவாய்ப்பட்டுப்) பிறவாதே (தன் இச்சா மாத்திரத்தால் நினைத்த நினைத்த வடிவுடன்) தோன்றியவன், காணாதே காண்பான்-(கண்களின் துணைகொண்டு எவற்றையும்) காண்பதின்றியே (எல்லாம் அறியும் பேரறிவால்) காண்பவன்; துறவாதே யாக்கை துறந்தான்-(தனது நினைப்பின்வழி நேர்ந்த) திருமேனியை (காலச்சக்கரச் சுழற்சியில் அகப்படுத்தி) நீக்காது (தானே) மறைத்துக் கொண்டவன்; முறைமையால் ஆழாதே ஆழ்ந்தான்-கிரமக்கிரமமாக அழுந்தாமலேயே (எதனிலும்) அழுந்தியவன்; அகலாது அகலியான்-(எப்பொருளினும்) அகன்றிருத்தல் இன்றியே அகன்றிருப்பவன்; ஊழால் உயராதே ஓங்கினன்-முறையாக உயர்தல் இன்றியே உயர்ந்திருப்பவன்; சூழ் ஒளிநூல் ஓதாது உணர்ந்தான்-பேரொளி சூழ்ந்த ஞான நூற்களை (எவரிடமும்) கற்றலின்றியே (தன் முற்றறிவால் அந்நூற்களின் பொருண்மையை) உணர்ந்திருப்பவன்; நுணுகாது நுண்ணியான்—நுண்ணியனாகாமலேயே அணுவுக்கு அணுவாக இருப்பவன்; யாதும் அணுகாது அணுகியான்-எப்பொருளும் (தன்னை) அணுகப் பெறாமலேயே அணுகப் பெற்றிருப்பவன்;

ஆதி அரி ஆகி காப்பான்—முதன்மை பொருந்திய திருமாலாக இருந்து காப்பவனும், அயன் ஆய் படைப்பான்—பிரமனாக இருந்து (உலகங்களைத்) தோற்றுவிப்பவனும், அரன் ஆய் அழிப்பவனும்

தானே—உருத்திரனுகி (தோற்றுவித்துக் காத்த உலகங்களை) ஒடுக்கிக் கொள்பவனும் தானே ஆகி இருப்பவன் ;

பரன் ஆய தேவர் அறியாத தோற்றத்தான்—மேலான விண்ணவர்களும் காண்டற்கு இயலாத தோற்றத்தை யுடையவன் ; தேவரை தான் மேவிய ஆறே விதித்து அமைத்தான்—(அந்த) தேவர்களைத் தான் விரும்பிய வண்ணமே படைத்து (அவரவர்களுக்கு உரிய சுவர்க்காதி பதவிகளைத் தந்து, உரிய உரிய தொழில்களையும் கற்பித்து, அத்தொழில்களை மேற்கொண்டு ஒழுகுமாறு) பணித்து வைத்தவன் ;

யார் ஒருவர் எவ் உருவில் ஓவாது உள்குவார்—எவ்வெவர் எந்த எந்த வடிவில் (தன்னை) இடைவிடாது தியானித்தாலும், உள்ளத்துள் அவ் உரு ஆய் தோன்றி அருள் கொடுப்பான்—(தியானிக்கும் அவர்களது) மனத்துள் (நினைத்த நினைத்த வடிவாகவே) வெளிப்பட்டுத் திருவருள் பாலிப்பவன் ; எவ் உருவும் தானே ஆய் நின்று அளிப்பான்—(அன்பர்கள் எண்ணும்) எல்லா வடிவங்களும் தானே ஆகி நின்று (புறத்திலும்) காட்சி தருபவன் ; தன்னில் பிறிது உருவம் ஏனோர்க்கும் காண்பு அரிய எம்பெருமான்—தன்னைக் காட்டிலும் வேறு ஒரு வடிவம் எத்தகையோர்க்கும் காண்பதற்கு இல்லாதபடி விளங்கும் எமது இறைவன் ;

ஆனாத சீர் ஆர் சிவலோகம் தன்னில் சிவபுரத்தில்—நீங்காத சிறப்புப் பொருந்திய சிவலோகத்து உள்ள சிவபுரத்தில், ஏர் ஆர் திருக்கோயில் உள் இருப்ப—அழகு அமைந்த திருக்கோயிலின் உள்ளே எழுந்தருளி இருக்க, (என்றவாறு).

சொரூபம் தடத்தம் என இறையிலக்கணத்தை இரு வகைப் படுத்திச் சித்தாந்த சாத்திரம் கூறும். குணம் குறி பேர் செயல் ஆதிய ஒன்றும் இன்றிச் சுவானுபூதியில் விளங்கும் ஒரு நிறைவைச் சொரூபம் எனவும், நீரின் தண்மை

நீரைவிட்டு நீங்காமை போன்றும் அழலின் வெம்மை அழலை விட்டு அகலாமை போன்றும் தன் இச்சா மாத்திரையால் உயிர்கள் எண்ணிய எண்ணிய வண்ணம் தனது அருளையே திருமேனியாகத் தாங்கி அவ் ஒரு நிறைவு வெளிப்படும் நிலையைத் தடத்தம் எனவும் கூறுப. ஒரு நிறைவு என்பது ஏக பூரணம். முப்பத்தாறு தத்துவங்களாம் அரியணைமேல் அமர்ந்திருப்பவன் தடத்தலக்கணத்து அமலன்; அத் தத்துவக் கூட்டங்களையும் கடந்த பான்மையில் மிகமிக நுண் பொருள் ஞானகாயப் பேரொளிப் பிழம்பாய் விளங்குவது ஒரு நிறைவு எனப்பெறும் அச் சொரூபலக்கண சிவம். தடத்தத் திருமேனியின் உயிரும் உணர்வுமாக இருப்பது சொரூபலக்கண சிவமென்க. எனவே, சொரூபலக்கணம் வித்தாக அவ்வித்திலிருந்து முளைத்த விருட்சம் தடத்தத் திருமேனி யென்றபடி.

"சிவன்அரு உருவும் அல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்
பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்
தவமுதல் யோகபோகம் தரிப்பவன் அல்லன் தானே
இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினனே"

எனும் சிவஞான சித்தியாரால் சொரூபலக்கணத்தை அறிகின்றேம். எவரும் எவையும் விகாரம் அடைதற்குக் காரணம் சுதந்தரம் இன்மை; ஏகதேசம் ஆதற்குக் காரணம் சிற்றுணர்வும் சிறு செயல்களும்; பந்தப்படுதற்குக் காரணம் மேற்கொண்ட விருப்பும் வெறுப்புமாம். தோற்றக் கேடுகளில்லாத சொரூப சிவத்திற்கு அத்துன்பங்கள் இன்மையின், உயிர்களைத் தொழிற்படுத்தி உய்யக்கொள்ள தான் நினைந்ததொரு திருமேனியைத் தனதாகக் கொண்டருளும் அமயம் நேர்கின்றது. முற்குறித்த குற்றங்கள் இல்லாத

முதல்வன் உருவம் இன்றியே எத்தொழிலும் செயவல்லான் அன்றே! உருவம் கோடல் எற்றுக்கோ எனின், உடம்பை இயக்க உயிர் வேண்டுதல் போல் உயிரை இயக்க வேறு ஒரு உருவம் வேண்டாமைபோல, முதல்வனுக்குத் தன் உருவமான உலகை இயக்க வேறு ஒரு உருவம் வேண்டப்படுவதன்று எனினும், இருமலமுடைய பிரளயாகலர்க்கு நேர்நின்றும், மும்மலமுடைய சகலர்க்குப் படர்க்கையில் நின்றும் உணர்த்தினலன்றி, அவைகள் தன்னையும் அறியா தலைவனையும் உணராவாகலின், உயிர்கள் பொருள் இயல்பை அறிந்து வீடு பெற வேதாகமங்களை அருளற் பொருட்டும், அவ்வேதாகமங்களைக் குருபரம்பரையின்கண் நிறுத்தற் பொருட்டும் திருமேனி கொள்ள நேர்ந்தது என்பர் அறவோர்.

மூலசிவம் திருமேனி கொண்டதெனின், அம்மேனிக்கு உரிய தொழில் கரணம் புவனம் போகம் முதலியனவும் உளவாமே; சுட்டி உணரப்பெறும் அதனை வாக்கு மனம் கடந்த சொரூபசிவம் என்றற்கும் பழுதாமே எனின், அமலன் அருளையே வடிவாகக் கொள்கின்றுனகலின், உயிர்கட்கு உணர்வளிக்கும் அவனது தொழில் குணம் கரணமாதிய எல்லாம் அருள்வடிவமே; கைகால் முதலிய உறுப்புக்களும் அருள்வடிவே; துணையுறுப்புக்களாகிய புவனபோகங்களும் அருள்வடிவே; இவ்வருள் வடிவெலாம் உயிர்கள் பொருட்டன்றித் தன் பொருட்டு அன்மையின் இவைபற்றி சிந்தனைக்கு எட்டுபவன் போலத் தோன்றினும் வாக்கு மனத்திற் கெட்டா வள்ளல் அவன் என வேண்டுவர் முமூட்சுக்கள்.

“ படைப்பாதி தொழிலும்; பத்தர்க்கு அருளும்பாவனையும்; நூலும்;
இடப்பாக மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானும் அதுவும் ; முத்தி அளித்திடு யோகும் ; பாசம்
துடைப்பானும் தொழிலும் மேனி தொடக்கர்னேல் சொல்
[லோணுதே ”

எனும் சிவஞான சித்தியாரைச் சிறிது ஊன்றி நோக்கினும் சொரூப சிவம் தடத்த மேனி கொள்வதன் பயன் வெள்ளிடை மலையென விளங்கலுறும்.

சொரூபலக்கணத்தில் எல்லாச் சமயத்தவரும் இணங்குவர் ; தடத்தலக்கணத்திற்றான் ‘எங்தெய்வம் எங்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கு’ இட்டுப் பிணங்குகின்றனர்.

வேதத்தின் முடிவான உபநிஷத்துக்கள் சொரூப சிவத்தைப்பெரிது போற்றும். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பாதங்கள் நான்கு வகுத்து, சொரூபம் தடத்தம் எனும் அவ்விரண்டின் ஓத இயலா இலக்கணங்களை ஒரு வகைப்படுத்திச் சிவாகமங்கள் விளக்குகின்றனவாகலின், “வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன்” “ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிக சமயம் அழகிது” என மேலோர் சைவசமயத்தைப் பாராட்டுகின்றனர். சொல்லிக் காட்ட இயலாத சொரூப தடத்த நுண்மை புலனுதற்கு நல் ஊழும் வேண்டும் என்பது அநுபவிகளின் உட்கோள்.

“அறைந்திடு தூலம் சூக்குமம் பரம் என்று அன்னவன் தனக்கு மூன்று உருவம் ; சிறந்திடு தூலம் நம்மையே முதலாம் தேவர் நன்கு உணர்வர் ; சூக்குமந்தான், நிறைந்திடும் யோகம் வல்லவர் உணர்வர்; நிகழ்த்திடற்கு அரியதாம் பரம்தான், திறம்பலில் சைவ ஞானம் மன்னினரால் தீதற உணர்ந்திடப்படுமால் ”

எனக் கூறும் வாயு சங்கிதை, ஸ்தூலம் எனப்பெறும் உருவத் திருமேனி நம்மனோர் முதலாகத் தேவர்கள் வரை நன்கு உணரப்பெறுவது எனவும், சூக்குமம் எனப்பெறும் அருவத்திருமேனி யோகிகள் உணரப் பெறுவது எனவும், பரம் எனப்பெறும் அருவுருவத் திருமேனி சிவஞானம் கைகூடினோர் உணரப்பெறுவது எனவும் தடத்தலக்கணப் பெருமாற்கு உள்ள முத்திற மேனியைப் பாராட்டுகின்றது.

அருட்பெருக்கால் உலகை உய்விக்கும் பரம்பொருளின் அச்சொரூப தடத்தலக்கணங்களை மிக நயமுற ஓதுகின்றன முதல் எட்டுக் கண்ணிகளும்; ஒன்பதாங் கண்ணி அப்பர சிவம் வீற்றிருக்கும் தானத்தைப் பகர்கின்றது.

கருவாய்ப்பட்டுப் பிறத்தல் இல்லாதவன்; உருவத்திரு மேனியை மட்டும் கொண்டுளன்: அத்திருமேனி, தனது அருள்திறத்தால் நினைந்த ஆங்கே கொள்வதாம் என்பார் 'பிறவாதே தோன்றினன்' என்றார்; எனவே, அவன் சுயம்பு மூர்த்தி யென்றபடி: 'பிறவாதும் இறவாதும் பெருகினனை' எனத்தேவாரமும், "தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி" எனத்திருவாசகமும், "தாயுதர பந்தனத்தைத் தள்ளும் தனிமுதல்" எனத் தேவையுலாவும், "தாயுதரங் காணுத் தருமத் திருவுடம்பு" எனத் திருப்பூவண நாதருலாவும், "ஒரு வயிற்றும் வாரா உடம்புடையான் வந்தான்" என வள்ளலாரும் அருளும் தெய்வமொழிகள் ஈண்டு நினைக்கப்பெறும்.

கண்ணிந்திரியம் முதலியவற்றின் துணையால் பொருள்களைக்காணும் உயிர்கள்போலின்றி எல்லாம் அறியும் தன் பேரறிவால் எவற்றையும் அறிபவன் என்பார் "காணுதே

காண்பான்' என்றார்; "கடந்து நின்றான் எங்கும் கண்டு நின்றானே" என்பது திருமந்திரம். "முப்பத்தாறு தத்துவங்கள் தோறும் நின்று அறிவிக்கையாலும், அளவிறந்த கண்களுக்குள்ள செய்தியெலாம் அங்கங்கே போய் அறியாமல் ஏகமாய் நின்று அறிகிற சூரியனைப்போல, முற்றும் உணர்வன்" என்பது வள்ளலார் சாத்திரம்.

கன்மத்தால் அன்றி அருள்தொடர்பால் உயிர்களின் கருமேனி கழிக்கக் கருணையின் வடிவங் கொண்டு நிற்கும் இறைவன், நினைத்த அமயத்து அத்தடத்த நிலையிற் கரந்து சொரூப சிவமாக நிற்பது கருதித் 'துறவாதே யாக்கை துறந்தான்' என்றார்.

யாண்டும் நிறைந்து நிற்கும் நிலையால் கிரமக்கிரமமாக எதனிலும் ஆழ்தலின்றியே என்றும் எவ்விடத்தும் ஆழ்ந்துள்ளவன் என்பார் 'ஆழாதே ஆழ்ந்தான்' என்றார்; "பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கும் அப்பால்" என்பது திருவாசகம்.

சொரூப நிலையில் உயிர்களை அகலாதும் தடத்த நிலையில் அகன்றும் உள்ளவன் என்பார் 'அகலாதகலியான்' என்றார். முறை முறையாக உயர்தல் இன்றியே உயர்ந்திருப்பவன் என்பார் 'ஊழால் உயராதே ஓங்கினான்' என்றார். ஊழ்-முறைமை; "சோதி மணிமுடி சொல்லில் சொல்லிறந்து நின்ற தொன்மை" என்பது தமிழ்மறை. அறியாமை இருளை அகற்றுவதாகலின் வேதாகமங்களை 'ஒளிசூழ் நூல்' என்றார். அவைகளை ஓதி உணர்வது உயிர்களுக்கு இயற்கை; தன் முற்றறிவால் ஓதாது உணரும் திறம் இறைவனுக்கு உடைமை என்பார் 'ஓதாதுணர்ந்தான்' என்றார்.

எண்ணிறந்த அண்டப் பகுதிகள் தன் திருமுன் அணுமாத்திரையாய்ச் சிறியவாம்படிப் பெரியோனுய அவன், அவ்வண்டங்களின் எதிரில் அணுமாத்திரையாய்ச் சிறியவனுகவும் நிற்பான் என்பார் 'நுணுகாது நுண்ணியான்' என்றார். எனவே, தேசகால பரிச்சேதமின்றி ஒரே தன்மையாய் மிளிரும் ஏகபூரணப் பொருளாகலின், சென்று சென்று தேய்ந்து தேய்ந்து போம் பொருளாகாது பெரிதினும் பெரிதாய பெருமான் அதி சூக்குமப் பொருளுமாக உளன் என்க: "அணுவுள் அவனும் அவனுள் அணுவும் கணுவற நின்ற கலப்பு" என்பர் திருமூலர்.

உயிர்கள் எவ்வெவ் இடங்களில் எவ்வெக் காலத்தில் எவ்வெந்த யோனிவாய்ப்பட்டுப் பிறக்கின்றனவோ அவ்வவ் விடங்களில் அவ்வக்காலத்தில் அவ்வந்த யோனிகளில் தானும் பிரிதலின்றி, அவ்வவ் உயிர்களுள் மறைந்து பெத்த நிலையில் அவைகளுக்குப் பின் நின்றும், முத்தி நிலையில் அவ்வுயிர்களைத் தம்முள் அடக்கி அவைகளுக்கு முன் நின்றும் அவைகளை நீங்காது காத்து நிற்கும் நிலைமையன் என்பார் 'யாதும் அணுகாதணுகியான்' என்றார்; "பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளான், இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும், துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால், மறப்பிலி மாயா விருத்தமுமாமே" என்பது பத்தாந் திருமுறை.

படைப்பானுங் காப்பானும் அழிப்பானும் இப்பெருமானே என்பார் 'ஆதி அரி ஆகிக் காப்பான் அயனய்ப் படைப்பான் அரனய் அழிப்பானும் தானே' என்றார். சிவபிரான் தனது அருள் நிலையால் பிரம விஷ்ணுக்களைத் தோற்றுவித்து, பிரமனிடத்திற் பொருந்தி உலகங்களைப்

படைத்தும், விஷ்ணுவிடத்திற்பொருந்தி படைத்த உலகங்களைக் காத்தும் உரிய வினைப்போகங்களை உயிர்களுக்கு உண்பித்து, பின் பிறப்பு இறப்புத் துன்பங்களில் உழலும் அவைகள் சிலகாலம் துன்பம் நீங்கிப் பேரின்ப நிலையத்தில் திளைத்திருக்கத் திருவுளங்கொண்டு உருத்திரனாகி, உலகங்களுடன் படைத்தல் காத்தல் செய்வோரையும் அழித்து ஒடுக்கி, மீண்டும் படைத்தல் ஆதிய தொழில்புரி தலைவர்களைத் தோற்றுவித்துத் தான் ஏகனாயிருந்து ஆடல் புரிகின்றான் என்பது கந்தபுராணச் செய்தி. இதனால், பிரமன் படைப்பும் விஷ்ணுவின் காப்பும் உருத்திரன் அழிப்பும் சிவத்தின் ஆணையால் நிகழ்கின்றன எனும் சைவபுராணங்களின் வரலாறு வலியுறுத்தப்பெற்றது; "முன்னை ஒப்பாய் உள்ள மூவர்க்கு மூத்தவன், தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்" என்பது திருமந்திரம். மேலும் படைத்தலாதிய தலைவரைத் தோற்றுவித்தானும் அவனே; தோன்றிய அவர்தம் உள்ளிருந்து தொழிற்படுத்துவானும் அவனே ஆதலின் அம்மூவர்தம் உயிர்நாடியாய் விளங்குவோன் என்பதும் பெறப்பட்டது.

வாக்கிற்கும் மனத்திற்கும் எட்டாதவன்; நோக்கிற்கும் அரியவன்; நுண்மையினும் நுண்மையன் ஆகலின் 'தேவர் அறியாத தோற்றத்தான்' என்றார்.

சேதனா சேதனப் பிரபஞ்சத்தை இயக்குதற்குத் தன்னையன்றி தலைவர் வேறு இல்லையாகலின், தன் ஆணையின்கீழ் இயங்குதற்கு உரிய தேவர்களைத் தானே தோற்றுவித்தான் என்பார் 'தேவரைத்தான் மேவியவாறே விதித்தமைத்தான்' என்றார்.

வாக்குமனங் கடந்த தன்னை யார் யார் எவ்வெவ் வடிவில் வைத்து எண்ணுகின்றனரோ அவ்வவ் வடிவாகவே அவ்வவர் தம் மனத்துக்கண் தோன்றி அருள் செய்வான் என்பார் 'எவ் உருவில் யார் ஒருவர் உள்குவார் உள்ளத்துள் அவ்வுரு வாய்த்தோன்றி அருள் கொடுப்பான்' என்றார் ; "ஆருருவம் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்" என்பது அப்பர் அருண்மொழி. அடியவர் எண்ணும் எவ்வடிவும் தானே ஆகப் புறத்தினும் நின்று அருள்வான் என்பார் 'எவ்வுருவும் தானே ஆய் நின்று அளிப்பான்' என்றார்: "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்" என்பது சிவஞான சித்தியார்.

அவனையன்றி அருள்புரியும் தெய்வமும் இல்லை ; அவனையன்றி எப்பொருளும் எவ்வுயிரும் எவ்வுலகும் உய்வ தூஉம் இல்லை என்பார், 'தன்னிற் பிறிதுருவம் ஏனோர்க் கும் காண்பரிய எம்பெருமான்' என்று அமுதமன்ன அருள் வாக்கால் கேட்பவர்தம் கன்னெஞ்சமும் கரைந்துருக உண்மை நிலையை ஓதினார் ; "அவனை ஒழிய அமரரும் இல்லை, அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை, அவனன்றி மூவரால் ஆவதொன்றில்லை, அவனன்றி ஊர் புகும் ஆறு அறியேனே" "முன்னை ஒப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன், தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன், என்னால் தொழப்படும் எம் இறை நந்தி, மற்று அவன் தன் னால் தொழப்படுவார் இல்லைதானே" "தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும், தானே சுடுமங்கி ஞாயிறும் திங் களும், தானே மழைபொழியத் தையலுமாய் நிற்கும்,

தானே தடவரை தடங்கடலாகுமே" எனும் தமிழ் மறைகள் ஈண்டு நினைவுக்கு வருகிறது.

சொரூபதடத்த இலக்கணம் கூறிய எட்டுக் கண்ணிகளும் உலகினைக்கடந்த வடிவன் எனப் பொருள்படும் விச்சுவாதிகன் என்னும் திருநாமத்தையும், உலகம் தோன்றி ஒடுங்கும் வடிவுடையான் எனப் பொருள்படும் விச்சுவகாரணன் எனும் திருநாமத்தையும், உலகிற்கு உயிராயிருப்பவன் எனப்பொருள்படும் விச்சுவத்திற்கு அந்தர்யாமி எனும் திருநாமத்தையும், உலகமாக நின்றவன் எனப் பொருள்படும் விச்சுவரூபி எனும் திருநாமத்தையும் பெரிது போற்றும் வேதவசனங்களை எடுத்து நயமுறக் காட்டுகின்றன. உயிர்கட்குப் போகம் அருளற்பொருட்டுப் போக வடிவமும், வினைகளை வீட்டுதற்பொருட்டுக் கோர வடிவமும், யோகமுத்தி யுதவுதற்பொருட்டு யோகவடிவமும் ஆக ஒன்றொடொன் றொவ்வா முத்திற மேனிகளைத் தடத்தலக்கணத்தாற் கொள்வது அநுக்கிர நிமித்த மென்பதும் பெறப்பட்டது.

இதுகாறும் கூறப்பெற்ற பெருமான் இருக்கும் தலத்தை, ஒன்பதாங் கண்ணி ஓதுவார் உளத்திற்கு விருந்தாக ஓதுகின்றது. பிறிதொரு பதிக்கு இல்லாத நிறைவுடைமை சிவலோகத்திற்கு இயல்பில் உளதாகலின் 'சீர் ஆர் சிவலோகம்' எனப்பெற்றது. சிவபிரானை நீங்காது சேர்ந்திருக்கும் அன்புடைத்தாகலின் அப்பதி சிவலோகம் எனப் பேர் பெற்றதுபோலும். தோற்றக் கேடுகளுடையார் சிறப்பொடு வாழ்ந்து பின் சீரழிவர்: அத்தோற்றக் கேடுகள் இல்லாத சிவபிரான் ஒருவனே சிறப்பும் நிறைவுடைமையும்

உடையானுகலின் 'சீரார் சிவம்' என்றும், அப்பரனைச் சேர்ந்திருக்கும் பதி அவ்வமலன் திருநாமத்தினும் தான் பிரிதற்கு இயலாத பேரன்பால் சிவலோகம் எனும் பேர் தாங்கியது எனினுமாம். சிவலோகம் நாடாகச் சிவபுரம் நகரமாகச் சிவநகர் நாப்பண் அருள் கொழிக்கும் எழுச்சியுற்ற அரண்மனையொன்று உளது; அழகுடைமை நிறைவுடைமை அருளுடைமை மூன்றும் அவ்வரண்மனையின் அலங்காரம்: அதனுள் அமலன் அமர்ந்துளான் என்பார் "சீரார் சிவலோகம் தன்னுட் சிவபுரத்துள் ஏர் ஆர் திருக்கோயில் உள் இருப்ப" என்றார். ஏர்-அழகு, ஆர்—நிறைவு, திரு-அருள்.

பசுவிற்குப் பாலானது கால் கொம்பு ஆதிய உடலெங்கும் உளதெனினும், அப்பால், ஆவின் தன்னியத்தினின்றே வெளிப்படுமாறுபோல, ஏகபூரணன் எனும் வசனத்தால் யாண்டும் நிறைந்த சிவபிரான், கயிலை யாதிய தானங்களிலும், ஞானியர் சித்தங்களிலும் இருந்து வெளிப்படுவன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

திருமால்—நாரணன்; இப்பெயர், இலக்குமியால் விரும்பப்பெற்றவன் எனும் பொருளது. (திரு இலக்குமி; மால் விருப்பம்.) நான்முகன்—நான்குதிசைகளையும் நோக்கிய நான்கு முகங்களையுடைமையால் வந்த பெயர். உணராதன்றங்கு எனும் இடத்து, அங்கு—அசை; அவ்விடத்து எனினுமாம். பெருமான்—பெருமையுடைய சிவபிரான்; இதில், பெருமை யென்ற பண்புப் பகுதி ஈற்று ஐகாரம் மாத்திரம் கெட்டுப் பெரும் என நின்றது; ஆன்—ஆண்பால் விகுதி. அரி-(நெறிதிறம்பினுரை) அழிப்பவர் எனும் பொருளில் திருமாலைக் குறித்தது. அயன்—திருமாலின் புதல்வன்; அஜன் எனும் வடசொல் திரிந்த பெயர்; (அ—விஷ்ணு; ஜன்—தோன்றியவன்.) அரன்—(அடியவர்களின் பாவத்தை) அழிப்பவன் எனும் பொருளில் சிவபிரானைக்

குறித்தது. பரன் – மேன்மை. வானவர்க்குத் தேவர் எனும் பெயர் (சிவத்தின் திருவருளால்) தெய்வத் தன்மை பெற்றமையின் வந்த தென்க. ஓவாமை–நீங்காமை; எதிர்மறை: ஓவுதல் உடன்பாடு. ஓவாது உள்குதல்–இடைவிடாது தியானித்தல்.

—ஆராய்ந்து

செங்க ணமரர் புறங்கடைகட் சென்றீண்டி
* எங்கட்குக் காட்சியரு ளென்றிரப்ப—வங்கொருநாள்
பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை யென்றிவர்க ணன்கமைத்த—சேமங்கொள்
ஞானக் கொழுந்து நகராசன் றன்மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேற் சித்திரிப்ப—வூனமில்சீர்
நந்தா வனமலரு மந்தா கினித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நா றுயிரத்தால்—நொந்தா
வயந்தன் றொடுத்தமைத்த † வாசிகை சூட்டி
நயந்திகழு நல்லுறுப்புக் கூட்டிப்—பயன்கொள்
குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தங் கொண்டு
நலமலிய வாகந் தழீஇக்—கலைமலிந்த
கற்பக மீன்ற கமழ்பட் டினையுடுத்துப்
பொற்கழல்கள் கான்மேற் பொலிவித்து—விற்பகருஞ்
சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்ட மன்னுவித்துத்—தோளா
மணிமகர குண்டலங்கள் காதுக் கணிந்தாங்
கணிவயிரக் கண்டிகை பொன்னாண்—பணிபெரிய
ஆர மவைபூண் டணிதிக ழுஞ்சன்ன ‡
வீரந் திருமார்பில் வில்லிலக—வேருடைய

* யெம்பெருமா னெங்கட்கருளென்ன
† வாசிகையுஞ்சூட்டி
‡ பொற்சன்ன

* எண்டோட்குக் கேயூரம் பெய்துதர † பந்தனமுங்
‡ கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக்—கொண்டு
கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்—கடிநிலைமேல்

(ப-ரை). செங்கண் அமரர்—செவ்விய கண்களையுடைய தேவர்கள், ஆராய்ந்து—(சிவபுரத் திருக்கோயிலின்கண் எழுந்தருளி யிருக்கும் சிவபிரானைத் தரிசிக்கும் சமயம்) தெரிந்து, புறம் கடைக் கண் சென்று ஈண்டி—தலைவாயிலை அடைந்து (நெருக்கமாகக்) கூடி, எங்கட்கு காட்சி அருள் என்று இரப்ப— (பெருமானே!) அடியேங் கட்குத் தரிசனம் தருவீராக என்று (பலகாலமாகக்) குறையிரந்து பிரார்த்திக்க, அங்கு ஒருநாள்—(பிரார்த்திக்கும்) அவ்விடத்தில் ஒரு நாள், பூமங்கை—தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியும், பொய்தீர் தரணி—பொய்ம்மை யில்லாத பூமிதேவியும், புகழ்மங்கை—கீர்த்திமக ளும், நாமங்கை என்று இவர்கள்—(நான்முகன்) நாவில் வதியும் கலை மகளும் என்று சொல்லப்பெற்ற இம்மாதர்கள், நன்கு அமைத்த சேமம் கொள்—நலத்தகு முறையில் செய்த காவலைக் கொண்ட, ஞானக்கொழுந்து—அறிவுப்பிழம்பாம், நகராசன் தன் மடந்தை— மலையரையனது மகள் என உபசரிக்கப்பெற்ற பார்வதிதேவியார், தேன் மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப—தேன் அடர்ந்த வேணி மேல் அலங்காரஞ் செய்தற் பொருட்டு, ஊனம் இல் சீர் நந்தாவன மலரும்—பழுதிலாச் சிறப்பினையுடைய நந்தன வனத்து மலர்களா லும், மந்தாகினி தடம் சேர் செந்தாமரை மலர் நூறு ஆயிரத்தால்— தேவகங்கையில் பொருந்திய எண்ணிறந்த செவ்விய தாமரை மலர் களாலும், நொந்தா வயந்தன் தொடுத்து அமைத்த வாசிகை சூட்டி— (சிவபிரான் நெற்றிக்கண்ணால் நீறுதற்கு முன்னிருந்த) வருந்து

---

* எண்டோட்குங்

† பந்தனங்

‡ கண்டார்

தலில்லாத மன்மதன் தொடுத்துச் செய்த தொடுமாலையை அணிந்து, பயன்கொள் குலமகளிர்-(பிறவியெடுத்ததாலாகிய) பயனைக்கொண்ட சிறந்த மாதர்கள், நயம் திகழும் நல் உறுப்புக் கூட்டிச் செய்த— மென்மை விளங்கும் சிறந்த கூட்டுச் சரக்குகளைச் சேர்த்து அமைத்த, கொழும் சாந்தம் கொண்டு—கொழுமையான சாந்தை எடுத்து, நலம்மலிய ஆகம் தழீஇ—நன்மை நிரம்பத் திருமேனியிற் பூசி, கலைமலிந்த கற்பகம் ஈன்ற கமழ் பட்டினை உடுத்து—நூற்களில் (ஓதும் பெருமை) நிறைந்த கற்பகமரம் தந்த மணம் வீசும் பட்டு வத்திரத்தை உடுத்தி, பொன்கழல்கள் கால்மேல் பொலிவித்து— பொன்னாலாகிய வீரக்கழல்களைத் திருவடிகளின் மீது சிறப்புற அணிந்து, வில் பகரும் சூளாமணி சேர் முடிகவித்து.—ஒளிவீசும் சூளாமணி (யெனும் ஒருவகைத் தெய்விகமணி) பதித்த மகுடத்தைச் சூட்டி, சுட்டி சேர் வாள் ஆர் நுதல் பட்டம் மன்னுவித்து—சுட்டி யொடு சேர்ந்த ஒளிநிறைந்த நெற்றிப் பட்டங் கட்டி, தோளா மணி மகர குண்டலங்கள் காதுக்கு அணிந்து—துளைபடாத இரத்தினக் கற்களைப் பதித்த மகரமீன் வடிவாகச் செய்யப் பெற்ற குண்டலங் களைத் திருச்செவிக்கு அலங்காரமாக இட்டு, ஆங்கு—அதனுடன், அணிவயிர கண்டிகை—அழகிய வயிர கண்டிகையும், பொன்நாண்— பொன் நாணும், பெரிய பணி ஆரம் அவை பூண்டு—சிறந்த வேலைப் பாடு அமைந்த பெரிய முத்துமாலை (முதலாகச் சொல்லப்படும்) அப்பணிகளை அணிந்து, அணிதிகழும் சன்னவீரம் திருமார்பில் வில் இலக—அலங்காரமாக விளங்கும் வெற்றிமாலை சிறந்த மார்பகத்தில் ஒளிசெய்ய, ஏர் உடைய எண் தோட்கு கேயூரம் பெய்து—எழுச்சியை யுடைய எட்டுத்திருத்தோள்களுக்கும் வளையென்னும் ஆபரணத்தை அணிந்து, கண்டோர் மனம் மகிழ உதரபந்தனமும் கட்டுறீஇ— பார்த்தவராது உள்ளங்களிக்க அரைப்பட்டிகையையும் கட்டி, கடி சூத்திரம் கொண்டு புனைந்து—(அதன்மேல்) அரை ஞாணை எடுத்து அழகாகப்பூட்டி, சங்கணம் கைபெய்து-கரத்தில் கங்கணம் அணிந்து, வடிவு உடைய கோலம் புனைந்து ஆங்கு—உருவத்திருமேனிக்கு (உரிமையாக) உடைய அலங்காரங்களைச் செய்ததும், (எ-று).

செம்மையான கண்கள் பெற்ற வானவர்கள் சிவலோகம் வந்து சேர்கின்றார்; வந்து கூடிய அவர்கள் கூட்டம் தலைவாயிலில் மிக்க நெருக்கமாயுளது. சிவபிரானைத் தரிசிக்கும் அமயத்தை ஆய்ந்து ஆய்ந்து, எந்தாய்! எந்தாய்!! எங்கட்குக் காட்சியருள்! என்று குறை யிரந்து பலகாலம் பிரார்த்தனை செய்கின்றார்.

திருமகள் பூமகள் கீர்த்திமகள் நாமகளாதியோர் நன்கு சூழ்ந்து காப்புச்செய்து வழிபட, அதனை யேற்கும் இறைவி, அமரர் அமலனை விளித்து அரற்றும் அவ்வொலியைக் கேட்கின்றாள்; கூப்பிடுகுரற்குச் செவிசாய்க்கும் பெருமான் அவ்வானவர்க்கு விரைந்து அருள வெளிப்படுவான் என்பதை உன்னி, இயற்கை யழகுள தன் பெருமானுக்குச் செயற்கைக் கோலமும் செய்கின்றாள். இத்திருக்கோலப் புனைவு பதினோராம் கண்ணிமுதல் இருபத்தோராம் கண்ணிவரை பேசப் பெறுகின்றது.

இது ஞான உலா; இவ் உலாவிற் போதர இருக்கும் பெருமானை ஞானக் கொழுந்தாம் இறைவி அலங்கரிக்கும் காட்சியை நினைப்பார் நெஞ்சம் நெகிழ்தலுறும்.

சிவபிரான் நெற்றிக்கண்ணால் நீறுதற்கு முன்னிருந்த மன்மதன், பூங்காவனம் மந்தாகினி எனும் யிரண்டிலும் மலர்ந்த மலர்களைக் கொண்டு தொடுத்து வைத்த தொடு மாலை, முதன் முதல் பெருமான் திரு முடிக்கு அலங்காரமாக அமைகின்றது. பின் திருமேனியில் சாந்தணியும் அலங்காரம் செய்யப் பெறுகின்றது; கற்பின் பயன் அறிவின் பயன் பிறந்ததா லாகிய பெரும் பயன் ஆகியவற்றைப் பெற்ற குலமகளிர் செய்தளித்த கொழுஞ் சாந்து

அவை. கற்பகமரம் அளித்த மணங்கமழும் பட்டு வத்திரம் உடுத்தப் பெறுகிறது. வீரக்கழல் பூட்டி, மகுடம்சூட்டி, சுட்டியொடு சேர்ந்த நெற்றிப் பட்டம் கட்டி, மகர குண்டலம் வயிர கண்டிகை முத்தாரம் வெற்றி மாலே கேயூரம் எனும் வளே முதலியன அணிந்தபின், தாயுதர பந்தனத்தைத் தள்ளும் தனி முதலுக்கு அம்மை அரைப்பட்டிகை என்னும் உதர பந்தனம் அணிவாளேல், கண்டவர் உள்ளம் களியாதோ என்பார் 'உதர பந்தனமும் கண்டோர் மனமகிழக் கட்டுறீஇ' என்ருர். அதன்பின் சிவபிராற்கு அரைஞாணும் கங்கணமும் அணிந்தனள் எம் அன்னே.

வடிவு உடைய கோலம் என்பதற்கு, அழகுடைய அலங்காரம் எனப் பொருள் கொள்வது நேரிதன்று; வலிந்து கொண்டக்கால் துரோகமாம். கண்களுக்குக் காணப் பெறுவன எல்லாம் அருட்சத்தியின் வடிவங்கள்; கண்ணிந்திரியத்திற்குத் தோன்றுதன எல்லாம் சிவ சொரூபம். யாவரும் காணச் சிவம் வெளிப்பட வேண்டுமெனின் அருளேயே மேனியாகக்கொண்டு வெளிப்படும் ஆதலின், வடிவு உடைய கோலம் என்பதற்கு உருவத்திருமேனிக்கு உரிமை உடைய அலங்காரம் எனப் பொருள் கொள்ளப் பெற்றது. அவ்வடிவைப் பெருமான் கொள்ளாதுயின் சொரூப சிவத்திற்கு அலங்காரம் செய்வது யாங்ஙனம் என்க.

இமைத்த லில்லாத கண்களேப் பெற்றிருத்தலின் அச்சிறப்புக் கருதி வானவரை 'செம்கண்' அமரர் என்ருர்; பொன்னின் நிறத்தராகலின் சிவந்தகண் அமரர் எனினும் ஆம்.

அமரர்-அமுதம் உண்ட காரணத்தால் பல காலம்வரை மரணம் இல்லாதவர் எனும் பொருளில் தேவரைக் குறித்தது. புறம் கடை-

கடைப்புறம் என மாறுக; இது, இலக்கணப்போலி. பொய்தீர் தாணி புகழ் மங்கை யென்பதை ஒரு பெயராக்கி, குற்றம் நீங்கிய உலகம் துதிக்கும் துர்க்கை எனப் பொருள் கொள்ளினும் ஆம். நகம்-நடவாதது; (கம்-நடத்தல்; ந-அஃறின்மை.) எனவே, இது, மலை யெனும் பொருள் பயந்தது. நகராஜன்-பர்வதராஜன். அம் மன்னன் செய்த தவத்தால் மகளென எதிர்தோன்றி வளர்ந்திருந்து பின் பாசிவத்தை மணந்தா ராகலின் தேவியை 'நகராசன்றன்மடந்தை' என்றார். வயந்தன்-வசந்த காலத்திற்கு உரிய மன்மதன். கற்பகம்-கல்பகம் எனும் வடசொல்லின் திரிபு; இதற்கு (விரும்பிக் கேட்ட பொருளை) உண்டாக்கித் தருவது என்று காரணப்பொருள்; இது, தேவதருக்கள் ஐந்தனுள் ஒன்றற்குச் சிறப்புப் பெயராதலன்றி அவ்வைந்தனுக்கும் பொதுப்பெயருமாம். கழல்-வீரத்திற்கு அறிகுறி யாகத் திருவடியில் அணிவதோர் ஆபரண விசேடம். சூளாமணி-குற்றமில்லா இரத்தினம்; இதனை, சூடாமணியின் திரிபெனக் கொண்டு, தலையில் அணியும் பணியெனப் பொருள் காண்பர் வட மொழி வாணர் (சூடா-தலைமயிர்முடி; மணி-இரத்தினம்). வில், வாள் முதலியன-ஒளியெனும் பொருளன. கேயூரம்-வாகு வலயம்; தோள்வளை.

—அடி. நிலைமேல்

நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்க ளிருக்குரைப்ப—வந்தமில்சீர்
எண்ணருங் கீர்த்தி யெழுவ ரிருடிகளும்
அண்ணன்மே லாசிக டாமுணர்த்த—வொண்ணிறத்த
பன்னிருவ ராதித்தர் பல்லாண் டெடுத்திசைப்ப
மன்னு மகத்தியன்யாழ் வாசிப்பப்—பொன்னியலும்
அங்கி கமழ்தூப மேந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச்—செங்கண்

நிருதி † முதலோர் நிழற்கலன்க ளேந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத்—தெருவெல்லாம்
‡ வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையெடுப்ப—மேவிய
ஈசானன் வந்தடைப்பை கைக்கொள்ள § வச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத்—தூய
உருத்திரர்க டோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக்—கருத்தமைந்த
கங்கா நதியமுனை யுள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடையிரட்டத்—தங்கிய
பைந்நாக மெட்டுஞ் சுடரெடுப்பப் பைந்தறுகட்
கைந்நாக மெட்டுங் கழல்வணங்க—மெய்ந்நாக
மேகம் விதானமாய் மின்னெலாஞ் சூழ்கொடியாய்
* மேகத் துருமு முரசறையப்—போகஞ்சேர்
தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்குங்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட—வெம்பெருமான்
விண்ணோர் பணிய வுயர்ந்த விளங்கொளிசேர்
† எண்ணோர் மழவிடையின் மேல்கொண்டாங்—கெண்ணார்
கருத்துடைய பாரிடங்கள் ‡ காப்பொத்துச் செய்யத்
திருக்கடைக ளேழ்கழிந்த போதில்

---

† மேலோர்களுழை
‡ வாயுப் புறன்விளக்க
§ வச்சுவினி
* மேகத் துருமே
† எண்ணரிளவிடையின்
‡ காப்போத்து

(ப-ரை). (இறைவியால் அலங்கரிக்கப்பெற்ற அமலன்); அடி நிலைமேல்-தலைவாயிலின் கண் உள்ள, நந்திமாகாளர் கடை-திருநந்தி தேவர் காவல் செய்யும் திருவணுக்கன் திருவாயிலை, கழிந்த போதில்-கடந்து சென்ற அமயம், வசுக்கள் வந்து இருக்கு உரைப்ப-(அட்ட) வசுக்கள் (இறைவன் எதிரில்) தோன்றி இருக்கு வேத பாராயணஞ் செய்ய, அந்தம் இல் சீர்-முடிவு இல்லாத சிறப்பினை யுடைய, எண்ண அரும் கீர்த்தி எழுவர் இருடிகளும்-நினைத்தற்கும் அரிய புகழமைந்த சப்த முனிவர்களும் (வந்து), தாம் அண்ணல் மேல் ஆசிகள் உணர்த்த-பெருமையிற் சிறந்த தலைவராம் சிவபிரான் மீது வாழ்த்துக்கூற, ஒள் திறத்த பன்னிருவர் ஆதித்தர்-ஒளி வீசும் திறத்தினை யுடையவர்களான பன்னிரு சூரியர்களும், பல்லாண்டு எடுத்து இசைப்ப-பல்லாண்டைப் பெரிது பாட, மன்னும் அகத்தி யன் யாழ் வாசிப்ப-நிலைபெற்ற அகத்திய முனிவர் வீணை வாசிக்க, பொன் இயலும் அங்கி கமழ் தூபம் ஏந்த-பொன்னிறத்தொடு விளங் கும் அக்கினி பகவான் மணம் வீசும் தூபகலசம் ஏந்திவர, யமன் வந்து மங்கல வாசகத்தால் வாழ்த்து உரைப்ப-நடுவன் வந்து மங்கல மொழி யால் வாழ்த்துக்கூற, செங்கண் நிருதி முதலோர்-செவ்விய கண்களை யுடைய நிருதிமுதலா யுள்ளவர்கள், நிழல் கலன்கள் ஏந்த-ஒளிசெய் யும் (மணிகள் பதித்த) திருவாபரணங்களை ஏந்திக் கொண்டுவர, வருணன் மணிக்கலசம் தாங்க-வருணபகவான் அழகிய (நீர்க்) கலசத்தைச் சுமந்துவர, தெரு எல்லாம்-வீதிகள் முழுதும், வாயு நனி விளக்க-வாயுபகவான் பெரிது சுத்திகரிக்க, மா மழை நீர் தெளிப்ப, சிறந்த மேகங்கள் (வீதியெல்லாம்) நீர் தெளிக்க, தூய சீர் சோமன் குடை எடுப்ப-தூய்மையான சிறப்புடைய திங்கள் (நிழல் செய்யக்) குடையெடுத்துப் பிடித்து வர, மேவிய சீர் ஈசானன் வந்து-விரும்பத் தக்க சீர்த்தி யமைந்த ஈசானன் (நெருங்கி) வந்து, அடைப்பை கைக்கொள்ள-வெற்றிலைப் பையை கையில் எடுத்துக் கொண்டு வர, அச்சுனிகள்-அஸ்வனி தேவர்கள், வாய் ஆர்ந்த மந்திரத்தால் வாழ்த்து உரைப்ப-வாய் நிறைந்த மந்திரங்களால்

வாழ்த்துச் சொல்ல, தூய உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்ல-பரிசுத்தமான உருத்திர கணங்கள் துதி வார்த்தைகளைக் கூற, குபேரன் திரு தகு மா நிதியம் சிந்த-குபேரன் மேன்மையும்தகுதியு முடைய சிறந்த ஐஸ்வர்யங்களை (வரும்வழியில் வாரி) இறைக்க, கருத்து அமைந்த - அமைதிபெற்ற மனத்தினையுடைய, கங்காநதி யமுனை உள் உறுத்த தீர்த்தங்கள் - கங்கை யமுனையை யுள்ளிட்ட நதிகளின் அதி தெய்வங்களான பெண்கள், பொங்கு கவரி புடை இரட்ட-அதிகரித்த வெண்சாமரங்களை இருபாலும் வீச, தங்கிய பைந்நாகம் எட்டும் சுடர் எடுப்ப-(நிலவுலகத்தின் கீழ்) தங்கியிருந்த படங்களையுடைய (தலைமையான) எட்டுப் பாம்புகளும் விளக்குகளை ஏந்திவர, பை தறுகண் கை நாகம் எட்டும்-பசுமையும் அஞ்சாமையும் உடைய துதிக்கை வாய்ந்த எட்டுத்திக்கு யானைகளும், கழல் வணங்க-திருவடிகளை வணங்கவும், மெய் நாக மேகம் விதானமாய்-மெய்ம்மையான ஆகாயத்தில் உள்ள மேகங்களே மேற்கட்டியாய், மின் எல்லாம் சூழ் கொடியாய்-மின்னல்கள் அனைத்தும் சூழ்ந்திருக்கும் கொடிகளாய் (அமைய), மேகத்து உருமு முரசு அறைய-மேகத்தின் இடியே முரச வாத்தியமாக ஒலிக்க, போகம் சேர்-இன்பம் நிறைந்த, தும்புரு நாரதர்கள் பாட-தும்புரு நாரதர் (எனும் இரு முனிவர்கள் தத்தம் யாழில் அமலன் புகழைச் சேர்த்துப்) பாட, கொம்பு உருவ நுண் இடையார்-பூங்கொடிபோலும் வடிவமும் நுண்ணிய இடையையும் உடைய (பல) மாதர்கள், எங்கும் தொடர்ந்து கூத்து ஆட-எல்லா இடங்களிலும் தொடர்ச்சியாக (பரவி) நடனஞ் செய்ய, எம்பெருமான்-எமது சிவபெருமான், விண்ணோர் பணிய-(தரிசனத்திற்குக் காத்திருந்த) தேவர்கள் எல்லாம் வணங்க, உயர்ந்த விளங்கு ஒளிசேர்-உயர்ச்சிபொருந்தியதும் (என்றும்) விளங்குகின்ற பேரொளி யுடையதுமான, வெண் ஆர் மழவிடையை மேல் கொண்டு-வெண்மை நிறைந்த இளமையையுடைய இடபத்தின் மேல் அமர்ந்து, எண் ஆர் கருத்துடைய பாரிடங்கள் - (எப்போதும் தன்னையே) நினைத்தல் பொருந்திய மனத்தையுடைய பூதகணங்கள்,

ஒத்து காப்பு செய்ய - ஒன்று பட்டுக் காவல் செய்துவர, திருக்கடைகள் ஏழ் கழிந்த போதில் - சிறந்த ஏழு வாயிற்படியை கடந்து சென்ற அமயத்து, (எ-று).

அமலன் திருக்கோலம் புனைந்ததும் வெளிப்படுகின்றான். முதன்முதல் திருநந்திதேவர் திருகாப்புச் செய்யும் திருவணுக்கன் திருவாயிலைக் கடந்ததும், பெருமான் உலாப் போதரப் புறப்பட்டதை அறிந்த வசுக்கள் மகிழ்வொடு வந்து இருக்குவேத பாராயணஞ் செய்ய, சப்த இருடிகள் அமலன் எதிர் போந்து ஆசிகூறினர். பன்னிரு சூரியர் நேர் வந்து பல்லாண்டு ஓதினர்; அகத்தியர் நேர்ந்து மகதியாழ் வாசிக்க, வன்னிக்கடவுள் மணம் கமழும் தூபமேந்த, நடுவன் வாழ்த்துக்கூற, நிருதி முதலினோர் திருவாபரணம் ஏந்த, வருணன் கலசம் ஏந்தி வர, வாயு வீதியெலாம் விளக்க மேகம் நீர் தெளிக்க, சந்திரன் குடை ஏந்த, ஈசானன் அடைப்பை தாங்க, அச்சுவினிகள் மந்திரத்தால் வாழ்த்துக் கூற, உருத்திரர்கள் தோத்திரங்கள் செய்ய, குபேரன் பொன் மழை பொழிய, கங்கை யமுனை முதலிய நதி தெய்வங்கள் சாமரையிரட்ட, எட்டு சர்ப்பங்கள் மாணிக்கத் தீபமேந்த, அட்டதிசைக் கரிகள் வந்து வணங்க, மேகமே மேற் கட்டியாய், மின்னலெலாம் சூழ்கொடியாய், மேகத் தொலிகள் முரசமென ஒலிக்க, தும்புரு நாரதர் பாட அப்ஸரமாதர்கள் ஆடல் செய்ய பூதகணங்கள் காப்புச்செய்ய பெருமான் விடைமேல் அமர்ந்தபடியே எழுநிலை வாயிலைக் கடந்து வெளிவந்தான்.

கடை - வாயில். வசுக்கள்-அநலன், அநிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் ஆதிய எண்மர். இவர்கள் ஒளிவீசும் மேனியராகலின் வசுக்கள் எனும் பேர் பெற்ற

னர் (வசு - ஒளி). எழுவர் இருடிகள்-அத்திரி, ஆங்கீரசர், கவுதமர், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன், கோசிகன் ஆதியோர்; அத்திரி, சமதக்கினி, பரத்துவாசர், கோசிகர் என்பவரை நீக்கி, அகத்தியர், காசிபர், புலத்தியர், மார்க்கண்டர் என்பாரைச் சேர்த்துக் கூறுவாரும் உளர். ஆதித்தர்-அதிதியிடம் பிறந்ததால் வந்தபெயர்; அவர்களாவார், அமிசுமந்தன், அரியமன், இந்திரன், சவிதா, தாதா, துவட்டா, பகவன், பூடன், மித்திரன், வருணன், விசுவந்தன், விட்டிணு வாதிய பன்னிருவர். வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பார்க்கவன், இரவி, உலோகப் பிரகாசன், உலோக சாட்சி, திரிவிக்ரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி எனவும், தாத்ரு, சக்ரன், அரியமான், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், விவச்சுவான், பூடன், சவித்ரு, துவட்டன் எனவும் வேறுபடுத்திக் கூறுவாரும் உளர். குபேரன்-அளகாபுரிக்கு அதிபன்; சிவபிரான் தோழன் எனும் சிறப்புப் பெயரினன் இவன். மானச தீர்த்தத்து விருந்து வந்தமையின், 'கருத்தமைந்த கங்கை' என்றார்; கங்கா எனும் வடசொற்கு வேகம் என்று பொருள்கண்டு, விரைந்து செல்லும் நதியென்று கூறுவர். யமுனை - யமனுக்கு முன்னே தோன்றியவள் ஆதலால் நேர்ந்த பெயர். நாகம் என்பது பலபொருள் ஒரு சொல். பை, கை, மெய் எனும் அடையால் பாம்பையும், யானையையும் ஆகாயத்தையும் உணர்த்திற்று. மெய்நாகம்-ஆகாயம்; யாவற்றிற்கும் இடந்தரும் உடம்புபோ லிருத்தலின் மெய் என அடைகொடுத்தார். தும்புரு-விபலன் குமாரர்; தும்புரீயம் எனும் நூல் செய்தவர்: இசையில் வல்லவர். போகம்-இசை அநுபவமுமாம். நாரதர்-பிரமன் புதல்வர்; மகதியெனும் யாழ்வல்லவர். அச்வினிகள்-விவச்சுவான் எனும் சூரியனுக்கும் சமிக்ஞை யென்பாட்கும் பிறந்த தேவ வயித்தியர். எண்ணார் கருத்து-தியான விசேடம். காப்போத்துச் செய்ய என்னும் பாடத்திற்கு, காப்பு மந்திரம் ஓத என்று பொருள் கொள்க.

—செருச்குடைய
சேனா பதிமயின்மேன் முன்செல்ல யானைமேல்
ஆனைப்போ ரிந்திரன் பின்படர—வானுத
வன்னத்தே ரேறி யயன்வலப்பால் கைபோதக்
கன்னவிலுந் திண்டோட் கருடன்மேல்—மன்னிய
மாலிடப்பாற் செல்ல மலரார் கணையைந்தும்
மேலிடப்பான் மென்கருப்பு வில்லிடப்பா—லேல்வுடைய
சங்கணையு முன்கைத் தடமுலையார் மேலெய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த—வைங்கணையான்
காமன் கொடிப்படைமுன் § போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய—நாமஞ்சேர்
வேழ முகத்து விநாயகனை யுள்ளுறுத்திச் [—டாழ்கூந்தல்
சூழ்வளைக்கைத்தொண்டைவாய்க்கெண்டையொண்கட்
மங்கை யெழுவருஞ் சூழ மடநீலி
சிங்க வடலேற்றின் மேற்செல்லத்—தங்கிய
விச்சா தரரியக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணாரக்க ரோடசுர—* ரெச்சாருஞ்
சல்லரி தாளந் தகுணிதந் தத்தளகங்
கல்லலகு கல்லவட மொந்தை—நல்லியலத்
தட்டழி சங்கஞ் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளங்—கொட்டுங்
குடமுழவங் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படக—மிடவிய,
மத்தளந் துந்துமி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறு மெழுந்தியம்ப—வொத்துடனே

---

§ முன்னோடக்
* ரெச்சார்வுஞ்

மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லருங்
கிங்கரரு மெங்குங் கிலுகிலுப்ப

(ப-ரை.) செருக்கு உடைய சேனபதி மயில்மேல் முன் செல்ல-களிப்புடைய முருகப் பெருமான் மயில்மேல் (அமர்ந்து) முன்னே செல்ல, போர் ஆறு இந்திரன் யானைமேல் பின்பட-போரில் பின்வாங்காத (ஆற்றலுடைய) தேவேந்திரன் (வெள்ளை யானையாகிய) ஐராவதத்தின் மேல் (அமர்ந்து) பின்தொடர்ந்து வர, அயன் ஆறுத அன்னத்தேர் ஏறி வலப்பால் கைபோத-பிரமன் (தன்னைவிட்டு) நீங்காத அன்ன வாகனத்தின்மேல் அமர்ந்து வலது பக்கத்தில் வர, கல் நவிலும் திண் தோள் கருடன்மேல் மன்னிய மால் இடப்பால் செல்ல-மலையெனச் சொல்லப்பெறும் வன்மை வாய்ந்த தோள்களை யுடைய கருடன்மேல் அமர்ந்துள்ள நாரணன் இடது பக்கத்தில் வர;

மலர் ஆர் கணை ஐந்தும் மேல் இடப்பால்-(தாமரை மாம்பூ அசோகு முல்லை குவளையெனப்) பொருந்திய மலர்க்கணை ஐந்தினை (உடலின்) மேற்புறத்திலும், மெல் கருப்பு வில் இடப்பால் எல்வு உடைய-மென்மைச் சுவையுள்ள கரும்பு வில்லை (த் தமது) இடது பாகத்திலுமாகப் பெற்றுள்ள, சங்கு அணையும் முன்கை தடமுலை யார்மேல்-வளையல் நெருங்கிய முன்னங் கைகளையும் பருத்த தனங் களையும் உடைய மாதர்கள்மேல், கொங்கு அணையும் பூவாளி எய்வான் கோத்து அமைத்த ஐங்கணையான்-மகரந்தம் நிறைந்த மலர்க்கணை களை அடிப்பதன் பொருட்டு (வரிசையாகக்) கோர்த்துப் பிடித்த ஐந்து கணைகளையுடையவனும், கொடி படை காமன் முன்போத-(முரசு குடை தென்றல் வசந்தம் விருது முதலிய) வெற்றிக் கொடி யுடைய் சேனைகள் சூழ்ந்துள்ளவனு மாகிய மன்மதன் முன்னே செல்ல, கதம் காரி வாமன் புரவிமேல் வந்து அணைய-சினமிக்க சாத்தா அழகிய குதிரைமேல் ஏறி அண்மையில் தொடர்ந்து வர, வேழ முகத்து நாமம் சேர் விநாயகனை உள் உறுத்து-யானை முகத்த

வர் எனும் பெயர் பொருந்திய கணபதியை நடுவில் விட்டு, வளை சூழ் கை-வளையல்கள் சூழ்ந்துள கைகளையும், தொண்டை வாய்-கொவ்வைக் கனியொத்த வாயினையும், கெண்டை ஒள் கண்-சேல் கண்டைபோன்ற (பிறழும்) ஒளியுடைய கண்களையும், தாழ் கூந்தல்-நீண்டு தொங்கும் கூந்தலையுமுடைய, மங்கை எழுவரும் சூழ-(அபிராமி மயேச்சுவரி கௌமாரி நாராயணி வராகி இந்திராணி காளி எனப்பெறும்) சத்த மாதர்களும் சூழ்ந்துவர, மட நீலி சிங்க அடல் ஏற்றின் மேல் செல்ல-மடப்பத்தையுடைய தூர்க்கை வலிமை வாய்ந்த ஆண் சிங்கத்தின்மேல் (அமர்ந்து) வர, எச்சாரும் தங்கிய-எல்லா இடங்களிலும் தங்கிய, விச்சாதரர்-, இயக்கர்-, கின்னரர்-, கிம்புருடர், அ-அந்த, சாரணர்-, அரக்கரோடு-, அசுரர்-, (முதலாயி னோர் சூழ்ந்துவர)-,

சல்லரி-, தாளம்-பிரமதாளம்,தகுணிதம்-, தத்தளகம்-, கல்லலகு-, கல்லவடம்-, மொந்தை-, நல் இலயம்-சிறந்த இனிமை வாய்ந்த, தட்டழி-, சங்கம்-, சலஞ்சலம்-, தண்ணுமை-, கட்டு அழியா-(வார்க்) கட்டு தளராத, பேரி-, கரதாளம்-, கொட்டும்-அடிக்கப்படும், குடமுழவம்-, கொக்கரை-, வீணை-, குழல்-புல்லாங்குழல், யாழ்-, இடம் ஆம் தடாரி-இடம் பரந்த பம்பை, படகம்-, மிடவிய-வலி யுடைய, மத்தளம்-, துந்துபி-, வாய்ந்த-(இசை) அமைந்த, முருடு-, இவற்று ஆல்-(ஆதிய) இவ் வாத்தியங்களின் ஓசை, எத்திசை தோறும் எழுந்து இயம்ப-எல்லாத் திசைகளிலும் மிக்கு ஒலிக்கவும், ஒத்து உடனே-(வாத்தியங்களுடன்) சேர்ந்து அதே காலத்தில், மங்கலம் பாடுவார் வந்து இறைஞ்ச-மங்கலப் பாடகர் வந்து வணங்க, மல்லரும்-, கிங்கரரும்-, எங்கும் கிலு கிலுப்ப-எவ்விடத்தும் நிறைந்து ஓசை செய்ய, (எ-று).

இன்ப வடிவன், தனக்கு முன்னுவார் இல்லாத் தகுதி யன், தேவசேனைக்குத் தலைவன், அருட் செல்வன் எனப் பெறும் எமது கந்தவேள் ஆவரண சத்தியெனப் பெறும்

மயில்மேல் அமர்ந்து, உலாப்பொருட்டு வெளிப்பட்ட சிவ பிராற்கு முற்செல்ல, சிவத்தைத் தொடர்ந்து யானைமேல் பின்வரும் அப்பேறு பொருட் செல்வனும் இந்திரற்கு வாய்த்தது. ஐம்முகச் சிவத்தின் வலத்திலும் இடத்திலும் தோன்றினேம் என்பதைக் காட்டு முகத்தால் அன்னத் தேறிய பிரமன் வலத்திலும் கருடனிலேறிய நாரணன் இடத்திலுமாகத் தொடர்ந்தனர்.

கமலத்தை முகமாக் கொண்டு, மாம்பூ அசோகு எனும் இரண்டையும் தம்மேனியின் நிறமாகப்பெற்று, முல்லை யரும்பைப் பற்களாக ஏற்று, குவளையைக் கண்களாகக் கொண்டு நிலைத்த நங்கையர், தமது இடது பக்கத்தில் கரும்பு வில் உருவத்தைத் தீட்டியிருப்பது பண்டைக் கால வழக்கு. அதை நோக்கிய காமன், தன் கைக் கணைகளாம் மலர்களை உடலின் மேற்பால் அவயவங்க ளாகவும், வில் உருவை அவ்வுடலில் தீட்டிய சித்திரமாகவும் கொண்ட முறையால், என் வில்லையும் அம்புகளையும் கொள்ளைகொண்ட இவர்களை விடமாட்டேன்; போரில் வெல்வேன்; வில்லையும் கணை களையும் கைப்பற்றுவேன் என்பான்போல் அம் மாதர்மேல் விடுதற் பொருட்டு கரும்பு வில்லில் கோர்த்த கணைகளுடன் வெற்றிக்கொடி பறக்கும் படைப்பெருக்கம் தொடர முன்னேறிச் செல்கின்றான்.

சாத்தாவும் குதிரைமேல் வருகிறார்; விநாயகரை நடுவி லிருத்திய சப்த மாதர்களும் வருகின்றார். துர்க்கை சிங்கத் தின்மேல் ஏறி வருகின்றாள். விச்சாதர ராதியோர் எங்கும் நிறைந்தவராய்த் தொடர்ந்தனர். மங்கலம் பாடுவார் வந்து வணங்கினர்; மற்போரில் வல்ல மல்லரும், ஏவற் பணி

செய்யும் கிங்கரரும் கிக்குலு கிலுகிலு எனும் ஓசை தோன்றத் திருப்பணியில் ஈடுபட்டனர்.

கதக்காரி-கோபத்தையும் கரு நிறத்தையும் உடையவர் எனும் பொருளில் சாத்தாவைக் குறித்தது. விநாயகன்-தனக்கு மேலொரு தலைவரில்லாதவன் எனும் பொருட்டு. நீலி-நீல நிறமுடைய காளி. விச்சாதரர்-வித்தையில் வல்லவர். கின்னரர்-மனிதர்போ லிருப்பவர்; இவர் பாடும் பண், கின்னரம். கிம் புருடர்-குதிரை முகமுடையவர். சாரணர்-சரித்துக்கொண்டே யிருப்பவர்; சரித்தல்-உலவுதல். அரக்கர்-அரக்குப் போன்ற செந் நிறமுடையவர். அசுரர்-தேவர்க்கு எதிரானவர். தகுணிதம்-பறை. தத்தளகம்-தத்தள தளதள எனும் ஒலியுடைய ஒருவகை வாத்தியம். சங்கம் எனும் பொதுப்பெயர், வலம்புரியைக் குறித்தது; சலஞ்சலம்-வலம்புரியின் இனம். தண்ணுமை-மிருதங்கம். கரதாளம்-கைத்தாளம். குடமுழவம்-குமுகுமு குமு என ஒலிக்கும் ஒருவகை வாத்தியம். குழல்-புல்லாங் குழல். வீணை வேறு, யாழ் வேறு; இவ் விரண்டும் நரம்புக் கருவிகள். தடாரி-உடுக்கைப் பறை. துந்துபி-துந்து எனும் ஒலியமைந்த ஒரு வகைத் தேவ வாச்சியம். குழல்-துளைக்கருவி; எனவே, தோற் கருவி துளைக்கருவி நரம்புக் கருவி கஞ்சக் கருவி மிடற்றுக் கருவி யெனப்பெறும் வாத்தியங்கள் எல்லாம் ஒலித்தன என்க. விச்சாதரர் முதலான பதினெண் கணத் தலைவர் எத்திசையிலும் நிறைந்து இவ்வாத்திய ஓசைகளை எழுப்பினர் எனினுமாம். பதினெண்கண மாவன:—அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாய வாசியர், போக பூமியர் எனப் படுவார். மல்லர்-மல் யுத்தத்தில் தேர்ந்தவர். கிங்கரர்-கைங்கர்யம் செய்யும் சிறு தொழிலாளிகள். கிலுகிலுத்தல்-கிக்குலு கிலுகிலு எனும் ஓசைக் குறிப்பு.

—தங்கிய
ஆறு மிருதுவும் யோகு மருந்தவமும்
மாறாத முத்திரையு மந்திரமு—மீறாந்த
காலங்கண் மூன்றுங் கணமுங் குணங்களும்
† வால கிலியரும் வந்தீண்டி—மேலை
இமையோர் பெருமானே போற்றி யெழில்சேர்
உமையாண் மணவாளா போற்றி—யெம்மையாளுந்
தீயாடி போற்றி சிவனே யடிபோற்றி
ஈசனே யெந்தா யிறைபோற்றி—தூயசீர்ச்
சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி—யங்கொருநாள்
ஆய விழுப்போ ரருச்சுனன தாற்றற்குப்
பாசு பதமீந்த பதம்போற்றி—தூய
மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றி தாள்போற்றி—நிலைபோற்றி
‡ போற்றியெனப் பூமழையும் பெய்து புலன்கலங்க
நாற்றிசையு மெங்கு நலம்பெருக—வேற்றுக்
கொடியும் பதாகையுங் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலுஞ் சூழக்—கடிகமழும்
பூமாண் கருங்குழலா ருள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் § வருப்போழ்தில்—சேமேலே

(ப-ரை.) தங்கிய ஆறும் இருதுவும்-பொருந்திய ஆறு பருவங் களுக்கு உரிய அதிதேவதைகளும், யோகும்-யோகங்களுக்கு உரிய அதிதெய்வங்களும், அரும் தவமும்-அருமையான தவங்களுக்கு

---

† பாலகிரியரும்

‡ போற்றுவார்

§ வரும்பவனி—நாமமுறும்

உரிய அதிதெய்வங்களும், மாறாத முத்திரையும்-(சிவபூஜையில் கையாளப் பெறுதலால் பயன் அளித்தலில்) மாறுதல் இல்லாத (தேனு, அங்குசம், பதாகையாதிய) முத்திரைகட்கு உரிய அதி தெய்வங்களும், மந்திரமும்-மந்திரங்கட்கு உரிய அதிதெய்வங்களும், ஈறு ஆர்ந்த காலங்கள் மூன்றும்-முடிவாக நிறைந்த (இறந்தகால நிகழ்கால எதிர்காலத்திற்கு உரிய) கால தேவதைகளும், கணமும்-கணப்பொழுதிற்கு உரிய அதிதேவதைகளும், குணங்களும்-(சாத்விக இராஜச தாமச) குணங்களுக்குரிய அதிதேவதைகளும், வாலகிலியரும்-, வந்து ஈண்டி-(சிவ சன்னிதானத்தில்) வந்து கூடி;

மேலை இமையோர் பெருமானே போற்றி-விண்ணுலகத்துள்ள தேவர்களது தலைவரே! போற்றி; எழில் சேர் உமையாள் மணவாளா போற்றி-அழகு பொருந்திய உமாதேவியாரின் மணவாளரே! போற்றி, எமை ஆளும் தீ ஆடி போற்றி-எம்மை ஆட்கொண்ட அழலாடும் பெருமானே! போற்றி, சிவனே அடி போற்றி-சிவபெருமானே! உமது திருவடிகட்கு வணக்கம், ஈசனே எந்தாய் இறை போற்றி-அருட்செல்வனே! (எங்கள்) அப்பனே! இறைவனே! போற்றி, தூய சீர் சங்கரனே போற்றி-தூய்மையான சிறப்பை யுடைய இன்பவடிவினனே! போற்றி, சடாமகுடத்தாய் போற்றி-சடைமுடியுடையவரே! போற்றி, பொங்கு அரவா-மிகுதியான பாம்புப் பணிகளை அணிந்தவரே! பொன் அம் கழல் போற்றி-(உமது) பொன்னாலாகிய அழகிய (வீரக்) கழல் அணிந்த திருவடிகளுக்கு வணக்கம், அங்கு ஒருநாள்-முன் ஒரு காலத்தில், ஆய விழுப்போர் அருச்சுனனது ஆற்றற்கு-மேன்மையான போர்செய்த பார்த்தனுடைய உறுதிக்கு (வியந்து, அவனுக்கு), பாசுபதம் ஈந்த பதம் போற்றி-பாசுபதாத்திரம் அளித்த திருவடிகட்கு வணக்கம், தூய மலைமேலாய் போற்றி-தூய்மை பொருந்திய திருக்கயிலாய மலை மேல் வீற்றிருப்பவரே! போற்றி, மயானத்தாய்-ஊழிக்காலத்துச் சர்வசம்மாரச்) சுடு காட்டில் ஆடுபவரே!, வானோர் தலைமேலாய்

போற்றி-தேவர்கள் முடிமேல் இருப்பவரே! போற்றி, தாள் போற்றி-(உமது திருவடிகளுக்கு வணக்கம், நிலை போற்றி போற்றி என-(தேவரீரது என்றுமுள்ள சிறந்த) நிலை பேறுடைமைக்குப் போற்றி போற்றி என்று, பூமாரி பெய்து-மலர் மழை சொரிந்து, புலன் கலங்க-(இவ்விசேடக் காட்சியால்) ஐம்புலச் சேட்டை கலக்கம் கொள்ள, நால் திசையும்-(கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு எனும்) நான்கு திக்குகளும், எங்கும்-(மற்ற) எல்லாப்பக்களிலும், நலம் பெருக-நன்மை அதிகரிக்க, ஏற்றுக் கொடியும்-விடைக்கொடியும், பதாகையும்-(பிற) பெரிய கொடிகளும், கொற்றக் குடையும்-வெற்றிக் குடையும், வடிவு உடைய தொங்கலும் சூழ-அழகுடைய (மயில் பீலியாலான) குஞ்சங்களும் சூழ்ந்திருக்க, கடி கமழும்-மணம் வீசும், பூ-மலர் சூடிய, மாண்-சிறந்த, கரும் குழலார்-கருமையான கூந்தலுடைய மாதர்களின், உள்ளம் புதிது உண்பான்-மனம் புதிய இன்பத்தை அநுபவித்தற் பொருட்டு, வாமான ஈசன்-அழகிய சிவ பெருமான், சே மேலே வரும் போழ்தில்-விடைமேல் இருந்தபடியே உலாவரும் அமயம், (எ-று).

இரு திங்கள் கொண்டது ஒருபருவம்; ஆவணியிலிருந்து துவக்கிய கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் எனப்பெறும் ஆறுபருவங்களுடன் ஒவ்வொரு ஆண்டும் அமைதிபெறும். அவ் ஆறு பருவங்கட்கும் உரிய அதிதேவதைகளும்; பல்வகை யோகங்கள் தவங்களாதியவற்றிற்கு உரிய அதிதேவதைகளும்; நாக்கை வளைத்து உள் நாளத்து ஏற்றிப் புருவ நடுவினை நோக்கிய வண்ணம் இருக்கும் கேசரி முத்திரையும், நாசி முனையை விடாது ஊன்றி நோக்கியபடி உள்ள அமயத்து, நாவின் நுனியைத் தாண்டி உள்ள உள்நாவின் மூலத்தில் காட்டிருள் கண்டு மனோலயம் பெற்று அகத்திலும் புறத்திலும் இமைத்தல்

இல்லாத நோக்கம் அமைந்திருக்கும் சாம்பவி முத்திரையும், தேனு, அங்குசம், பதாகை முதலிய பல முத்திரைகளுக்கும் உரிய அதி தேவதைகளும்; வேதாகமங்களிற் பேசப்பெறும் மந்திரங்கள், காலங்கள், கணப்பொழுதுகள், முக்குணங்கள் ஆதியவற்றின் அதி தெய்வங்களும் உலா வந்த பெருமான் திருமுன் வந்து குழுமி அப் பரமன் புகழனைத்தும் கூறிப் பரவ, மலர் மழை பெய்தது; இக் காட்சியில் ஐம்புலச் சேட்டை இருக்க இடமின்றிக் கலக்கம் பெற்றது. நான்கு திசைமுழுதும் பிற எவ்விடத்தும் உள்ள உயிர்த்தொகுதியின் மாட்டு இன்பமே மிக்கது. விடைக் கொடியும் பிற பெருங்கொடியும் அசைந்தாட வெண் கொற்றக்குடை நிழல் செய்ய, மலரணிந்த கருங்கூந்தல் மாதரார் உள்ளம் புதிது இன்பம் நுகரற் பொருட்டு விடைமேற் பரமன் வெளியானன்.

மணவாளன்-கலியாணப் பிள்ளை ; இது, மணம் ஆளன் எனப் பிரியும் ; இறைவன் என்றும் திருமணக்கோலத்துடன் இருத்தலின் 'உமையாள் மணவாளா' என்றார். சிவன்-மங்கலத்தைச் செய்பவன் ; சிவம்-மங்கலம் : வடசொல் ; செம்மை என்னும் பண்படியெனினு மாம். ஈசன்-சர்வ ஐஸ்வர்ய சம்பன்னன் எனும் பொருள் தரும் வடமொழிப் பெயர். எந்தை-எம் தந்தை என்பதன் மரூஉ. சங்கரன் எனும் பெயர்-உயிர்த் தொகுதிகட்கு இன்பத்தை அளிப்பவன் எனும் பொருளது, அரவாபரணன் ஆகலின் 'பொங்கரவா' என்றார். அருச்சுனன்-அர்ஜுனன் எனும் வடசொல்லின் திரிபு ; இதற்கு-வெண்ணிறமுடையவன் என்று பொருள் ; இது, முதலில் இந்நிற முடைமீ கார்த்த வீரிய மன்னனுக்குப் பெயராயிருந்து, பின்பு அவனைப்போன்ற வீரதீர பராக்ரமங்களை யுடைய பார்த்தனுக்கு இட்டு வழங்கப்பெற்றது. இதனை, உவமவாகு பெயரின்பாற் படுத்துவர் ;

அர்ஜுனன் கருநிறம் உடையவனாகலின், அவனுக்கு இப் பெயர் நிறம்பற்றி வந்ததென்பது பொருந்தாது. இனி, "குருச்சுடர் மணி செய் பச்சைக் கொழுந்துடற் பொலிவு நோக்கி, அருச்சுனன் என்பர் ஈது என் அரும்பெயர் வந்த பான்மை" எனும் நல்லாப் பிள்ளை பாரதத்தால், பசுமை நிறம்பற்றி நேர்ந்த பெயர் என்பதும் ஒன்று; அதன்றியும், முதலிற் பிறந்தபோது வெண்ணிறம் உடைய வனாக இருந்து பின்பு கருநிறம் அடைந்தமைபற்றி வந்த பெயர் என்பாரும் உளர். பாண்டவர் நடுப்பிறந்த பார்த்தன் பாசுபதாத்திரம் பெற்ற வரலாறு வெளிப்படை. பாசுபதம்-பசுபதியின் கணை; இதனை வெல்லும் ஆயுதம் இல்லை யென்பர். சுத்த மாயா வடிவமாகலின் திருக்கயிலாயத்தை 'தூயமலை' என்றார். மயானம்-யுகாந்த காலத்தில் உலகங்கள் அனைத்தையும் உருத்திரப்பிரான் எரித்தலால் விளையும் மாப்பெருஞ் சுடலை.

இறைவனது உலாக் கட்சியைக் காணப்பெற்ற விசேடத்தால் ஐம்புலச் சேட்டை கலங்கியது, யாண்டும் நலம் பெருகியது என்பது குறிப்பிடத் தகுவது. அழகு எனும் பொருளில் பயிலும் வாமம் என்பது 'வாம்' எனக் கடைகுறைந்து நின்றது. தொங்கல்-மயிலிறகால் அமைத்த சிற்றால வட்டம். மணம் வீசும் மலரணிந்த சிறந்த கரிய கூந்தல் மாதரார்தம் மனம், இதுகாறும் தமக்கு வாய்ப்பிலாத அமலனது சிறந்த உலாக் காட்சியில் புதிது போகம் அநுபவிக்கப் போகின்றது எனக்கூறும் பெற்றியில், இதனைச் செவிகொடுத்துக் கேட்பார் உளத்தையும் அக்காட்சியில் ஈடுபடுத்துகின்றார் நாயனார்.

வாலகிலியர் வரலாறு :—பிரமனது மானச புதல்வர் பலருள் ஒருவர் கிருது என்பவர்; அவர் மனைவியின் பெயர் கிரியை; இவ் விருவர்க்கும் சங்கல்ப மாத்திரத்தால் பிறந்த அறுபதினாயிரம் மக்களுக்கும் வாலகிலியர் எனப்பெயர்: வாலகிலியர் கட்டை விரல் அளவான உடம்புகளை யுடையவர்; பெருந்தவத்தர்; நாடொறும் அருக்கன் தேரைச் சூழ்ந்து திரிபவர். கருடனால் அவமானம் அடையும் வண்ணம் இந்திரனைச் சபித்த ஆற்றலுடையவர். இவர்களைப் பிரமன் உரோமங்களில் இருந்து பிறந்தவர் எனக் கூறுநரும் உளர்.

குழாங்கள்

வாமான வீசன் மறுவில்சீர் வானவர்தங்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே—தூமாண்பின்
வானநீர் தாங்கி மறையோம்பி வான்பிறையோ
டூனமில் சூல முடையவா—* யீனமிலா
வெள்ளை யணிதலால் வேழத் துரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய—வொள்ளிய
மாட நடுவின் மலரா ரமளியே
கூடிய போர்க்கள மாக்குறித்துக்—கேடில்
சிலம்பு பறையாகச் சேயரிக்க ணம்பா
† விலங்கு கொடும்புருவம் வில்லா—நலந்திகழுங்
கூழைபின் றாழ வளையார்ப்பக் கைபோந்து
கேழ்கிளரு மல்குலாந் தேருந்திச்—சூழொளிய
கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த வாயிழையார்—செங்கேழற்
பொற்கலசத் துள்ளான் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோல மிகப்புனைந்து—பொற்புடைய
பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
§ மாத ரவர்சேர மகிழ்ந்தீண்டிச்—சோதிசேர்
சூளிகையுஞ் சூட்டுஞ் * சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடு † மின்விலக—மாளிகையின்

---

* யீனமில்

† விலங்கேய்

§ மாதிவருஞ் சொல்லார்

* சுழிகையுஞ்

‡ மின்வீச

மேலேறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மாலேறி நின்று மயங்குவார் — நூலேறு
‡ தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமே லெம்மை யடுமென்பார் — காமவே
ளாமென்பா ரன்றென்பா ரையுறுவார் கையெறிவார்
§ தாமுன்னை நாளோடு சங்கிழப்பார் — பூமனும்
பொன்னரி மாலையைப் பூண்பாரப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் * சூட்டுவார் — முன்ன
மொருகண் ணெழுதிவிட் டொன்றெழுதா தோடித்
தெருவம் புகுவார் திகைப்பா — ரருகிருந்த
கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பா — ரண்ணன்மேற்
கண்ணென்னு † மாசாலம் கோலிக் கருங்குழலார்
‡ திண்ண நிறைத்தா டிறந்திட்டார்

(ப-ரை). தூமாண்பில் வான நீர் தாங்கி - தூய்மையான மாண்பினையுடைய ஆகாய கங்கையைச் சுமந்து, மறை ஓம்பி - (ஓதும் முறையால்) வேதங்களைக் காத்து, வான் பிறையோடு ஊனம் இல் சூலம் உடையவாய்-விண்ணில் உள்ள இளம்பிறைத் திங்களுடன் பழுது இல்லாத (நட்சத்திரங்கள் எனப்பெறும்) மீன்களையும் (உயர்ந்து நெருங்கி) தன்னதாகக் கொண்டதாய், ஈனம் இலா வெள்ளை அணிதலால் வேழத்து உரி போர்த்த வள்ளலே போலும் வடிவு உடைய ஒள்ளிய மாடம் நடுவில்-குறைவுபாடு இல்லாத

‡ தாமமேல் வீழ்வார் சடாதர னல்கானேல்
§ தாமுன்ன
* சூடுவார்
† மாநிலங்
‡ நிறைத்தார் திகைத்திட்டார்

சுண்ணும்பு பூசப் பெற்றிருத்தலால் யானைத் தோலை (உரித்துப்) போர்த்துள்ள (திருநீறு அணிந்த) வள்ளல் தன்மை யுடைய சிவ பிரானே போலும் வடிவத்தை உடைய ஒளி அமைந்த மாளிகையின் நடுவில் ;

மலர் ஆர் அமளியே கூடிய போர்க்களமா குறித்து-மலர்களை நிறையப் பரப்பிய படுக்கையையே (கலவிப்) போர் புரியும் இட மாகக்கொண்டு, கேடு இல் சிலம்பு பறை ஆக-குற்றம் இல்லாத (இலக்கணப்படி யமைந்த கால்) சிலம்புகளே போர்ப் பறையாகவும், சேய் அரி கண் அம்பா-செவ்வரி படர்ந்த கண்களே அம்புக ளாகவும், விலங்கு கொடும் புருவம் வில்லா-அகன்று வளைந்த புருவமே வில்லாகவும், நலம் திகழும் கூழை பின் தாழ-வளப்பம் விளங்கும் (பின்னணிப் படையாம்) கூந்தல் பின்னே தொங்கவும், வளை ஆர்ப்ப-(வெற்றிச் சங்கு எனப்பெறும்) வளையல்கள் ஒலிக்கவும், கை போந்து-இடம் பெயர்ந்து, கேழ் கிளரும் அல்குல் ஆம் தேர் உந்தி-நிறம் மிக்கு விளங்கும் நிதம்பமாகிய தேரினைச் செலுத்தி, சூழ் ஒளிய கொங்கை மா பொங்க-சூழ்ந்த ஒளியினையுடைய தனங் களாகிய யானைகள் விம்ம, கொழுநர் மனம் கவர அங்கம் பொருது அசைந்த ஆய் இழையார்-(தத்தம்) கணவர்களுடைய உள்ளத்தைத் தம்மகப்படுத்த (அவர்தம்) உடம்பொடு (காமப்) போர் விளைத்த லால் அசைந்த ஆபரணங்களை அணிந்த மாதர்கள் ;

சேமேலே-விடைமேல் (உள்ள), வாமான ஈசன்-அழகுடை அருட்செல்வனாகிய, மறு இல் சீர் வானவர் தம் கோமான்-குற்றம் இல்லாத சிறப்பமைந்த தேவர்களுடைய பெருமானது, படை முழக்கம் கேட்டலும்-படைப்பெருக்கத்தின் பேரொலி செவிப்பட் டதும் ;

செம் கேழல் பொன் கலசத்து உள்ளால் மணிநீர் முகம் சேர்த்தி-சிவந்த நிறத்தையுடைய பொன் பாத்திரத்து உள்ள அழ கிய நீரால் முகம் துலக்கி, நல் பெரும் கோலம் மிக புனைந்து-சிறந்த

பெருமை தோன்றும்படி (தங்களை) மிக நன்றாக அலங்கரித்துக் கொண்டு, பேதை முதலாக பேரிளம் பெண் ஈறாக மாதர் அவர் சேர மகிழ்ந்து ஈண்டி-பேதைப் பருவம் முதலாக பேரிளம் பெண் பருவம் இறுதியாக உள்ள மாதர்கள் (எங்கு பார்த்தாலும்) மகிழ்ச்சி யுடன் (கூட்டங் கூட்டமாகக்) கூடி நிறைந்து ;

சோதி சேர்-பேரொளியமைந்த, சூளிகையும்-, சூட்டும்-, சுளி கையும்-, சுட்டிகையும்-, வாளிகையும்-, பொன் தோடும் மின் விலக-பொன்னாலான தோடு எனும் ஆபரணமும் மின்னல்போல் ஒளிர, மாளிகையின் மேல் ஏறி நின்று-, தொழுவார்-(உலாவரும் இறைவனை நோக்கி) வணங்குவார்கள், துயர் கொண்டு மால் ஏறி நின்று மயங்கு வார்-(அவனை அணைய முடியாமை கருதித்) துன்பங் கொண்டு மையல் மிகுந்து அறிவு தடுமாறுவார்கள் ; சடாதாரி-சடைமுடியுடைய இப் பெருமான், நூல் ஏறு தாமமே தந்து நல்கானேல், (தான் அணிந் துள்ள) நூலில் கோத்த (கொன்றை) மாலையையாயினும் கொடாது போவானே யாமாகில், மேல் யாமம் எம்மை அடும் என்பார்-இனி மேல் வரும் இரவுப்பொழுது எம்மைக் கொன்றுவிடுமே என்பார்கள், காமவேள் ஆம் என்பார்-(இவன்) மன்மதன் தான் என்பார்கள், அன்று என்பார்-(அதற்கு மாறாக, அளவிடற்கு அரிய பேரழகனாய் விளங்கலின் இவன் அம்மன்மதன்) அல்ல என்று மறுத்துக் கூறு வார்கள், ஐயுறுவார் - (பின் யார் இவன் என்று தெளியாராய்) ஐயத்தை அடைவார்கள், கை எறிவார்-(பின் பெண்மையின் இயல்பு தோன்றக் கைந் நெரிப்பார்கள், தாம் முன்னை நாணோடு சங்கு இழப்பார்-(உரிமையென எண்ணி யிருந்த) தங்கள் பழைய நாணத் துடன் கை வளையல்களையும் (நெகிழ்ந்தமையின்) இழப்பார்கள், பூமன்னும் பொன்னரி மாலையை பூண்பார்-அழகு பொருந்திய பொன் னரி மாலையை (சூட்டிக் கொள்வதை மறந்து ஆபரணம் என மயங்கி) அணிவார்கள், அப்பூண் கொண்டு தன் அரி மாலையா சூட்டுவார்-அந்த ஆபரணங்களை எடுத்து (மயங்கிய அறிவால்) பொன்னரி மாலையாகச்

சூட்டுவார்கள், முன்னம் ஒரு கண் எழுதிவிட்டு ஒன்று எழுதாது ஓடி தெருவம் புகுவார்-முதலில் ஒரு கண்ணில் மை எழுதியதும் (அவசரத்தில்,) மற்றொரு கண்ணிற்கு மை தீட்டாமலேயே (உலாக்காட்சி காண) தெருவிற்கு ஓடி வருவார்கள்; திகைப்பார்—(வீதியில் வந்து, எவ்வழிச்செல்வது என அறியாது திகைப்படைவார்கள், அருகு இருந்த கண்ணாடி மேல் பஞ்சு பெய்வார்-(செம்பஞ்சுக் குழம்பை ஒத்திக்கொள்ள எண்ணிக் கண்ணாடியின் எதிர் வந்து நின்று அக் கண்ணாடியில் தெரியும் தமது வடிவங்களையே தாமென மயங்கி,) அண்மையில் இருந்த கண்ணாடியின்மேல் (குங்குமக் குழம்பைத் தோய்த்த) செம்பஞ்சை ஒத்துவார்கள், கிளி என்று உற்று பந்துக்கு பண் நாடி சொல் உரைப்பார்-கிளி என்று (மயக்கம்) அடைந்து (கையில் உள்ள) பூப்பந்துக்கு இசையொடு ஆராய்ந்த சொற்களைப் பயிற்றுவார்கள், கரும் குழலார் அண்ணல்மேல் கண் என்னும் மாசாலம் கோலி-கரிய கூந்தலையுடைய அம் மாதர்கள் பெருமையிற் சிறந்த பெருமான் மேல் கண்கள் என்னும் பெரிய வலைகளை வீசி, (அது பயன்படாது போக இறுதியில்), திண்ணம் நிறை தாள் திறந்திட்டார்-உறுதியுடைத்தான கற்பு என்னும் கதவைத் திறந்து விட்டவராயினர், (எ-று).

இறைவன் உலாப்போந்த வழியில் உள்ள மாளிகைகள் ஒவ்வொன்றும் வானம் அளாவ வளர்ந்திருக்கின்றன; எனவே, ஆகாய கங்கை பிறைச்சந்திரன் முதலியன தங்குமிடம் அம்மாளிகைகளின் மதில்களே. ஓயாது வேதம் ஓதி அவ் வேத நெறியைக் காத்தல் அம்மாளிகைகளுள் நடைபெறுகின்ற நற்செயல்; புத்தப் புதிய சுண்ணம்பு பூசிய அம் மதில்களின்மேல் முகில்களும் தங்கியுள காட்சி, கங்கை தாங்கிப் படகென அதனில் உலவும் பிறைத்திங்களைச் சூடி வேதங்களை ஓம்பித் திருநீறணிந்து யானைத்தோலை உரித்துப்

போர்த்த வள்ளலான சிவபிரானை நினைப்பூட்டுகின்றது. சிவத்தின் வடிவமென ஒளிர்கின்ற அம்மாளிகைகளின் நடுவண் உள்ள மலரணையே மாதர்தம் கலவிப் போர்க்களம்; அவர்கள் தம் கால்சிலம்பே போர்ப்பறை; செவ்வரி படர்ந்த கண்களே சிவந்த குருதி தோய்ந்த கணைகள்; வளைந்த புருவங்களே விற்கள்; கூந்தலே பின்னணிப் படைகள்; வளையல்களே சங்க நாதம்; அல்குலே விரைந்து செலுத்தும் தேர்ப் படைகள்; கொங்கைகளே யானைப் படைகள்; இவைகள் துணையாகத் தத்தம் ஆடவர்களுடன் கலத்தலே போர்; இக் கலவிப் போரை என்றும் நிகழ்த்தும் காரிகையர் சிவபிரானது சேனைகளின் ஆரவாரங்கேட்டதும் அப் பரமனது உலாக் காட்சியிற் கலந்துகொள்ளக் கருதி, தத்தம் முகம் துலக்கி அலங்காரஞ் செய்துகொண்டு ஆங்காங்கே மகிழ்வொடு வெளிப்பட்டுக் குழுமுகின்றனர்; அவ் எழுபருவ மங்கையரும் கூடும் கூட்டம் குழாம் எனப்பெற்றது.

பல அணிகள் ஒளிசெய்ய ஆங்காங்கே நிரனிறையாய் வெளியான மாதர்களில் ஒரு சாரார், பலர் கூடிய கூட்டத்தில் உலாக் காட்சியை உள்ளபடி காண்டற்கு இயலாதெனஎண்ணி, மாளிகைமேல் ஏறினர்; விடைமேல் விளங்கும் பெருமானைக் கண்டனர்; கண்டதும் கை குவித்துத் தொழுதனர்; பின் ஒருசார் பேதும்பையர்கள் அமலனைக் கண்டதும் காதல் கொண்டனராய் உள்ளக் காதலை வெளியிடற்கும் இயலாது துன்பங்கொண்டு பித்தேறி மயங்கினர்; வேறொரு சார் மங்கையர் விமலன் அழகுடைமையில் ஈடுபட்டுச் செய்வது அறியாது மதிமயங்கி, இத் தலைவன் சூடியுள்ள நூலிற் கோத்த கொன்றையையேனும் தருவானுயின்

அதனைக் கண்ணில் ஒற்றி மார்பின் அணைத்துக் கூந்தலிற் சூடுவேம்; இல்லையேல் அந்தோ! வருகின்ற எதிர்காலத்து இரவுதான் எம்மைக் கொன்றிடுமே என வாய்விட்டுக் கவலலானர்; மற்றொரு சார் மடந்தையர்தாம் உலா வருவோன் பொலிவு நோக்கி இவன் காமவேளே என்பர்; பேரழகு படைத்த இவனையேயோ அக் கருவேளெனக் கழறுவது; பின் கரும்பு வில்லும் மலர்க்கணையும் கரு நிறமும் பெற்றிரா உளத்தைக் கவரும் இம் மூர்த்திதான் யாவனேயோ என்றெல்லாம் தம்மைத் தாமே வினவினராய், பழைய நாணமும் நெகிழ ஒருதலைக் காதலால் உடன்மெலிந்து கைவளையும் கழலப்பெற்றுக் கவல்கின்றார்; பரமன் உலாக் காட்சியைக் காணும் ஆர்வமுடன் புறப்பட விரைந்த அமயத்தில் தம்மை அலங்கரித்த அரிவையரிற் சில்லோர், சிகையில் அணியும் நினைவுடன் பொன்னரி மாலையைக் கழுத்தில் பூண்டனர்; கழுத்தில் அணியும் நினைவுடன் பணிகளைச் சிகையிற் சுற்றினர்; காற்சிலம்பைக் கரத்திலும் மாட்டுவர்; ஒரு கண்ணிற்கு மையெழுதி மற்றொரு கண்ணிற்குத் தீட்ட மறந்து தெருவில் வருவர்; விடைமேல் உள்ள பரமனைக் காணவந்த அன்னார், அவ் அமலனை அணைய எப் பக்கம் செல்வதென அறியாமல் திகைப்பெய்துவர்; மற்றும் சில தெரிவையர் தம் மாளிகையில் தம்மை அலங்கரிப்பான் பொருட்டுக் கண்ணாடி யெதிர் நின்று முகத்திற்கும் குயங்கட்கும் உள்ளங்கை உள்ளங்கால்கட்கும் செம்பஞ்சுக் குழம்பூட்ட முன்னினராய், அவ் ஆடியில் தோன்றுவது தம் உருவ நிழலென அறியாமல், அவசரத்தில் அந் நிழலுக்கே செம்பஞ்சை ஒத்துவர்; அம் மயக்கமே காரணமாக கரத்து உள்ள செண்டைக் கிளியெனவே கருதி இசை தேர்ந்த சொற்களை அச் செண்டிற்குக் கற்பிக்கவும் முயல்கின்றார்.

இந்நிலையில் கருங்கூந்தற் பெருமகளிர் கண்ணுதல்மேல் கண்வலையை வீசியதாற் பெற்றபயன் உறுதியுடைத்தான தத்தம் நிறை யிழந்து நின்றமையே ஆன.

அமலனை மனனஞ் செய்யும் அன்பு மிக்காராகலின் 'மறுவில் சீர் வானவர்' என்றார். கோமான், மான்-ஆண்பாற் பெயர்விகுதி. முழங்குவது, முழக்கம்; ஆரவாரம் என்க. மறை-வேதம்; (மனநிலைக் குத் தக்கவண்ணம்) மறைந்து தோன்றும் பொருண்மை யுடைமை பற்றி வந்த பெயர். மறை ஓம்பி-இரகசியங்களை வெளிப்படா வண்ணம் காத்து எனினுமாம். பிறை-பிறத்தலை யுடையது எனும் பொருளில், ஐ-வினைமுதற்பொருண்மை விகுதி. சூலம்-இரேவதி நட்சத்திரத்தை உணர்த்திற்று; இது, பிற விண் மீன்களுக்கும் உபலக்கணம்: அன்றி, இடி வீழ்வால் சிதையாவண்ணம் மாளிகை மேல் நாட்டும் இடி தாங்கி எனும் சூலத்தைக் குறித்ததுமாம். சிலம்புவது, சிலம்பு எனக் காரணக்குறி; சிலம்புதல் ஒலித்தல். வேழம்-ஆண் யானை; "வேழக்குரித்தே விதந்து களிறெனல்" என்பது காண்க. மால் ஏறி நின்று மயங்குவார் - ஆசை மிகுந்து (செய்வதறியாது) மயங்குவார்கள் எனினுமாம்.

கயாசுரன் செய்யும் துன்பம் பொறாது அடைக்கலம் புகுந்த அமரரைக் காப்பான் அந்தணச்சிறுவன் கோலந்தாங்கிய சிவபெருமானை, அவ் அசுரன் எடுத்து விழுங்க, உடனே நீண்டு, விழுங்கிய யானையின் தோலையே போர்வையாக்கொண்டு அவ் இறைவன் அருள் புரிந்த வரலாறு வேழத் துரிபோர்த்த வள்ளல் என்றவற்றில் அடங்கும். மறங்கொண்டவனெனினும் வேதங்களும் தீண்டற்கு அரிய அமலன் திருமேனியை விழுங்குதற்கேனும் தீண்டியவன் ஆகலின், மீட்டும் அவன் பிறவி யளற்றில் வீழாவண்ணம் உய்யக்கொண்ட பேரறம், தோலை உடையாக் கொண்டமையிற் பெறப்படும்; அறக் கருணையாலும் மறக்கருணையாலும் ஆட்கொள்வதையே குணமாக் கொண்ட பெருமானை 'வள்ளல்' என்றார் போலும்; வள்ளல்-வண்மை யுடையவன்; வள்-பண்படி: அல்-பெயர் விகுதி.

பேதை

—ஒண்ணிறத்த
பேதைப் பருவம் பிழையாதாள் வெண்மணலால்
தூதைச் சிறுசோ றடுதொழிலாள்—தீதில்
இடையாலு மெக்கழுத்த மாட்டா ணலஞ்சேர்
உடையாலு முள்ளுருக்க கில்லா—ணடையாலுங்
கெளவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யுந் தொழில்பூணாள்—செவ்வனேர்
நோக்கிலு நோய்நோக்க நோக்காடன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள்—பூக்குழலும்
பாடவந் தோன்ற முடியா ளிளவேய்த்தோள்
ஆடவர் தம்மை யயர்வுசெய்யாள்—நாடோறும்
§ ஒன்றுரைத் தொன்றுன்னி யொன்றுசெய் தொன்றின்கட்
சென்ற * மனத்தனளாஞ் சேயிழையாள்—நன்றாகத்
தாலி கழுத்தணிந்து சந்தனத்தான் மெய்பூசி
நீல வறுவை விரித்துடுத்துக்—கோலஞ்சேர்
பந்தரிற் பாவைகொண் டாடுமிப் பாவைக்குத்
தந்தையா ரென்றொருத்தி தான்வினவ—வந்தமில்சீர்
ஈச னெரியாடி யென்பா ளவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றுத்—தாய்சொன்ன
இக்கணக்கு நோக்கா ளிவள்போல்வாள் காமநூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள்

(ப-ரை). ஒள் நிறத்த பேதை பருவம் பிழையாதாள்-தூய ஒளியும் அறியாமைக்கு ஏதுவான (ஏழு) வயதும் கடவாதவள்; தூதை வெள் மணலால் சிறுசோறு அடு தொழிலாள்-சிறிய மண் பாத்திரத்

§ ஒன்றுரைத் தொன்றுநக் கொன்றுசெய் தொன்றின்கட்

* மனத்தளாஞ்

தில் வெண்மையான மணலால் சிறுசோறு சமைக்கும் (விளையாட்டுத்)தொழிலை யுடையவள்; தீது இல் இடையாலும் எக்கழுத்த மாட்டாள்-குற்றம் இல்லாத இடுப்பினாலும் இறுமாந்திருத்தலைச் செய்யாள்; நலம் சேர் உடையாலும் உள் உருக்ககில்லாள்-பொலிவு மிக்க ஆடையாலும் (கண்டவர்) உள்ளத்தை உருகும்படிச் செய்யாதவள்; காளையரை நடையாலும் கௌவை நோய் செய்யாள்-ஆண் மக்களை நடக்கும் அழகினாலும் வருந்தும்படி (காம) நோயைச் செய்யமாட்டாள்; கதிர்முலைகள் எவ்வம் நோய் செய்யும் தொழில் பூணாள்-அரும்பிய முலைகளால் (ஆடவர்க்குத்) துன்பநோய் செய்கின்ற தொழிலையும் மேற்கொள்ளாள்; செவ்வ நேர் நோக்கிலும் நோய் நோக்க நோக்காள்-செவ்வி தின் நேர் நின்று நோக்கினாலும் (காம) நோய் (நேரும் வண்ணம்) பார்க்கும் பார்வையை அறியாள்; செவ்வாயின் வாக்கும் பிறர் மனத்தை வஞ்சியாள்-(பவளம் போலச்) சிவந்த வாயில் (இருந்து வரும்) மொழியாலும் அயலாரது உள்ளத்தை வஞ்சிக்க அறியாள்; பூ குழலும் பாடவம் தோன்ற முடியாள்-மலர் சூடிய கூந்தலையும் திறமை விளங்க முடிக்க அறியாள்; ஆடவர் தம்மை இள வேய் தோள் அயர்வு செய்யாள்-ஆண்மக்களை இளமையான மூங்கில் ஒத்த தோள்களால் (மயங்கி) அயர்ச்சி யடையும்படிச் செய்யமாட்டாள்; நாள் தோறும் ஒன்று உரைத்து ஒன்று உன்னி ஒன்று செய்து ஒன்றின்கண் சென்ற மனத்தனள் ஆம் சே இழையாள்-ஒவ்வொரு நாளிலும் ஒன்று சொல்லி, (சொல்லியதற்கு மாறாக அப்போதே வேறு) ஒன்றை யெண்ணி, (உரைத்ததற்கும் நினைத்ததற்கும் மாறாகவேறு) ஒன்றைச்செய்து, (உரைத்த நினைத்த செய்த மூன்றிற்கும் மாறான வேறு) ஒன்றினிடத்துச் சென்ற உள்ளத்தை (ஒரே காலத்தில்) உடையளாம் செவ்விய ஆபரணங்களை அணிந்த இளம் பெண் ஒருத்தி; நன்றாக தாலி கழுத்து அணிந்து-(தனக்கு) நலன் உண்டாக (ஐம்படைத்) தாலியை (ஆன்றோர் இட்டபடி) கழுத்தில் அணிந்து,

மெய் சந்தனத்தால் பூசி-உடல் (எல்லாம்) சந்தனம் பூசி, நீல அறுவை விரித்து உடுத்து-நீலச் சிற்றுடையை விரித்துக் கட்டிக் கொண்டு, சோலம் சேர் பந்தலில்-(இயற்கை) அழகு அமைந்த (பூப்) பந்தல் கீழ்; பாவை கொண்டு ஆடும் இப் பாவைக்கு-பதுமை போன்ற இச் சிறிய பெண் (வைத்துக்) கொண்டு விளையாடும் இந்த பொம்மைக்கு, தந்தை யார் என்று ஒருத்தி தான் வினவ-தந்தை யாவர் என்று ஒருவள் கேட்க; ஈசன் எரி ஆடி யென்ன-(அக் கேள்விக்குத் தாயானவள்) அருட்செல்வன் எனப் பெறும் அழலாடும் பெருமான்தான் (இப் பொம்மைக்குப் பிதா) என்று கூற; அவனை-(அதே நேரத்தில் உலாவந்த) அப்பெருமானை, ஓர் காய்சின மால் விடைமேல் கண்ணுற்று-ஒப்பற்ற சினமிக்கு மதர்த்த விடைமேல் (அப்பேதைச் சிறுமி) கண்டு; தாய் சொன்ன இக் கணக்கு நோக்காள்-தாய் (விளையாட்டாகக்) கூறிய (சொற்களின் சிறந்த) பொருண்மையை அறியாளாய்; இவள் காமன் நூல் நல் கணக்கின் மேல் சிறிதே நாள் செய்தாள் போல்வாள்-இப்பேதை காமனது நூலின் (உரைத்த) கணக்கின்மேல் சிறிது நாள் தான் பழகினவள் போன்ற உணர்வு உற்றனள், (எ-று).

உலாப் போந்த இறைவனைக் கண்டதும் காதல்கொண்டு தடுமாறிய மாதர் தம் செய்தி யெலாம், குழாங்கள் எனும் பகுதியில் பொதுமையிற் கூறிய நாயனுர், இனி, பேதை முதல் பேரிளம் பெண் ஈறுக உள்ள அந்த அரிவையர்தஞ் செய்திகளைத் தனித் தனிக் கூறுவான் தொடங்கி, முதலில் பேதைப் பருவப் பெண்ணொருத்தியின் நிலைமையைப் பேசும் முகத்தால் அப் பருவ அணங்கனுர் யாவரையும் அதனுள் அடக்கி அருள்கின்றுர்.

பேதைப் பருவம் என்பது ஐந்திலிருந்து ஏழு வயது வரை என்று அறுதியிட்டுக் குறிப்பது. மணற் சிறு சோறு

சமைத்து விளையாடும் அத் துணைச் சிறிய வயதில் பெண்களுக்கு உரிய இயற்கை வனப்பின் வளர்ச்சி இன்மை வெளிப்படை. ஆகலின், இடையாலும் உடையாலும் நடையாலும் முலையாலும் நோக்காலும் வாக்காலும் குழலாலும் தோளாலும் ஆடவர்க்குக் காம நோயை விளைவிக்காத இளம் பெண் ஒருவள், இக் கண்ணிகளில் காட்சி தருகின்றாள்; ஒன்றைச் சொல்லிக்கொண்டே இடையில் வேறு ஒன்றை நினைப்பதும் நினைத்ததையும் மறந்து இடையில் வேறு ஒன்றைச் செய்வதும் அதனைச் செய்துகொண்டே வேறு ஒன்றிற் கருத்தைப் புகுத்துவதும் இக் காரிகையின் பால் நாம் காணும் செய்திகள்: தன்னைத் தன் தாய் அலங்கரித்துவிட பூப் பந்தல் ஒன்றின் கீழ் சென்று மணற் சிறு சோறு சமைக்கின்றாள்; ஒரு பொம்மை தான் பெற்ற குழந்தை யென்பது அவள் பாவனை; அப் பொம்மையுடன் விளையாடுகின்றாள்; அவ் வமயம் அவள் தாயும் தோழியும் வந்து நோக்கினர்; பொம்மையைச் சுட்டிக் காட்டி, இக் குழந்தைக்குத் தாய் இவளானல் தந்தை யார் என்று தோழி விளையாட்டாக வினவினுள்; உடனே அவ் இளஞ் சிறுமியின் அன்னை, 'ஈசன் தான் அழலாடும் பெருமான்தான்' என்று நாவின் நய முற நவின்றனள்; இக் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்த அப் பேதைப் பெண்ணின் எதிரே விடை தோன்றியது; அவ் விடைமேல் விமலனும் தோன்றினுன்: அப் பதுமைக்குத் தாய் இவள்; சிவபிரான் தந்தை என்ற தாயின் மொழியில் அப்பரமனுக்கு உரிய தேவி தான் எனும் பொருள் அமைந்திருத்தலை அறிய இயலா அவ் இளம் பருவ நல்லாள், உலாப் பொருட்டு வந்த பரமனைக் கண்டதும், காம நூற்களிற் சிறிது நாள் தான்

பழகினவள்போல் நிமலனை வியந்து நோக்கியவாறே நின்றிட்டாள் என்க.

“ மழலை தான்வரச் சொல்தெரி கின்றிலள்
குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ
அழக னேகழிப் பாலையெம் அண்ணலே
இகழ்வ தோளை என்றுகொள் என்னுமே ”

என அப்ப மூர்த்திகளும்,

“ பொடிக்கின் றிலமுலை போந்தில பல்சொல் பொருள்தெரியா
முடிக்கின் றிலகுழல் ஆயினும் கேண்மின்கள் மூரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலம் கண்டன்மெய்க் [கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாளறி யேன்பிறர் கட்டுரையே ”

எனும் இந் நாயனார் வாக்கும் ஈண்டு நினைக்கப் பெறும்.

“ பொங்கநலம்-பூத்தறியாப் பூங்கொம்பு போகமறியாப் [பைங்கூழ் ”;

“ விரித்தறியாத் தோகைமயில் வெண்பாலும் நீரும்
பிரித்தறியா அன்னப் பிள்ளை ”;
கொங்கையைச்செப் பென்றுவைத்துக் கொண்டு விளையாட
மங்கையரைக் கேட்டு வருந்துவாள்—தங்குமனைச்
செய்யசுவர்ச் சித்திரத்தில் தீட்டுகத லிக்கனியை
கையிற் கிளியருந்தக் காட்டுவாள்—ஐயமற
பூசைவரக் கண்டோடிப் போய்ஒ வியப்புறவை
ஆசையுடன் கூட்டில் அழைத்தயர்வாள்—வீசுமுன்றில்
வெள்ளைக் கதிர்நிலவை வெண்பா லெனப்பளிக்கு
வள்ளத் தினில்முகந்து வாய்வைப்பாள் ”

என வரும் திருப்பூவண நாதர் உலா, பேதைப் பருவப் பெண்கள் உலகம் அறியா எத்துணை இளம் பருவத்தர் என்பதைக் காட்டித் தரும்.

பெதும்பை

பொற்புடைய
பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவினியலாள்—சீரொளிய
தாமரை யொன்றி னிரண்டு குழையிரண்டு
காமருவு கெண்டையோர் செந்தொண்டை—தூமருவு
முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலு மதிமுகத்தா—ளொத்தமைந்த
கங்கணஞ் சேர்ந்திலகு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியா—ளொண்கேழல்
அந்துகில் சூழ்ந்தசைந்த வல்குலா ளாய்பொதியிற்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள்—வந்து
திடரிட்ட † திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட வின்னமுத மன்னாள்—மடல்பட்ட
மாலை வளாய குழலாண் மணநாறு
சோலை யிளங்கிளிபோற் றூமொழியாள்—சாலவும்
வஞ்சனை செய்து மனங்கவரும் வாட்கண்ணுக்
கஞ்சனத்தை யிட்டங் கழகாக்கி—யெஞ்சா
மணியாரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி
யணியார் வளைதோண்மேன் மின்ன—மணியார்ந்த
தூவெண் மணற்கொண்டு தோழியருந் தானுமாய்க்
காம னுருவம் வரவெழுதிக்—காமன்
கருப்புச் சிலையு மலரம்புந் தேரும்
ஒருப்பட் டுடனெழுதும் போழ்தில்—விருப்பூருந்
தேனமருங் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமா லேற்றின்மேல் வந்தணைய—தானமர

† தண்வரைக்கண்

நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்டோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்று—நன்றாகக்
கைவண்டுங் கண்வண்டு மோடக் கலையோட
நெய்விண்ட பூங்குழலா ணின்றொழிந்தாள்

(ப-ரை). பொற்பு உடைய பேர் ஒளிசேர் காட்சி பெதும்பை பிராயத்தாள்-அழகுடைய பேரொளி யமைந்த தோற்றம் உள்ள பெதும்பைப் பருவ வயதினள் (ஒருவள்); கார் ஒளி சேர் மஞ்ஞை கவின் இயலாள்-நீல நிறம் பொருந்திய மயில் போன்ற அழகிய சாயலை யுடையவள்; சீர் ஒளிய தாமரை ஒன்றில்-சிறந்த ஒளியினை யுடைய ஒரு தாமரையில், (தாமரை போன்ற திருமுகத்தில் என்றபடி.) இரண்டு குழை-(காதணியாகிய) இரு குழைகளும், காமரு இரண்டு கெண்டை-(கண்களாகிய) இன்பம் பொருந்திய இரண்டு சேற் கண்டை மீன்களும், ஓர் செம் தொண்டை-(அதரமாகிய) சிவந்த ஒரு கொவ்வைக்கனியும், தூ மருவு முத்தம்-தூய்மை பொருந்திய (பற்களாகிய) முத்துக்களும், முரி வெம் சிலை-(புருவமாகிய) வளைந்த கொடிய வில்லும், சுட்டி-சுட்டிகை யென்ற ஆபரணமும்; செம்பவளம்-சிவந்த பவளநிறத் திலகமும்; வைத்தது போலும் மதிமுகத்தாள்-வைத்து இருக்கும் திங்கள் போன்ற திருமுகம் உடையவள்; ஒத்து அமைந்த கங்கணம் சேர்ந்து இலங்கும் கையாள்-ஒன்றுபோல் அமைந்து உள்ள கங்கணம் (எனும் சிறுவளை) சேர்ந்து ஒளிரும் கரங்களை யுடையவள்; கதிர் மணியின் கிங்கிணி சேர்ந்த திருந்து அடியாள்-ஒளியமைந்த மணிகள் பதித்த கிண்கிணி (எனும் ஆபரணம்) அணிந்த திருத்தமான கால்களை யுடையவள்; ஒள் கேழல் அம் துகில் சூழ்ந்து அசைந்த அல்குலாள்-ஒளிரும் நிறமுடைய அழகிய ஆடைமொய்த்து அசைகின்ற நிதம்பம் உடையவள்; ஆய் பொதியில் சந்தனம் தோய்ந்த தடம் தோளாள்—(தமிழ்) ஆயும் பொதிகை மலையின் (விளைந்த) சந்தனம் படிந்த விசாலித்த தோள்களை யுடையவள்; வந்து திடர் இட்ட திண் வரைக்கண் செய்த முலையாள்-(பேதைப்பருவத்து இல்லாமல் இப்பெதும்பைப் பருவத்தின் வருங்காலத்தில்) பெரிய மலையாவதற்கு (இப்போதுதான்

சிறிய) மேடாகத் தோன்றியதோ எனும்படியான (சூதாடு கருவி போன்ற) தனங்களை யுடையவள்; கடல்பட்ட இன் அமுதம் அன்னாள்; கடலில் தோன்றிய இனிய அமுதம் போன்றவள்; மடல் பட்ட மாலை வளாய குழலாள் - இதழ் விரிந்த மலர் மாலை சூடிய கூந்தலை யுடையவள்; மணம் நாறும் சோலை இளம் கிளிபோல் தூமொழியாள் - மணம் வீசும் பூஞ்சோலையின் உள்ள கிளிபோன்ற தூய (மழலை) மொழியினள்; சாலவும் வஞ்சனை செய்து மனம் கவரும் வாள் கண்ணுக்கு - பெரிதும் வஞ்சகத்தைப் புரிந்து (ஆடவர்) மனத்தைக் கவர்ந்து கொள்ளும் வாள்படைபோலும் கண்களுக்கு; அஞ்சனத்தை இட்டு அங்கு அழகு ஆக்கி - மையெழுதி அவ்விடத்திய அழகைத் தோற்றுவித்து; எஞ்சா மணி ஆரம் பூண்டு- குறையாத மணிகள் கோத்த மாலையை (க்கழுத்தில்) அணிந்து; மெல் விரலில் ஆழி சேர்த்தி - மென்மையுள விரல்களில் மோதிரம் அணிந்து; அணி ஆர் வளை தோள்மேல் மின்ன - அலங்காரமான வளையெனும் கடகம் தோள்மீது ஒளிர-தோழியரும் தானுமாய்—, தூ வெள் மணல் கொண்டு-தூய வெள்ளை மணல்மேல் இருந்து; காமன் உருவம் வர எழுதி - காமன் வடிவம் தோன்ற (அம்மணல் மேல்) எழுதி; காமன் கருப்பு சிலையும் மலர் அம்பும் தேரும் ஒருப்பட்டு உடன் எழுதும் போதில் - காமனுடைய கரும்பு வில்லும் மலர்க்கணைகளும் தேரும் (தோன்ற) மனம் ஒன்றுபட்டு எழுதிக் கொண்டே இருக்கும்போது; விருப்பு ஊரும் தேன் அமரும் அம் கொன்றை தார் தீர்த்தன் சிவலோகன் - (எவர்க்கும்) விருப்பம் ஊற் றெடுக்கும் தேன் நிறைந்த அழகிய கொன்றை மாலை சூடிய தூயோனாகிய சிவபெருமான்; வான மால் ஏற்றின் மேல் வந்து அணைய - சிறந்த மதர்த்த விடையின் மேல் (அமர்ந்து தான் இருக் கும் அவ்வழியே) உலாவர (நோக்கி); தான் அமர நன்று அறிவார் சொன்ன நலம் தோற்று-தான் வாழ்வதன் பொருட்டு (கல்வி கேள்விகளால்) நலத்தை அறிந்த மேலோர் அருளிய நலம் இழந்து; நாண் தோற்று-நாணம் இழந்து; நின்ற அறிவு தோற்று - (எஞ்சி)

இருந்த அறிவையும் இழந்து ; நிறை தோற்று - நிறைவுடைமையை யும் இழந்து ; நன்றாக-மிகுதியாக ; கை வண்டும் ஓட-கையில் உள்ள வளையல்களும் கீழ் விழ ; கண் வண்டும் ஓட - கண்களாகிய வண்டும் (அதாவது கருவிழியும் காதளவு) ஓட ; கலை ஓட- ஆடையும் (ஒரு தலைக் காமத்தால்) அவிழ்ந்து விழ ; நெய் விண்ட பூங் குழலாள் நின்று ஒழிந்தாள்-நெய்ப்பு மிக்க மலரணிந்த கூந்தலையுடைய அப் பெதும்பை (விடைமேல் உள்ள பரமனைக் கண்டு) நின்றபடியே தன்னை மறந்தவள் ஆயினாள், (எ-று).

ஐந்து வயதிலிருந்து ஏழு வயது வரை பேதைப் பருவ மெனின், எட்டு வயதிலிருந்து பதினொரு வயது வரை விளங்குவது பெதும்பைப் பருவம். அப் பருவம் மேனியில் புதியதொரு பேரொளியைத் தோற்றுவிப்ப தாகலின், 'பேரொளிசேர் காட்சி பெதும்பைப் பிராயத்தாள்' என்றார். சாயலும் நீல நிறத்தை நினைவுறுத்துகிறது. குழையணிந்த செவி யிரண்டும், சேல் என்னப் பிறழும் கண் இரண்டும், கொவ்வைக் கனியென்னப் பிறங்கும் திருவாயும், முத்தம் அன்ன பற்களும், வில்லென்ன வளைந்திருக்கும் புருவமும், சுட்டியும், பவளநிறத் திலதமும் கமலம் அன்ன அவள் முகத் தில் காட்சித்தாய் இருத்தலின், 'தாமரை ஒன்றின், இரண்டு குழை இரண்டு கெண்டை ஓர் செந்தொண்டை முத்தம் சிலை சுட்டி பவளம் வைத்தது போலும் முகத்தாள்' என்றார். அம் மதிமுகத்தாளின் கரத்திற் கங்கணமும் காலிற் கிண்கிணியும் ஒலிக்கின்றது ; அழகிய சேலை ஒசிகின்றது ; உடலெலாம் சந்தனக் குழம்பு ; பேதைப் பருவத்தில் இல்லாத இருதனங் கள் இவ்வமயம் பின் மலையென வளர்தற்கு அறிகுறியாக மேடு இட்டு உளது ; கூந்தலில் மணம் வீச மாலையும் சூடி யுளள் ; சோலைக் கிளியென்னக் கொஞ்சிக் கொஞ்சிப் பேசு

கிறாள்; கூரிய வாள் ஒத்த அவள் இரண்டு கண்களும் நோக்கினரைப் பெரிது மனங்கவரும் திண்ணம்; மேலும் அவ் இரு கண்களுக்கு மையும் தீட்டியுளள் எனின், அவ் வழகிற்குஇனி உய்பவர் எவர்? மோதிரமும் அணிந்து தோளிற் கடகம் ஒளிர தோழியர் தொடரப் புறப்பட்டாள்; யாண்டும் முத்துக்கள் பரவிய மணற்பாங்கான இடத்தை அடைகின்றாள்; பேதை போலின்றி காம சாத்திரத்திற் சிறிது நாள் பழகியுளள் ஆகலின், அம்மணலில் அமர்ந்து காமன் உருவம் தோன்றச் சித்திரம் ஒன்று எழுதினள்; பின், அவ்வுருவிற்கு உரிய வில் அம்புறாத்தூணி தேர் முதலியவற்றை எழுதும் அமயம் அவள்மனம் அச்செயலிலேயே படிந்து உளது. முன் உலாவந்த பெருமான் ஞெரேலென அவளுக்கு அண்மையில் செல்கின்றான்; சிறிது தலை நிமிர்ந்து நோக்கினள்; நோக்கிய நோக்கிற்கு விருப்பம் ஊறும் தேன் நிறை கொன்றையணி பரமன் புலனாயினனன்றி, தேவசேனை பூதகணம் வாச்சிய முழக்கம் புலனாகவில்லை; உடனே ஒருதலைக் காதல் மிக, நலனும் நாணமும் அறிவும் நிறைவுடைமையும் வழிவிலக, வளையல்கள் கழன்றதும் ஆடைதான் அவிழ்ந்திட்டதும் அறியாள்; தன்னையும் துறக்கும் தன்மை காமத்தே தங்கிற்றம்மா என்னும் மரபிற்கே இலக்கியமாகி நின்றிட்டாள்.

கிங்கிணி - ஒருவகைக் காலணி; இது கிண் கிண் எனும் ஓசையுடைமை பற்றி வந்த பெயர். தமிழ் ஆயும் பொதியமலைச் சந்தனமென விதந்தார், அதன் அருமைகருதி. கடல்பட்ட இன் அமுதம் என்பதற்கு - கடலில் பிறவா இனிய அமுதம் எனினுமாம். நன்றறிவார் - (இன்னது தீது இன்னது) நலன் என்பதை அறிந்தவர்; "நன்றறி வாரிற் கயவர் திருவுடையர், நெஞ்சத் தவல மிலர்" எனுங் குறட்கு, 'நன்றறிவார் - தமக்கு உறுதியாவன அறிவார்;

உறுதிகளாவன - இம்மை மறுமை வீடுகட்கு உரியவாய புகழ் அற ஞானங்கள்: இவற்றை யறிவார் இவை செய்யா நின்றே மிகச் செய்யப் பெறுகின்றிலே மென்றும், செய்கின்ற இவைதமக்கு இடையூறு வருங்கொல் என்றும், இவற்றின் மறுதலை யாய பழி பாவம் அறியாமை என்பவற்றுள் யாது விளையுமோ என்றும், இவற்றால் கவலை யெய்துவர்' என்று பரிமேலழகர் கொண்ட உரை இங்கு பொன்னே போல் போற்றத் தகுவது. நன்றறிவார் மாதர்தம் இயற்கைச் செவ்வியையும் நாணத்தையும் அறிவுடைமையையும் பெரிது போற்றுவர்; அஃதனைத்தையும் இப்பெதும்பை தற்பரன் எதிரே துறந்தனள் என்க. நாணம் - அச்சம் மடம் பயிர்ப்பு மூன்றிற்கும் உபலக்கணம். அறிவு - இது தகுதி இது தகாமை யென்பதை அறிவுறுத்துவது. நிறைதோற்று எனுமிடத்து, "காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும், நாணுத்தாழ் வீழ்த்த கதவு" என்ற குறள் நினைவுக்கு வருகிறது. மதிமுகம் - முகத்திற்குத் திங்கள் குளிர்ச்சியிலும் அழகிலும் ஒளியிலும் உவமம்; மதி - யாவரும் நன்கு மதிப்பது எனும் பொருளது. காமன் - காமத்தை விளைவிப்பவன்; காமம் - ஆசை. தீர்த்தன் - தூயோன்; வேதாகமங்கட்கு 'தீர்த்தம்' என ஒரு பொதுப்பெயர் உளவாகலின், அவ்வேதாகம உணர்வும் மெய்யறிவும் உடைய இறைவன் தீர்த்தன் எனப்படுவான் எனினுமாம்.

மங்கை

—மொய்கொண்ட

மங்கை பிடங்கடவா மாண்பினள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய வுந்தியாள்—தங்கிய
அங்கைக் கமல மடிக்கமல மானேக்கி
கொங்கைக் கமல முகங்கமலம்—பொங்கெழிலார்
இட்டிடையும் வஞ்சி யிரும்பணைத்தோள் வேயெழிலார்
பட்டுடைய வல்குலுந் தேர்த்தட்டு—மட்டுவிரி

கூந்த லறல்பவளஞ் * செய்யவா யவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவ † லின்முத்தம்—வாய்ந்தசீர்
வண்டு வளாய வளர்வா சிகைசூட்டிக் ‡
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக்—குண்டலங்கள்
காதுக் கணிந்து கனமே கலைதிருத்தித்
தீதில் செழுங்கோலஞ் சித்திரித்து—மாதராள்
பொற்கூட்டிற் பூவையை வாங்கி யதனோடுஞ்
சொற்கோட்டிக் கொண்டிருந்த வேல்வைக்க—ணற்கோட்டு
வெள்ளி விலங்கன்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை § மேல்கொண்டு—தெள்ளியநீர்
தாழுஞ் சடையான் சடாமகுடந் தோன்றுதலும்
* வாழுமே மம்மர் மனத்தளாய்ச்—சூழொளியான்
தார்நோக்குந் தன்னுரு நோக்கு மவனுடைய
ஏர்நோக்குந் தன்ன தெழினோக்கும்—பேரருளான்
தோணோக்குந் தன்றோணோக்கு மவன்மார்பில்
நீணோக்கம் வைத்து நெடிதுயிர்த்து—நாணோக்கா
துள்ள முருக வொழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர்த்தாள்

(ப-ரை.) மொய்கொண்ட மங்கை இடம் கடவா மாண்பினள் - நிறைந்த மங்கைப் பருவம் அகலாத மாண்புடைய ஒருத்தி, வான் இழிந்த கங்கை சுழி அனைய உந்தியாள் - விண்ணில் இருந்து இறங்கிய கங்கையின் நீர்ச்சுழியை ஒத்த கொப்பூழை யுடையவள்; தங்கிய

* செவ்வாயவ் வாயின்கண்
† லின்னமிர்தம்
‡ சூடிக்
§ விடையின்
* வாழவன்மேன்

அம்கை கமலம் - (சாமுத்ரிகப்படி) அமைந்த அழகிய கைகளும் தாமரை ; அடி கமலம் - கால்களும் தாமரை ; மான் நோக்கி கொங்கை கமலம் - மான்போலும் (மருண்ட) பார்வையையுடைய அவளின் தனங்கள் இரண்டும் தாமரை; முகம் கமலம் - திருமுகமும் தாமரை;

பொங்கு எழில் ஆர் இட்டு இடையும் வஞ்சி - மிக்க பேரழகு அமைந்த நெருங்கிய சிறிய இடையும் வஞ்சிக் கொடி ; இரும் பணை தோள் வேய் - பெருமைமிக்க தோள்களும் மூங்கில் ; எழில் ஆர் பட்டு உடைய அல்குலும் தேர் தட்டு - எழுச்சி அமைந்த பட்டாடை உடுத்திய நிதம்பமும் தேரினது தட்டு ; மட்டுவிரி கூந்தல் அறல் - மணம் விரியும் கூந்தலும் கருமணல் ; செய்ய வாய் பவளம் - செவ்விய வாயும் பவளம் ; அவ்வாயில் ஏய்ந்த மணி முறுவல் இன் முத்தம் - அந்தவாயில் பொருந்திய அழகிய பற்களும் சிறந்த முத்துக்கள் (ஆக விளங்கினளாய்) ; சீர் வாய்ந்த வண்டு வளாய வளர் வாசிகை சூட்டி - சிறப்புப் பொருந்தியதும் வண்டுகள் மொய்த்ததும் ஆகிய (மலர்) வளர்ச்சி பெற்ற தொடுமாலையைச் சூட்டிக்கொண்டு ; கண்டி கழுத்தில் கவின் சேர்த்தி - கண்டி (யெனும் ஆபரணத்தை) கழுத்தில் அழகுபெறச் சேர்த்து ; குண்டலங்கள் காதுக்கு அணிந்து - குண்டலங்களைச் செவியில் அணிந்து ; கன மேகலை திருத்தி தீது இல் செழும் கோலம் சித்திரித்து - பெரிய மேகலையைத் திருத்தமுற உடுத்தி குற்றம் இல்லாத செழுமையான (இயற்கை அழகுடன்) சிறந்த செயற்கை யழகையும் செய்து; மாதராள் - (பின்) அம்மங்கை நல்லாள் ; பொன் கூட்டில் பூவையை வாங்கி - பொன்னால் ஆகிய கூட்டில் இருந்த நாகணவாய்ப் பறவையை (கையில்) எடுத்து ; சொல் கோட்டிக்கொண்டு இருந்த ஏல்வைக் கண் - (அதற்கு) சொற்களை (ப்பேசப்) பழக்கிக்கொண்டிருந்த சமயத்தில் ;

நல் கோட்டு வெள்ளி விலங்கல் மேல் வீற்றிருந்த ஞாயிறு போல் ஒள்ளிய மால் விடையைமேல் கொண்டு - சிறந்த சிகரங்களை யுடைய வெள்ளிமலையின் மேல் எழுந்தருளி யிருந்த பரிதிபோன்று

தூய்மையுள மதர்த்த விடைமேல் அமர்ந்து (உள்ள); தெள்ளிய நீர் தாழும் சடையான் சடா மகுடம் தோன்றுதலும் - தெளிவான கங்கை தங்கிய சடையுடைய (உலாவந்த) சிவபிரானது சடைமுடி (அம்மங்கையின் எதிரே) தோன்றுதலும்; வாழுமே - (உணர்வொடு) வாழ்வாளோ? (எனவே, உணர்வை இழப்பள் என்றபடி). மம்மர் மனத்தளாய்-மயக்கம் கொண்ட மனத்தை உடையவளாகி; சூழ் ஒளியான் தார் நோக்கும்-பேரொளி சூழ்ந்த வடிவினனாகிய பெருமான் (சூடிய) மாலையை நோக்குவாள்; தன் தாரும் நோக்கும்- தனது மாலையையும் நோக்குவாள் (அதன்பின்); அவன் ஏர் நோக்கும் தன்னது எழில் நோக்கும் - அப்பரமனுடைய எழிலை நோக்குவாள் தன்னுடைய எழிலையும் நோக்குவாள்; பேர் அருளான் தோள் நோக்கும் தன் தோளும் நோக்கும் - பெருங்கருணைப் பெருமானது தோள்களை நோக்குவாள் தனது தோள்களையும் நோக்குவாள் (இங்ஙனம் பலமுறை ஒப்பு நோக்கிய பின்); அவன் மார்பில் நீள் நோக்கம் வைத்து - அப்பரமன் திரு மார்பில் நீண்ட (நேரம்) பார்வையைச் செலுத்தி; நெடிது உயிர்த்தாள் - (அவன் கலப்பு எளிதில் கிடைக்குமோ என எண்ணிய ஏக்கத்தால்) பெரு மூச்சு விட்டாள்; நாண் நோக்காது-(பெண்களுக்கு உரிய) நாணத்தையும் கவனியாது; உள்ளம் உருக - மனம் உருக; ஒழியாத வேட்கையாம் வெள்ளத்திடை அழுந்தி வெய்து உயிர்த்தாள் - நீங்காத ஆசை வெள்ளத்தில் அழுந்தி வெம்மை தோன்ற (மீட்டுமொருமுறை) பெருமூச்சு விட்டு நின்றனள், (எ - று).

மங்கைப் பருவம் பன்னிரண்டிலிருந்து பதின்மூன்று வயது வரை குறிக்கப் பெறுவது. கமலக் காடு பூத்தனைய முகமும் கைகளும் கால்களும் முலைகளும் தாமரை மயமாக விளங்குகின்ற தையலாள்; வஞ்சிக் கொடியே ஆகித் துவளும் இடையுடைய வனிதை; மூங்கில்களே இவை எனத் தக்க தோளினள்; கூந்தற்கும் கருமணற்கும் வேறுபாடு

தோன்றுதாள்; பவளத்தால் செய்ததோ எனத்தக்க வாயாள்; முத்தமே எனத்தக்க பல்லாள் ஆகிய இம்மங்கை, மாலை சூட்டிக் கொள்கிறாள்; கழுத்திற்கு அழகு செய்யக் கண்டிகையையும் செவிகளுக்கு அணிசெய்யக் குழைகளையும் அணிந்து கொள்கிறாள்: உடுத்தி யுள்ள மேகலை சிதையா வண்ணம் திருத்தமுறச் செய்கின்றாள்; இயற்கைக் கோலத்துடன் இத்தகைய செயற்கைக் கோலமும் செய்துகொண்ட பின்னர், கூண்டில் உறையும் மைனாவைக் கையில் எடுத்து சிவ சிவ; சங்கர!! மாதேவா!! என்னும் சிவநாமச் சொற்களைக் கற்றுக் கொடுத்தபடியே இருக்கின்றாள்; ஞெரேலெனத் தேவகங்கை படிந்திருக்கும் சடைமுடி அவள் கண்களுக்குத் தரிசனமாயது; கங்கை பாவத்தைக் கழுவுவதற்கு அறிகுறி. அக்கங்கை தங்கிய சடைமுடியைத் தரிசித்ததன் பயனென்ன வெள்ளிமலை யென விளங்குகின்றது விடை; அதன்மேல் வீற்றிருக்கும் பரிதி யென விளங்குகின்றான் பரமன்; அமலனையே எண்ணும் அறிவினளாய இத்தலைவி அவனை நேரே கண்டபின் எங்ஙனம் தரிப்பாள்; மயங்கியது மனம்; அவ்வண்ணலுக்கும் தனக்கும் பொருத்தம் உளதோ என்று ஆராய்வாள் போல அவன் அணிந்துள்ள மாலையை நோக்கிப் பின் தான் அணிந்துள்ள மாலையையும் நோக்குகிறாள்; அவன் அழகு நோக்குவாள் பின் தன் அழகும் நோக்குவாள்; அருள் தன்மையை ஆளும் அவன் திருத்தோளை நோக்கிப் பின் தன் தோளும் நோக்குவாள்; அப்பெருந்தகையின் மார்பகத்தில் தன் பார்வையை நெடிது நேரம் நிறுத்தினாள்; பெருமூச்சு விடுகிறாள்; உள்ளம் உருகுகின்றது; உருகிய உள்ளத்திலிருந்து நீங்குதல் இல்லாக் காதல் எனும் வெள்ளம் பெருகுகிறது; அவ்வெள்ளத்தில்

அழுந்திவிட்டாள்; அவன் தொடர்பின்றி இனி உய்ய வகையில்லை யென்பதை மீட்டும் அவள் விடும் வெப்பமான பெருமூச்சு காட்டுகின்றது.

'வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல் ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு' என்னும் அடிகள் பக்குவிகளின் உளங்கரைத்து இன்பக் கண்ணீரைப் பெருக்குவிக்கும் திண்ணம்.

"பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி
பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை
வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை
தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய
ஈசனுக்கே."

எனவரும் இவர் பாடிய பொன்வண்ணத்தந்தாதி ஈண்டு நினைவுக்கு வருகிறது.

## மடந்தை

—ஒள்ளிய
தீந்தமிழின் றெய்வ வடிவா டிருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தா—ளேய்ந்தசீர்
ஈசன் சிலைபு மெழில்வான் பவளமுஞ்
சேய்வலங்கை வேலுந் திரண்முத்தும்—பாசிலைய
வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோன் மண்டலமு—மெஞ்சாப்
புருவமுஞ் செவ்வாயுங் கண்ணு மெயிறும்
உருவ நுசுப்பு மென்றோளு—மிருவினிய
கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்

பங்கயப் போதனைய சேவடியா—ளொண்கேழல்
வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய வல்குலா—ளூழித்
திருமதிய மற்றொன்ற மென்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போற்—பெருகொளிய
முத்தாரங் கண்டத் தணிந்தா ளணிகலன்கள்
மொய்த்தார வார மிகப்பெருகி—வித்தகத்தால்
கள்ளுங் கடாமுங் கலவையுங் கைபோந்திட்
டுள்ளும் புறமுஞ் செறிவமைத்துத்—தெள்ளொளிய
காளிங்கஞ் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாம நுதல்சேர்த்தித்—தோளெங்குந்
† தண்ணாறுஞ் சந்தனங்கொண் டப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் ‡ பெறமிசையே மட்டித்தாங்—கொண்ணுதலாள்
தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறி
பின்னுமோர் காமரம் யாழமைத்து—மன்னும்
விடவண்ணக் கண்டத்து வேதியன்மே லிட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண்—டடல்வல்ல
வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க் கெஞ்ஞான்று
மால்வல்லா னூர்கின்ற மால்விடையின்—கோல
மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணியேறு தோளானைக் கண்டாங்—கணியார்ந்த
கோட்டி யொழிய வெழுந்து குழைமுகத்தைக்
காட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி—நாட்டார்க

---

† தண்ணுறுஞ்

‡ பெறவிரையே

ளெல்லாருங் கண்டா * ரெனக்கடவு ளிங்காய
நல்லாய் படுமேற் படுமென்று—மெல்லவே
செல்லலுறுஞ் சரணங் கம்பிக்குந் தன்னுறுநோய்
சொல்லலுறுஞ் சொல்லி முடைசெறிக்கும்—நல்லாகங்
காணலுறுங் கண்க ணீர்மல்குங் † காண்பார்முன்
நாணலுறு நெஞ்சு மொட்டாது—பூணுகம்
புல்லலுறு மண்ணல்கை வாராளென் றிவ்வகையே
அல்லலுறு மழுந்து மாழ்துயரான்—மெல்லியலாள்
தன்னுருவம்பூங்கொன்றைத்தார்கொள்ளத்தான்கொன்றைப்
பொன்னுருவங் கொண்டு புலம்புற்றாள்

(ப-ரை.) ஒள்ளிய தீம் தமிழின் தெய்வ வடிவாள் - தூய்மையுள (பொருள்துறை நிரம்பிய) இனிய தெய்வத் தமிழின் வடிவினளான; திருந்திய சீர் வாய்ந்த மடந்தை பிராயத்தாள் - திருத்தமான சிறப்பு அமைந்த மடந்தைப் பருவம் உடையவள் ஒருத்தி; ஈசன் சிலையும் - சிவபிரான் வில்லையும்; எழில் வான் பவளமும் - எழில் மிக்க பவளத்தையும்; சேய் வலம் கை வேலும் - முருகப்பிரான் வலக் கரத்து உள்ள வேற்படையையும்; திரள் முத்தும் - திரட்சியான முத்துக்களையும்; பாசு இலைய வஞ்சியும் - பசிய இலைகள் உள்ள வஞ்சிக் கொடியையும்; வேயும் - மூங்கிலையும்; வளர் தாமரை மொட்டும் - வளர்ந்த தாமரை யரும்பையும்; மஞ்சில் வரும் மா மதி மண்டலம் போலும் - மேகத்தின் (மேல்) வரும் சிறந்த சந்திர மண்டலத்தையும் (முறையே) ஒத்து உள்ள; எஞ்சா - தோலாத; புருவமும்-, செவ்வாயும் - சிவந்த வாயும்; கண்ணும்-, எயிறும் - பற்களும்; உருவ நுசுப்பும்-சிறுத்த இடையும்; மெல் தோளும்-, மருவு

---

* ரெனைக்கடவு

† கண்காண்பார்

இனிய கொங்கையும் - சேர்ந்திருக்கும் இனிய தனங்களும்; வாள் முகமுமா கொண்டாள் - ஒளியுடைய முகமுமாகக்கொண்டு இருப்பவள்; பங்கயப்போது அனைய சேவடியாள் - தாமரை மலரை ஒத்த சிவந்த பாதங்களை யுடையவள்; ஒள் கேழல் வாழைத் தண்டு அன்ன குறங்கினள் - ஒள்ளிய நிறம் உள்ள வாழைத் தண்டை ஒத்த தொடையை யுடையவள்; சீர் வாய்ந்த ஆழி தேர் தட்டு அனைய அல்குலாள்-சிறப்பு அமைந்த சக்கரங்களையுடைய தேர்த்தட்டைப் போன்ற நிதம்பத்தை யுடைய அம்மங்கை;

ஊழி மற்று ஒன்று திருமதியம் ஆம் என்று உரு உடைய நாள் மீன் முகத்தை சூழ்ந்தாற்போல் - முறையாக வளர்ந்த வேறு ஒரு முழுத்திங்கள் போலும் என்று (மயங்கி) நிறமுடைய விண்மீன்கள் (அவள்) முகத்தைச் சூழ்ந்திருப்பதுபோல; பெருகு ஒளிய முத்து ஆரம் கண்டத்து அணிந்தாள் - மிக்க ஒளிசெய்கின்ற முத்துமாலைகளைக் கழுத்தில் அணிந்தாள்; அணிகலன்கள் மொய்த்து ஆரவாரம் மிக பெருகி - (மற்ற) ஆபரணங்களையும் நிரம்ப அணிந்து (அவ் ஆபரணங்களால் ஆகிய) பேரொலியை மிகுதியாகத் தோற்றுவித்து; வித்தகத்தால் கள்ளும் கடாமும் கலவையும் கைபோந்திட்டு - அறிவின் திறமையால் தேனையும் மான் மதத்தையும் கலவைச் சாந்தையும் (யாவர்க்கும் தோன்றாதபடி) பூசி; உள்ளும் புறமும் செறிவு அமைத்து - உள்ளத்தும் புறத்தும் நிறைவு கொண்டு; தெள் ஒளிய காளிங்கம் சோதி கிடப்ப தொடுத்து - தெளிந்த ஒளியினையுடைய கலிங்கதேயப் பட்டுச்சேலை மிக்கு ஒளிர உடுத்தி; அமைத்த தாளிம்ப தாமம் நுதல் சேர்த்தி - பொருந்திய நுதலணி வரிசைகளை நெற்றியில் சேர்த்து; தோள் எங்கும் தண் நறும் சந்தனம் கொண்டு அப்பி - தோள் முழுதும் குளிர்ந்த மணம் வீசும் சந்தனத்தை எடுத்துப் நிரம்பப் பூசி; ஒள் நுதலாள் சதிர் சாந்தை வண்ணம் பெற மிசையே மட்டித்து ஆங்கு - ஒளியுடைப் புருவம் உள்ள (அம்) மடந்தை நல்லாள் அழகிய கூட்டுச் சாந்தைப் பொலிவுபெற மேலெல்லாம்அப்பிய வண்ணம்;

தன் அமர் தோழியர்கள் சூழ தவிசு ஏறி - தன்னை விரும்பிய தோழிகள் சூழ்ந்திருக்க (ஒரு) பீடத்தில் அமர்ந்து ; பின்னும் ஓர் காமரம் யாழ் அமைத்து - (உணர்வை) ஒருமுகப் படுத்துகின்ற ஒப் பற்ற சீகாமரம் (என்னும் பண்ணை) வீணையில் சேர்த்து ; மன்னும் விடை வண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட மடல் வண்ணம் பாடும்பொழுது - பொருந்திய அழகுடைத்தான திரு நீலகண்டப் பெருமான்மேல் பாடியுள்ள மடல் வண்ணம் (எனும் பிரபந்தத் தைப்) பாடிக்கொண்டே இருந்த அமயம் ;

ஈண்டு அடல் வல்ல வேல் வல்லான் - நெருங்கி வெல்லும் வன்மை வாய்ந்த வேற்படை (யேந்திய) வல்லாளன் ; வில் வல் லான் - வில்படை (யேந்திய) வல்லாளன் ; மெல்லியலார்க்கு என் ஞான்றும் மால் வல்லான் ஊர்கின்ற மால் விடையின் கோல மணி யேறு கேட்டு - மென்மை இயல்புள மாதரார்க்கு எக்காலத்தும் (காம) மயக்கம் செய்யும் வல்லாளன் ஏறிச் செலுத்துகின்ற மதர்த்த விடையின் (கழுத்திற் கட்டிய) அழகிய மணியின் பேரோசையைக் கேட்டதும் ; ஆங்கு சால நோக்குவாள் - (ஓசை உண்டான) அவ் விடத்தை உற்றுப் பார்த்தவள் ; அணி ஏறு தோளானை கண்டாங்கு- அழகு மிக்க தோள்களையுடைய (உலாவந்த) பரமனை (கண்டாள்) கண்டதுமே;

அணி ஆர்ந்த கோட்டி ஒழிய எழுந்து - பொலிவு நிறைந்த கூட்டத்தை விட்டு எழுந்து ; குழை முகத்தை கோட்டி - குழைவு உடைய முகத்தைப் (பொலிவு குன்றச்) சுளித்து ; நுதல் சிவப்ப - நெற்றி சிவப்பேற ; வாய் துலக்கி - வாய் திறந்து ; (தோழியை நோக்கி,) நல்லாய் - சிறந்த தோழியே !; என் அக்கடவுள் இங்கு ஆய - அந்த எனது பெருமான் இவ்விடத்தில் வந்ததை ; நாட்டார் கள் எல்லாரும் கண்டார் - ஊரார் அனைவரும் நோக்கினர் ; படும் மேல் படும்-(இனி, நம்மைப் பிரிந்து ஏய்க்கமாட்டான் ;) நம் பக்கலி லேயே இருப்பான், எதிர் காலத்தும் இருப்பான் ; என்று மெல்லவே செல்லல் உறும் - என்று (இவ்வண்ணம் தோழியிடம் சொல்லிக்

கொண்டே) மெதுவாக (ப்பரமனை நோக்கிச்) செல்ல அடியெடுத்து வைப்பாள், சரணம் கம்பிக்கும் - (நடக்கும் போதே இரண்டு) கால்களும் நடுக்கம் அடைவாள்; தன் உறு நோய் சொல்லல் உறும் - தனக்கு நேர்ந்த (காதல்) நோயை (த் தோழியிடம்) சொல்லத் தொடங்குவாள்; சொல்லி முடை செறிக்கும் - சொல்லி (அச் சொல்லுக்கும்) தடை நேர்ப்படுத்திக் கொள்வாள்; நல் ஆகம் காணல் உறும் - (இறைவனது) சிறந்த திருமார்பை காணத் தொடங்குவாள்; கண்கள் நீர் மல்கும் - (கண்ட அளவில் அம்மார்பு அணைப்புத் தனக்கு வாயாதோ என்று) கண்களில் நீர் நிரம்பப் பெருக்குவாள்; காண்பார் முன் நாணல் உறும் - (உலாவந்த பெருமானைக் கண்டவுடன் எழுந்து வந்து தான் அடைந்த மாறுபாட்டை) நோக்குவார் எதிரில் (பெரிது) நாணங்கொள்வாள்; நெஞ்சம் ஒட்டாது - (அதன்பின்) மனம் பொருந்தாது (தன்னை விட்டுத் தலைவனை நோக்கி ஓடியதும்); பூண் ஆகம் புல்லல் உறும் - (மயக்கத்தால் சிவபிரானை வந்ததாகவும் தான் அவனை அணைகின்ற ஆர்வமும் தோன்ற) ஆபரணம் அணிந்த (தன்) மார்பை(த் தானே) தழுவுவாள்; (பின் நிகழ்ச்சி யறிந்து;) அண்ணல் கை வாரான் என்று இவ்வகையே அல்லல் உறும் - பெருமான் (தன்) கைக்கு அகப்படான் என்று (எண்ணி) இவ் வண்ணமே (பெரிது) வருந்துவாள்; ஆழ் துயரால் அழுந்தும் மெல்லியலாள் - மிக்க துன்பத்தால் நைகின்ற அம் மடந்தை; தன் உருவம் பூங் கொன்றை தார் கொள்ள - தனது தேகத்தில் (அப் பரமனது) கொன்றை மலர் மாலையைச் சூட்டிக்கொள்ள நினைத்து (அதன் பயனே எனும்படி); தான் -, கொன்றை பொன் உருவம் கொண்டு புலம்புற்றாள் - (தான் உடம்பெலாம் பசலைபரவியதேயல்லால்) கொன்றையின் பொன்னிறத்தை அடைந்தவளாய்க் கதறலானாள், (எ-று).

பெரு மூச்சுடன் மங்கை நிற்க ஆங்கிருந்து விரைந்து சென்றது விடை; மற்றோர் புறம் மடந்தை ஒருத்தி நிற்

கின்றாள்; பதினொன்கிலிருந்து பத்தொன்பது வயதினள் இவள்; உன்ன வுன்ன இன்பம் சுரக்கும் தெய்வத் தமிழின் சாயல்கொண்ட இந் நல்லாள், ஈசன் வில்லைப் புருவமென்ன முருகப்பரமன் வேற்படையைக் கண்ணென்ன பவளத்தை வாயென்ன முத்துக்களைப் பற்களென்ன வஞ்சிக் கொடியை இடை யென்ன, மூங்கிலைத் தோளென்ன தாமரை அரும் பைத்தனமென்ன மதி மண்டலத்தை முகமென்னக் கொள்வ ளெனில், பங்கயப் போதென்னும் சீறடியும் வாழைத் தண் டெனும் தொடையும் தேர்த்தட்டொத்த அல்குலளுமான இவள் இயற்கை யழகை என்னென்று உரைப்பது; உரைக்க வேண்டுமெனில் 'தீந்தமிழின் தெய்வவடிவாள்' என்ற அப்பெருமாக் கோதையாரே ஈண்டு வேண்டப் பெறுவர். இதன்மேல் தனக்குச் செயற்கைக் கோலமும் செய்து கொள்ள முயல்கின்றாள்; பேரொளி வீசும் முத்து மாலை யைக் கழுத்திலணிந்து கொள்கின்றாள்; முகப் பொலிவும் அம் முத்து மாலையும், இது மதியமென மயங்கிய விண் மீன் கள் வந்து மொய்த்துளவோ என உளது. அதன் மேலும் கலகலவென ஒலிக்கும் பிற ஆபரணங்களைப் பெரிதும் அணிகின்றாள். தேன் மகரந்தம் கலவைச்சாந்து மூன்றை யும் கலந்துகொள்கிறாள்; புறத்தில் ஆடையணி நிறைவு, அகத்தில் கற்பு நிறைவு; மேலும், கள் குடித்தவன் இன்பம்; மதம் பிடித்த யானையின் மறதி; கலப்பின் இன்பம் மூன்றை யும் உடையாளெனினும், வித்தகத்தால் உள்ளும் புறம்பும் அடைந்த மாறுபாடு ஒருவர்க்கும் தோன்றா வண்ணம் அடக் கியுளள்; நீல நிற ஒளி காட்ட மணிகள் பதித்துச்செய்த நுதல ணியை அணிகின்றாள்; தோள் முழுதும் சந்தனத்தை அப்பி அதன்மேல் கூட்டுச் சாந்தும் பூசுகிறாள்; தோழியர்கள்

புடைசூழ வந்து ஓர் பீடத்தில் ஏறி அமர்கின்றாள். நீலகண்டத் திறைவன் மேல் பாடிய திருமடல் என்று ஒரு பிரபந்தம் உளது. அப்பரமன் என்னை மணவானேல் யான் மடலூர்வேன் என்னும் கருத்தை அடக்கியுள்ள அந்நூல் சந்தமயமாக உளது. சிவத்தையே காதலிக்கும் அம்மடந்தை சீகாமரம் என்னும் பண்ணை யாழில் சேர்த்து அம்மடல் பிரபந்தத்தைப் பாடிக்கொண்டே இருக்கின்றாள்; திடீரென்று கண கண கண என்று மணியின் பேரோசை கேட்கின்றது. நிறைந்த வெற்றியில் வல்ல வேல் ஏந்திய வல்லாளன்; மேருவில் ஏந்து வன்மையன்; என்றைக்கும் மாதரார்க்கு மயலூட்டும் திறத்தான் ஊர்ந்து வரும் பேரிடபத்தின் மணியோசை அது எனுமிதை அறியாள் எனினும், என்னிது மணியோசையென ஏறிட்டு நோக்கினாள்; நோக்கிய ஆங்கே விடைமீதமர்ந்த அணியேறு தோளானைக் கண்டாள்; கண்டதும் அவ்வழகிய மாதரார் கூட்டத்தை விட்டு விரைந்தெழுந்தாள்; பலர் கூடியிருப்பது தான் எண்ணிய நினைவிற்கு இடையூறாம் என வுன்னி நெற்றி சிவப்பேற அவ்வளவு முகம் சுளித்தாள்; பக்கத்திலிருந்த பாங்கியை நோக்கி, இங்குள்ள மாதராரிற் சிறந்த உயிர்த்தோழியே! எனது உள்ளத்திருக்கும் அந்த தெய்வத்தை நாட்டில் உள்ள யாவருமே நோக்கினர்; எனது எண்ணம் கை கூடினும் கூடும் என்றுரைத்து, அப்பரமனை அணுகற்குச் சனத்திரளை விலக்கிய வண்ணம் செல்லத் தொடங்கினாள்; அடிபெயர்த்தற்குள் கால்கள் இரண்டும் நடுங்குகின்றன; நான் இனி தலைவன் இணக்கமின்றி உய்யேன் உய்யேன் எனத் தன்காதல் நோயை வாய்திறந்து கூறுகிறாள்; அதையேனும் ஓயாது சொல்லினளா? அந்தோ! சொல்லும் தடைப்பட நாக்குழறுகிறது; அமலன் மார்பகத்தை நோக்கு

கிருள்; கண்ணீர் பெருகுகிறது; பெருமான் உருவெளித் தோற்றம் தன் அண்மையில் தெரிய, அவ்வுருவைத் தன் மார்புடன் சேர்த்துத் தழுவுகிருள்; தனது வெறும் மார் பகத்தைத்தான் தன்கையிரண்டும் தழுவியது என்பதை யறிந்தபின், இது உருவெளித்தோற்றம் என்று உணர்கின் ருள்; தனது நிலையை யாவரும் நோக்குவதை அறிகிருள்; சகித்தற்கரிய நாணம் அடைகிருள்; மனம் சகியாளாய், அணி பல அணிந்த தனது மார்பம் தழுவுதற்குப் பெருமையிற் சிறந்த அவ்விறைவன் அகப்படான் என எண்ணினளாய் இங்ஙனமே வருந்துகிருள்; ஆழ்ந்த துயரத்தில் அழுந்தி விட்டாள் பாவம்; இத்தனைக்கும் அப்பரமன் தான் அணிந்த கொன்றையையேனும் நல்கினனு? இல்லையே; அம்மாலையை தன் மேனியில் சூட்டிக்கொளற்கு விழைந்த அவள் உணர் வின் பயனென்னப் பரவிய பசலையால் உடலெல்லாம் கொன்றை மலரின் பொன்னிறமாக, யாதே என் கதி என்ன வாய் திறந்து கதறலானுள்.

'தீந்தமிழின் தெய்வ வடிவாள்' என்றது இன்பமயமான சாயலை உணர்த்திற்று. ஒன்று சேர்ந்த தனங்கள் பெற்றமையின் 'மருவினிய கொங்கை' என்ருர். சேய் - முருகன்; செம்மை யெனும் பண்புப் பெயர் ஈறு கெட்டு முதனீண்டு முன்னின்ற மகர மெய் யகரமெய்யாகத் திரிந்தது. இப்பெயர், செந்நிறமுடையான், இளமையன், சிவகுமரன் எனும் பொருள் தரும். பங்கயம்-பங்கஜம்; சேற்றில் முளைப்பது எனுங் காரணக் குறி: [பங்கம் - சேறு; ஜம் - தோன்றுதல்]. குறங்கு - தொடை; "நெடிய ஊரு குறங்கு நீள் வாமம் கவான் தொடைப்பேர்" என்பது நிகண்டு. மஞ்சில்வரு மா மதிபோல் மண்டலம் - புறங்கழுத்தைக் கவ்விப் பாரமாக உள்ள கூந்தலைச் சேர்ந்து விளங்கும் முகத்தைக் குறித்தது. உருவ

நுசுப்பு என்ற விடத்து வந்த உரு - மிகுதியின் மேற்று ; பிறங்கல், புதுமை எனினுமாம். வேதியன்-வேதங்களை அருளியவன் ; வான வருள் அந்தணன் சிவபிரானே யாம். படுமேல் படும் என்பதற்கு - (எம் இறைவனை யாவரும் நோக்கினராகலின்,) மென்மேலும் கண் ணெச்சில் படும்போலும் என்று நைகின்றவளாயினள் எனினுமாம்.

அரிவை

—பின்னொருத்தி
செங்கேழற் றாமரைபோற் சீறடியா டீதிலா
அங்கே ழரிவைப் பிராயத்தா—ளொண்கேழல்
திங்களுந் தாரகையும் வில்லுஞ் செழும்புயலுந்
தங்கொளிசேர் செவ்வாயு முண்மையாற்—பொங்கொளிசேர்
மின்னார்வான் காட்டு முகவொளியாண் மெய்ம்மையே
தன்னுவா ரில்லாத் தகைமையா—ளெந்நாளும்
இல்லாரை யெல்லாரு மெள்குவார் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ்—சொல்லாலே
அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தா ளணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து—நல்கூர்
இடையிடையே யுள்ளுருகக் கண்டா ளெழிலார்
நடைபெடை யன்னத்தை வென்று—ளடியிணைமேற்
பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடக முன்கை தொடர்வித்தாள்—கேடில்சீர்ப்
பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள்—* பொன்னனாள்
இன்னிசை வீணையை வாங்கி யிமையவர்தம்
அண்ணன்மேற் றனிட்ட வாசையான்—முன்னமே

* பொன்னனியின்

பாட ரொடுங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேற் றோன்றுதலுங்—கூடிய
இன்னிசையு மிப்பிறப்பும் பேணு மிருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப்—பொன்னனையீர்
இன்றன்றே காண்ப தெழினலங் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று—சென்றவன்றன்
ஒண்களப மாடு மொளிவாண் முகத்திரண்டு
கண்களப மாடுவபோற் கட்டுரைத்—தொண்கேழற்
கூந்த லவிழ்க்கு முடிக்குங் கலைதிருத்துஞ்
சாந்தந் திமிரு முலையார்க்கும்—பூந்துகிலைச்
சூழு மவிழ்க்குந் தொழுமழுஞ் சோர்துயருற்
றூழு மழுந்து † மயர்வுயிர்க்குஞ்—சூழொளிய
அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை யிவளு நலந்தோற்றாள்

(ப-ரை.) பின் செம் கேழல் தாமரை போல் சீறடியாள் - பிறகு சிவந்த நிறம் உள்ள தாமரை போன்ற சிறிய பாதங்களை யுடையவளான; தீது இலா அம் கேழ் அரிவை பிராயத்தாள் ஒருத்தி - குற்றம் இல்லாத அழகிற் சிறந்த அரிவைப் பருவம் உடைய ஒருவள்;

ஒள் கேழல் திங்களும் - ஒண்மை நிறம் உள்ள மதியமும் (இது நுதலைக் குறித்தது); தாரகையும் - விண்மீன்களும் (இது முத்து மாலையையும் பல் வரிசையையும் குறித்தது); வில்லும் - வான வில்லும் (இது புருவத்தைக் குறித்தது); செழும் புயலும்-செழுமை உள்ள முகில் கூட்டமும் (இது கருத்த கூந்தலைக் குறித்தது); தங்கு ஒளி சேர் செவ்வாயும் உண்மையால் - நிலைத்த ஒளி அமைந்த செவ்வாய்க் கிரகமும் (இது சிவந்த வாயைக் குறித்தது; ஆக இவை

† மவாவுறூஉஞ்

யெல்லாம்) கொண்டு இருத்தலினால்; பொங்கு ஒளி சேர் மின் ஆர் வான் காட்டும் முக ஒளியாள் - மிக்க ஒளிபொருந்திய மின்னல் அமைந்த வானத்திற்கு எடுத்துக் காட்டாக உள்ள திருமுகத்தை யுடையவள்; மெய்ம்மையே தன் ஆவார் இல்லா தகைமையாள் - மெய்ம்மையாகவே தனக்கு ஒப்பானவர் இல்லாத் தகுதியை உடைய வள்; என்றும் இல்லாரை எல்லாரும் எள்குவர் - என்றைக்கும் (பொருள்) இல்லாத ஏழைகளை எத்தகையோரும் இகழ்வர்; செல் வரை எல்லாரும் சிறப்பு செய்வர் என்னும் சொல்லாலே - செல்வம் உடையவர்களை எத்தகையோரும் மதித்து வரவேற்பர் எனப்பெறும் சொற்களை அறிந்திருப்பதனால்; (தனக்கு ஒப்பாவார் இல்லா இயற் கைச் செல்வி யமைந்தவளாயிருந்தும், செயற்கைக்குத்தான் இவ் உலகில் மதிப்புளதெனக் காட்டுவாள்போல்,) அல்குற்கு மேகலையை சூழ்ந்தாள் - நிதம்பத்தைச் சூழ்ந்திருக்கும்படி (மிக உயர்ந்த) மேகலை யைச் சுற்றிக் கட்டினாள் (அஃதோடு அமையாது); அணிமுலை மேல் மல்கிய சாந்தொடு பூண் புனைந்து - அழகிய தனங்களின் மேல் நிரம் பிய (மணம் வீசும் கலவைச்) சந்தனம் பூசி மேலும் (பல) ஆபரணங் களையும் அணிந்து; நல்கூர் இடை இடையே உள் உருக கண்டாள் - (முன்னரேயே உளதோ இலதோ எனும்படி) மிகச் சிறுத்திருந்த இடை (மென்மேலும் ஆபரணங்களை அணிந்த பாரம் தாங்காது) வர வர வருந்தித் தேய்வுற்றது எனும்படிச் செய்தாள்; எழில் ஆர் நடை பெடை அன்னத்தை வென்றாள் - அழகு நிறைந்த நடையால் பெண் அன்னத்தையும் வென்றவள்; இணை அடிமேல் பாடகம் கொண்டு பரிசு அமைத்தாள் - (அன்னத்தை நடையால் வென்ற சிறப்புடைமை கருதி தனது) இரண்டு கால்களில் பாடகம் (என்னும் ஆபரணத்தை பரிசில் தருவாள்போல) எடுத்து சிறப்புற அணிந்தாள்; பல் மணி சேர் சூடகம் முன்கை தொடர்வித்தாள் - பல மணிகள் பதித்த சூடகம் என்னும் வளையை முன்னங்கையில் தொடர்பு உண்டாம்படி அணிந்தாள்; கேடு இல் சீர் பொன் அரி மாலை தலைக்கு அணிந்து - கெடுதி யில்லாப் பெருமை உள்ள

பொன்னரி மாலையைத் தலையில் அணிந்து ; பூண் கொண்டு மன்னும் கழுத்தை மகிழ்வித்தாள் - ஆபரணத்தை எடுத்து (அணிந்து, தக்க ஆபரணம் அணியப் பெற்றேம் என்று எண்ணும்படி) நிறைந்த கழுத்தை மகிழச்செய்தாள்; (எனவே கண்டசரம் முதலிய ஆபரணங்கள் கழுத்திற்கு அலங்காரமாகப் பூட்டப் பெற்றது என்க.)

பொன் அனாள் - (இயற்கை அழகாலும் செயற்கைச் செவ்வியாலும்) திருமகளை ஒத்த அந்த அரிவை ; இன் இசை வீணையை வாங்கி - இனிய இசையையுடைய வீணையை எடுத்து (சுதிகூட்டி) : இமையவர் தம் அண்ணல் மேல் தான் முன்னமே இட்ட ஆசையால் பாடல் தொடங்கும் பொழுதில் - தேவர்களுடைய பெருமான் மீது தான் முன்னரேயே வைத்திருக்கும் காதல் காரணமாகப் பாட்டொன்று பாடத் தொடங்கும் நேரத்தில் ;

பரஞ்சோதி கேடு இலா மால் விடைமேல் தோன்றுதலும் - (சூர்ய சந்திர அக்கினியின் ஒளிகளைக் காட்டினும்) மேலான ஒளிப் பிழம்பினனை உலாவந்த சிவபிரான் கெடுதல் இல்லா மதர்த்த விடைமேல் காட்சி யளித்தலும் ; கூடிய இன் இசையும் - (சுதி கூட்டியபோது) நேர்ந்த நயமான இசையையும் ; இப் பிறப்பும் - இந்த பெண்மைப் பிறப்பையும் ; பேணும் இரும் தமிழும் - மேற்கொண்ட மேன்மையான தமிழையும் ; மன்னிய வீணையையும் கைவிட்டு - நிலைபெற்ற வீணையையும் கை நழுவச் சோர விட்டு ;

பொன் அனையீர் - திருமகளை ஒத்த தோழியர்காள் !; எழில் இன்று அன்றே நலம் காண்பது - அழகு இன்றைக்குத்தான் அல்லவா (பெருமானைக் கண்டதால் ஒப்பற்றதன்) பயனைக் கண்டதாயிற்று ; (இப் பெருமானைக் காண்டற்கு முன் நமக்கு அழகு இருந்தும் அது பயனின்றி இருந்தது அன்றோ என்றபடி.) கொள்ளேனேல் - (இத்தலைவனைக் கணவனாகக்) கொள்ளேனாயின் ; பெண்மை நமக்கு நன்று அன்றே என்று சென்று - (இப்) பெண்மைப்

பிறப்பு நமக்கு (இருந்தும்) பயனில்லை அன்றோ என்று கூறிய படியே (பெருமான் எதிரே நடந்து) சென்று; அவன்தன் ஒள் களபம் ஆடும் ஒளிவாள் முகத்து - அந்த இறைவனுடைய சிறந்த திருநீறு[1] தோய்ந்த மிக்க ஒளியுடைய திருமுகத்தில்; களபம் ஆடுவ போல் இரண்டு கண் கட்டுரைத்து - கலத்தல் செய்வதுபோல இரண்டு கண்களும் (தன்) கருத்தை கூறி; (ஒரு தலைக் காதல் காரணமாக);

ஒள் கேழல் கூந்தல் அவிழ்க்கும் முடிக்கும்-ஒளியுடை (கருத்த) நிறம் வாய்ந்த கூந்தலை அவிழ்ப்பாள் (அவிழ்த்த கூந்தலை மீட்டும் வாரி யெடுத்து) முடிப்பாள்; கலை திருத்தும்-(கலைந்த) ஆடையைத் திருத்தப்படுத்துவாள்; சாந்தம் திமிரும் முலை ஆர்க்கும் - சந்தனம் பூசும் தனங்களை நெருக்குவாள்; பூம் துகிலை சூழும் அவிழ்க்கும் - அழகிய ஆடையை (எடுத்துக்) கட்டுவாள் (கட்டிய ஆடையை மீட்டும்) அவிழ்ப்பாள்; தொழும் - (தலைவனை நோக்கித் தன் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்னும் குறிப்பால்) வணங்குவாள்; அழும் - (தனதெண்ணம் நிறைவேறுதோ என) அழுவாள்; சோர் துயர் உற்று ஆழும் அழுந்தும் - சோர்வடையும்படி யான துன்பம் அடைந்து (அத் துன்பக் கடலில்) ஆழ்வாள் (ஆழ்ந்த அதனிலேயே மீட்டும் கரையேறு வண்ணம்) அழுந்தி விடுவாள்; அயர்வு உயிர்க்கும் - அயர்ச்சியொடு பெருமூச்சு விடுவாள்; சூழ் ஒளிய அம் கை வளை தொழுது காத்தாள் - சூழ்ந்த ஒளியையுடைய அழகிய கை வளையல்களை (கை குவித்துத்) தொழுதமையால் (அவ் வளையல்கள் கீழ் வீழாதபடி) காத்தனள்; (ஆனால்,) கலை காவாள் - (ஒரு தலைக் காமத்தால் உடல் இளைக்க) ஆடையை (நெகிழ்ந்து வீழா வண்ணம்) காக்க முடியாதவள் ஆயினள்; (எனவே,) நங்கை இவளும் நலம் தோற்றாள் - பெண் மக்களிற் சிறந்த இவ் அரிவையும் (தனது பெண்மைக்கு உரிய அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனும்) நலன் அனைத்தும் இழந்தவளாகி நின்றிட்டாள், (எ-று).

இருபது முதல் இருபத்து நான்கு வயது வரை பேசப்பெறும் அரிவைப் பிராயம் உடைய இவ் அணங்கு, பிறை மதியன்ன நுதலும் விண்மீன் அன்ன பல்வரிசையும் வான வில்லன்ன புருவமும் புயலன்ன கூந்தலும் வானத்தில் ஒளிரும் செவ்வாய் கிரகத்திற்கு ஏற்ற பொருள் அமைந்த சிவந்த வாயும் உடைய காரணத்தால் வானமே ஒத்த முகம் உடையவள்; தனது இயற்கைப் பொலிவுடன் செயற்கை யழகும் சிறந்து தோன்ற மேகலை யுடுத்தித் தனத்தின்மேல் சாந்து பூசியவள்; அன்னத்தை வென்ற நடை கருதி அவ்வெற்றிக்கு அறிகுறியாகப் பாடகம் எனும் பணியணிந்த பாதத்தாள்; முன்கையில் வளை யணிந்து பொன்னரிமாலையைத் தலையிற் சூடிக் கண்ட சரம் அணிந்து தெய்வத் திருமகள் போலும் தோற்றம் உடைய இவள் பலகாலம் பரமன்மேல் கொண்டிருந்த காதல், வீணையை யெடுத்துச் சுருதி கூட்டி அவன் பிரிவு ஆற்றுக் கருத்தமைந்த பண் ஒன்றைப் பாட வைக்கின்றது; பாடத் துவக்கு நேரத்தில் விடைமேல் பரமன் வெளியானான்; இவளும் அவனை நோக்கினள். இசையை, பெண்மைப் பிறப்பை, பாடத்துவக்கிய அமுதினும் இனிக்கும் அருந்தமிழை, அப்பாவிற்கு இசை வகையில் துணை செய்யும் கருவியாம் வீணையை, கைவிட்டு எழுந்தனள்; காதல் கைம் மிகுந்த தாகலின் பக்கத்தே தோழியர் உளரா இலரா என்பதையும் ஆய்ந்து ஓய்ந்து பாராளாய் பொன்னனையீர்! என்றாள்; தன்னையே விளிக்கின்றாளா தோழியரைத்தான் அழைக்கின்றாளா என்பதும் தெரிதற்கில்லை;

அழகின் நலத்தை இன்று அன்றோ காண்கின்றோம்; அவனைக் கொள்ளேனுயின் பெண்மைப் பிறப்பால் பயனி

லேயே என்று பித்தங் கொண்டாற் போலப் பிதற்றுகிறாள்: அவள் கண்களிரண்டும் தலைவன் திருநீறு அணிந்த திருமுகத்தில் கலந்து பல பேச்சுப் பேசுகின்றன; வாய்ச் சொற்களே வேறு வேண்டாம்போல் தோன்றுகிறது. கூந்தலை அவிழ்ப்பது முடிப்பது முதல் தொழுவது அழுவது ஈறாக அவள் ஒருதலைக் காதல் காரணமாகப் படும்பாடு சொல்லி முடியா. கை குவித்துக் கும்பிடுவதால் வளையல்கள் கழலவில்லை யெனினும் ஆடை அவிழ்ந்து தன் கோலம் நிருவாணம் ஆனதை அறியாளாய் நலமனைத்தும் இழந்தாளாய் நிற்கின்றாள்.

"இல்லாரை யெல்லாரும் எள்குவர்; செல்வரை யெல்லாரும் செய்வர் சிறப்பு" என்பது வள்ளுவர் பெருமான் வாய்மலர்ந்த திருக்குறள்; இது, பொருட்பாலில் அமைந்த பொருள் செயல்வகை எனும் அதிகாரத்தது; பொது மறையில் மிகப் பழகியவள் இவ் அரிவை யென்பது, அக் குறள் நோக்கறிந்து செயற்கைக் கோலமும் செய்துகொண்டமையால் அறியப் பெறும். பரஞ்சோதி - எல்லா ஒளிகளிலும் சிறந்த ஒளியுடையவன்; அப் பெருமானது திவ்ய தேஜஸில் ஈடுபட்டமை தோன்ற 'பரஞ்சோதி' என்றார். பொன்னளியி னின்னிசை வீணை எனும் பாடத்திற்கு, பொன்னிற வண்டின் இசைபோன்ற இனிய இசையை யுடைய வீணையென்க. கொள்ளேனேல் நன்றன்றே பேண்மை நமக்கு - ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி.

தெரிவை

—அங்கொருத்தி

ஆரா வமுதி னவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தா—ளோரா
மருளோசை யின்மழலை வாய்ச்சொலா * லென்றும்
இருடீர் புலரியே யொப்பா—ளருளாலே

* ளென்றும்

வெப்ப மிளையவர்கட் காக்குதலா லுச்சியோ
டொப்பமையக் கொள்ளு முருவத்தாள்—வெப்பந்தீர்ந்
தந்தளிர்போற் சேவடியு மங்கையுஞ் செம்மையால்
அந்திவான் காட்டு மழகினு—ளந்தமில்
சீரார் முகமதிய மாதலாற் சேயிழையாள்
ஏரா ரிரவி னெழில்கொண்டாள்—சீராருங்
கண்ணார் பயோதரமு நுண்ணிடையு முண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள்—வண்ணஞ்சேர்
மாந்தளிர் மேனி முருக்கிதழ்வா யாதலால்
வாய்ந்த விளவேனில் வண்மையாள்—மாந்த
ரறிவுடையீர் நின்மின்க ளல்லார்போ மென்று
பறையறைவ போலுஞ் சிலம்பு—முறைமையாற்
சீரார் திருந்தடிமேற் சேர்த்தினாள் தேரல்குல்
ஓரா தகலலுறு தென்று—சீராலே
அந்துகிலு மேகலையுஞ் சூழ்ந்தா ளணிமுலைகள்
மைந்தர் மனங்கவரு மென்பதனுன்—முந்துறவே
பூங்கச்சி னுலடையப் பூட்டுவீஇப் பொற்றொடியாள்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி—வாய்ந்தசீர்
நற்கழுத்தை நல்லாரத் தான்மறைத்துக் காதுக்கு
விற்பகருங் குண்டலங்கள் மேவுவித்து—மைப்பகருங்
காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன்
தாவிய வஞ்சனத்தை முன்னூட்டி—யாவரையும்
ஆகுல மாக்கு மழகினு ளன்னமுங்
கோகிலமும் போலுங் குணத்தினு—ளாகிப்
பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய வாகிக்—கலைகாந்
துள்யாது மின்றிப் புறங்கமழ்ந்து கீழ்தாழ்ந்து

கள்ளாவி நாறுங் கருங்குழலா—டெள்ளொளிய
செங்கழுநீர்ப் பட்டுடுத்திச் செங்குங் குமமெழுதி
அங்கழுநீர்த் தாம நுதல்சேர்த்திப்—பொங்கெழிலார்
பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில்—விற்பகிருந்
தோளா னிலைபெறு தோற்றங்கே டாய்நின்ற
தாளான் சடாமகுடந் தோன்றுதலுங்—கேளாய
நாணூர் நடக்க நலத்தார்க் கிடையில்லை
யேணு மொழிக வெழிலொழிக—பேணுங்
குலத்தா ரகன்றிடுக குற்றத்தார் வம்மின்
நலத்தீர் நினைமினீ ரென்று—சொலற்கரிய
சோதி தேவன் சிவனுயிற் றேன்கொன்றைப்
பூவா ரலங்க லருளாது—போவானேற்
கண்டா லறிவ னெனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளர்ந்தோற்றாள்

(ப-ரை.) ஆரா அமுத அவயவம் பெற்று அனைய சீர் ஆர் தெரிவை பிராயத்தாள் அங்கு ஒருத்தி - தெவிட்டாத அமுத (த்தை எடுத்து) அவயவங்கள் (ஆகப் பிரமன் அமைக்கப்) பெற்றிருப்பதை ஒத்த சிறப்பு அமைந்த தெரிவைப் பருவத்தை உடையளாய் (பெருமான் உலாவரும்) வழியில் (உள்ள) ஒருவள்; ஓரா மருள் ஓசை இன்மழலை வாய் சொலால் என்றும் இருள் தீர் புலரியே ஒப்பாள் - நினைக்கத் தகும் மருண்ட ஓசையை யுடைய இனிய மழலை மொழியான வாய்ச்சொற்களால் (குளிர்ந்த தன்மையைச் செய்யும்) இருள் நீங்கிய காலைப் பொழுதை ஒத்தவள்; அருளாலே வெப்பம் இளையவர்கட்கு ஆக்குதலால் உச்சியோடு ஒப்பு அமைய கொள்ளும் உருவத்தாள் - ஆசையால் (காம) வெப்பத்தை இளங் காளைகளுக்குச் செய்தலால் உச்சிப்பொழுதுடன் சமநிலையாகக் கொண்ட உருவம்

உடையவள் ; வெப்பம் தீர்ந்து அம் தளிர்போல் சேவடியும் அம்கை யும் செம்மையால் அந்திவான் காட்டும் அழகினுள் - வெம்மை நீங்கி அழகிய (மாந்) தளிர்போலும் செவ்விய பாதங்களும் உள்ளங்கைகளும் சிவந்திருக்கும் தன்மையால் அந்திப் பொழுதின் சிறப்பைக் காட்டும் அழகினை யுடையவள் ; அந்தம் இல் சீர் ஆர் முகமதியம் ஆதலால் சேயிழையாள் ஏர் ஆர் இரவின் எழில் கொண்டாள் - அழிவு இல்லாச் சிறப்பு நிறைந்த திருமுகம் மதிபோன்று அமைந்திருத்த லால் எழுச்சி நிறைந்த இராப்பொழுதின் அழகைக் கொண்டவள் ; சீர் ஆரும் கண் ஆர் பயோதரமும் நுண் இடையும் உண்மையால் தண் இளம் காரின் சவி கொண்டாள் - சிறப்பு நிறைந்து கரம்பு அமைந்த பயோதரமும் நுண்ணிய இடையும் கொண்டிருத்தலால் குளிர்ந்த இளமையான மேகத்தின் அழகைக் கொண்டவள்; (பயோ தரம் நுண் இடையென்பன, மேகமும் அம்மேகம் உலவும் நுட்பம் உள்ள ஆகாயத்தின் நடுவிடத்தையும், முலை இடுப்பு எனப் பெண்ணை யும் உணர்த்துகின்றது. பயோதரம் - மேகம், முலையென இரு பொரு ளினும் பயின்றதென்க) :

வண்ணம் சேர் மா தளிர் மேனி முருக்கு இதழ் வாய் ஆதலால் வாய்ந்த இளவேனில் வண்மையாள் - நிறம் பொருந்திய மாந்தளிர் போலும் மேனியையும் முருக்கம் பூவின் இதழைப் போன்ற வாயை யும் (உடையவள்) ஆதலினால், இளவேனில் பருவம் (ஆக) அமைந்த வளம் உடையவள் ; (மாந்தளிரும் முருக்கம் பூவும் இளவேனில் பருவத்திற்கு உரியன) :

மாந்தர் அறிவுடையீர் நின்மின்கள் அல்லார் போம் என்று பறை அறைவ போலும் சிலம்பு - (ஆண்) மக்களில் (தம்மைக் காத் துக் கொள்ளும்) அறிவுடையவர்களே (எம் எதிர்) நில்லுங்கள் -, (அத்திடம்) இல்லாதவர்கள் (நேர் நில்லாது) செல்லுங்கள் என்று பறை அடிப்பது போன்ற சிலம்பை ; சீர் ஆர் திருந்து அடிமேல் சேர்த்தினாள் - சிறப்புப் பொருந்திய திருத்தமான பாதங்களில் அணிந்தாள் ;

தேர் அல்குல் ஓராது அகலல் உறுது என்று சீராலே அம் துகிலும் மேகலையும் சூழ்ந்தாள் - தேர்த் தட்டுபோன்ற நிதம்பம் (எவரையும் தான்) நினையாமல் (எங்கும்) செல்லுதல் (அல்லது விரிதல்) கூடாது என்று எண்ணி சிறப்பு முறையால் அழகிய ஆடையையும் மேகலையையும் சுற்றி அணிந்தாள்; அணி முலைகள் மைந்தர் மனம் கவரும் என்பதனுல் - (தனது) அழகிய தனங்கள் ஆடவர் மனத்தைக் கவர்ந்துவிடும் என்று எண்ணத்தால்; முந்துறவே பூம் கச்சினுல் அடையப் பூட்டுறீஇ - முதலிலேயே மென்மையான இரவிக்கையால் (அத்தனம்) முழுதும் கட்டி; பொன் தொடியால் காம்பு ஒத்த இணை தோளைகாப்பு ஏவி—பொன்னுல் ஆகிய தொடியை எடுத்து மூங்கில் ஒத்த இரு தோள்களுக்குக் காவல் வைத்ததென அணிந்து; சீர் வாய்ந்த நல் கழுத்தை நல் ஆரத்தால் மறைத்து - சீர்த்தி அமைந்த சிறந்த கழுத்தை உயர்ந்த முத்தாரம் அணிந்தமை யால் மறைத்து;

காதுக்கு வில் பகரும் குண்டலங்கள் மேவுவித்து-செவிகளுக்கு ஒளி மிக்கதென எவராலும் சொல்லப்பெறும் குண்டலங்களை விரும்பி யணிந்து; மை பகரும் காவி அம் கண்ணை கதம் தணிப்பாள் போல - குவளை மலர் போன்றது எனும் அழகிய கண்களை வெம்மை தணிக்க முயன்றவள் போல; தன் தாவிய அஞ்சனத்தை முன் ஊட்டி- தான் செய்த மையை (முதலில் கண்களுக்கு) இட்டு; யாவரையும் ஆகுலம் ஆக்கும் அழகினுள்-எவரையும் துன்பத்தில் சேர்க்கும் அழகு உடையவள்; அன்னமும் கோகிலமும் போலும் குணத்தினுள் - ஆகி - அன்னத்தையும் கோகிலத்தையும் ஒத்த குணம் உடையவளாய்; பல கருதி கட்டி - பலவகையாக சிந்தனைசெய்து முடிந்து; கரியவாய் - கருமை நிறம் உடையதாய்; கோடி அலர் சுமந்து - எண்ணிலா மலர்களைத் தாங்கி; கூழைய ஆகி - பின் பாகத்தில் இருப்பதாய்; யாதும் கலை உள் இன்றி கரந்து - சிறிதும் ஆடையின் உட்புறத்தில் இல்லாது (வெளியே காணப்பட்டு); புறம் கமழ்ந்து-புறத்தில்

மட்டும் மணம் வீசி ; கீழ் தாழ்ந்து - கீழ் (நோக்கித்) தொங்கி ; கள் ஆவி நாறும் - தேன் மணம் வீசும் ; கரும் குழலாள் - கருமையுள்ள கூந்தலை யுடையவள் ; தெள் ஒளிய செங்கழுநீர் பட்டு உடுத்து - தெள்ளிய ஒளியுடைய செங்கழுநீர் (மலர்போலும் நிறமுடைய) பட்டுச்சேலையை உடுத்தி ; செம் குங்குமம் எழுதி - சிவந்த குங்குமப் பொட்டு இட்டு ; அம் கழுநீர் தாமம் நுதல் சேர்த்தி - அழகிய கழு நீர் மாலை (யெனும் ஆபரணத்தை) நெற்றியில் அணிந்து ; பொங்கு எழில் ஆர்-மிகுதியான பொலிவு அமைந்த; பொன் கவற்றின் வெள்ளி பலகை - பொன்னால் ஆன தாயக்கட்டையால் வெள்ளிப் பலகை யில் ; மணி சூது நன்கு அமைய நாட்டி - மணிகளான சூதாடுகாய்களை நன்கு பொருந்த வைத்து ; பொரும் பொழுதில் - (சூது) போர் ஆடிக் கொண்டிருந்தபோது ; வில் பகிரும் தோளான் - ஒளி வீசும் தோள் களை யுடையவனும் ; தோற்றம் நிலைபேறு கேடு ஆய் நின்ற தாளான் - படைப்பு காப்பு அழிப்பு (ஆகிய முத்தொழிலும்) செய்வதாய் நின்ற திருவடிகளை யுடைய (உலாவந்த) பெருமானது ; சடாமகுடம் தோன்றுதலும் - சடைமுடி தோன்றவும் (தன் வசம் கெட்டாளா கலின்) ;

கேள் ஆய நாணுர் நடக்க - சுற்றத்தினரான (அச்சம் மடம் பயிர்ப்பொடு கூடிய) நாணமே ; (நீ இனி என்னை விட்டுச்) செல் ; நலத்தார்க்கு இடை இல்லை - சிறப்பு (எனும் ஒன்று இங்கு தங்குதற் கும் இனி) இடம் இல்லை ; வணுர் ஒழிக - திடம் என்பவரே ! (நீரும் இனிச்) செல்வீராக ; எழில் ஒழிக - அழகே ! (நீயும்) நீங்குக ; பேணும் குலத்தார் அகன்றிடுக - (என்னைக்) காக்கும் வரிசையில் இருப்பாரெலாம் நீங்குக ; (அதற்கு பதிலாக என்னைக் கெடுக்கும் :) குற்றத்தார் வம்மின் - குற்றம் என்பவர்களே! (நீங்கள் மட்டும்) வாருங் கள் ; நலத்தீர் - (என்னை விட்டு நீங்கும்) சிறப்புடைய நாணம் திடம் அழகு முதலியவர்களே ! நீர் நினைமின் என்று - (சென்றாலும்) நீங் கள் (என்னை மறவாது) நினையுங்கள் என்று சொல்லிக் கொண்டே ;

சொலற்கு அரிய தேவாதி தேவன் சிவன் - சொல்லுவதற்கு அரிய இந்த தேவர்கட்கெல்லாம் ஆதி மூர்த்தியான சிவபிரான்; ஆயின் - (யான் அவனையே) எண்ணும்போது; தேன் கொன்றை பூ ஆர் அலங்கல் - தேன் நிறைந்த கொன்றைப் பூக்களால் ஆன நிறைந்த மாலையை; அருளாது போவானேல் - (எனது காதல் நோய் நீங்கக்) கொடாது போவானாயின்; கண்டால் அறிவன் என சொல்லி - (அவன் என்னை) நோக்கினல் (அவனை நான் ஒருகை) பார்க்கின் றேன் என்று கூறி; கை சோர்ந்து - (தனதெண்ணம் நிறைவேறா தென ஓர்ந்த பின்) மிக்க சோர்வு அடைந்து; வண்டு ஆர் பூங் கோதை - வண்டுகள் ஆரவாரிக்கும் பூமாலை சூடிய கூந்தல்தெரிவை; வளம் தோற்றாள் - (தன் பெண்மை) வளம் அழிந்து நின்றிட்டாள்; (எ - று).

இருபத்தைந்து முதல் முப்பது வரை தெரியப் பெறு வது தெரிவைப் பருவம். தெவிட்டப்பெறா அமுதமே உருவமாகச் சமைந்ததோ எனும் தோற்றம் அப்பருவத் தாட்கு உடைமை. கேட்டாரை வயப்படுத்தும் மழலை மொழி யால் தண்மையைத் தரும் வைகறைப் பொழுதே யென வமைந்த வனிதை; காளையர்க்குக் காம வெப்பத்தைப் பெரி தூட்டும் காட்சியால் பகற்பொழுதே யென நின்ற படிவத் தாள்; வெம்மை நீங்கிய மாந் தளிரன்ன பாதங்களும் உள் ளங்கையும் சிவந்திருக்கும் சீர்த்தியால் அந்திப் பொழுதை நினைவுறுத்தும் அழகுடையாள்; தேய்வில்லாச் சிறப்பமைந்த திங்களே முகமென்ன அமைந்த தெளிவினுல் இரவின் எழி லனைத்தும் ஏற்றிருப்பவள்; சொல்லாலும் பொருளாலும் முகில்களைக் குறிக்கும் தனங்கள் எனப்பெறும் பயோதரங் களை உடையாளாகலின் கார்ப் பருவம்போல் தோன்றும் கவி னுடையாள்; மேனியில் மாந்தளிரும் வாயில் முருக்கிதழும்

உவமை முகத்தால் தோன்றலின் அவ் இரண்டும் மலரும் இளவேனிற் பருவம் என உள்ளவள் ; எனவே வைகறை உச்சி அந்தி இரவு கார் இளவேனில் ஆகிய பருவங்களை நினைவுறுத்தும் தெரிவை பணிபல அணிந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டே இருக்கின்றாள் ; உலாவந்த பெருமான் சடைமுடி அவள் கண்களுக்கு எதிரே தோன்றுதலும் ஞெரேலென எழுந்தாள் ; பெருமான் கோலம் காண்கின்றாள் ; கண்டதும் காதல் தலையெடுக்க நீங்கா நட்புடை நாணம் நீங்குகிறது ; பெருமிதம் கெடுகிறது ; மனேதிடம் மறைகிறது, அழகும் அமலன் எதிரே குன்றுகிறது: சிறுமை எண்ணங்கள் சிந்தையில் ஊற்றெடுக்கின்றன: நாணத்தாரே நலத்தாரே ஏணுரே எழிலாரே நீங்கள் செல்லுங்கள் சென்றாலும் எனை மறவன்மின், குற்றத்தாரே நீர் வம்மின் எனுத் திணைமயங்கி ஒப்பாரி வைப்பதென உரைத்து உரைத்துப் பின் உமாபதியை நோக்குகிறாள். ஒருதலைக் காமம் கைம்மிக, இப்பரமன் கொன்றை மாலையைக்கூட கொடாது போவனே எனச் சொல்லிக் குமுங்குகிறாள் ; தாராதே போவாளுயின் யானும் விட்டேனு அவனை ; ஒருகை பார்த்துவிட மாட்டேனு என சபதம் கூறுகிறாள் ; பின், தன தெண்ணம் வாயாதோ என எண்ணிச் சோர்வு மிக பெண்மைவளன் அழிந்து பேதுற்றாள். நாணம் ஏண் என்னும் அஃறிணைகளை நாணுர் நலத்தார் ஏணுர் என்றது திணைமயக்கம் ; இம்மயக்கம் தோன்ற தலைவி அவைகளை விளித்தது தனது தடுமாற்றத்தால் என்க.

## பேரிளம்பெண்

* ஒண்டாய

பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரு மின்சொற் பணிமொழியாண்—மண்ணின்மேல்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர்
கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணடி † மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள்—கட்டரவம்
அஞ்சப் பரந்தகன்ற வல்குலா ளாய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கு நுண்ணிடையா—ளெஞ்சாத
பொற்செப் பிரண்டு ‡ முகடு மணியழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி—யொத்துச்
சுணங்குந் திதலையுஞ் சூழ்போந்து கண்டார்க்
கணங்கு மமுதமுமாய்த் தோன்றி—யிணங்கொத்த
கொங்கையாள் கோலங்கட் கெல்லாமோர் கோலமா
நங்கையா ளிளவேய்த் தோளிணை—ளங்கையாற்
காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்த மிலங்கு மகலத்தாள்—வாய்ந்துடனே
யேய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்த செழும்பவளங்—காய்ந்திலங்கி
முத்தமுந் தேனும் பொதிந்து முனிவரையுஞ்
சித்தந் திறைகொள்ளுஞ் செவ்வாயா—ளொத்து
வரிகிடந் தஞ்சன மாடி மணிக

---

* ஒண்டாங்கு

† மண்டிலம்

‡ முகட்டின்

ஞுருவ நடுவுடைய வாகிப்—பெருகிய
தண்ணங் கயலுஞ் சலஞ்சலமுந் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள்—ஒண்ணிறத்த
குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலு § மதிமுகத்தாள்—வண்டலம்ப
யோசனை நாறு குழலா ளொளிநுதன்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள்—மாசில்சீர்ப்
பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் * மெய்புகைத்தாள்—மாதார்ந்த
பண்கவருஞ் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிருந்—தொண்கேழற்
கண்ணவனை யல்லது காணு செவியவன
தெண்ணருஞ்சீ ரல்ல † திசைகொள்ளா—வண்ணல்
கழலடி யல்லது கைதொழா வஃதான்
றழலங்கைக் ‡ கொண்டான்மாட் டன்பெண்—றெழிலுடைய
வெண்பா விரித்துரைக்கும் பொழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன்—விண்பால்
அரியரணஞ் செற்றுங் கலைபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராண—னெரியிரவில்
ஆடு மிறைவ னமரர்சூழாந் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு—கேடில்சீர்
வண்ணச் சிலம்படி மாதரார் தாமுண்ட

§ மலர்முகத்தாள்

* மெய்புதைத்தான்

† திசைகேளா

‡ கொண்டான் மாட் டன்போர்ந்

கண்ணொச்சி லெம்மையே யூட்டுவா—னண்ணலே
வந்தாய் வளைகவர்ந்தாய் மாலு மருந்துயருந்
தந்தா யிதுவோ தகவென்று—நொந்தாள்போற்
கட்டுரைத்துக் கைசோர்ந் தகமுருகி மெய்விளர்த்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள்—கொட்டிமைசேர்
பண்ணுரு மின்சொற் பணைப்பெருந்தோட் செந்துவர்வாய்ப்
பெண்ணார வாரம் பெரிதன்றே—விண்ணோங்கி
மஞ்சடையு நீள்குடுமி வாணிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு.

ஒள் தாய பெண் அரசாய் தோன்றிய பேரிளம் பெண்மையாள் - ஒளி பரவிய பெண்மை யுலகுக்கே அரசத் தானமாகப் பிறந்த பேரிளம்பெண் பருவத்தாள் ஒருவள்; பண் அமரும் இன்சொல் பணி மொழியாள் - இசையும் விரும்பத்தக்க இனிய சொல்லும் பணிவான மொழியும் உடையவள்; மண்ணின் மேல் - நிலவுலகில்; கண்டு - (கண்ணால்) கண்டும்; கேட்டு (செவியால்) கேட்டும்; உண்டு - (நாவால்) உண்டும்; உயிர்த்து - (மூக்கால்) மோந்தும்; உற்று - (மெய்யால்) தீண்டியும்; அறியும் ஐம்புலனும் - (விஷயங்களை) அனுபவிக்கும் ஐம்புலனும்; ஒள் தொடி கண்ணே உள - இவ் ஒளிபொருந்திய வளையலை யுடையவளிடத்தே உள்ளன; என்று - என்று (சொல்லும்); பண்டையோர் கட்டுரையை மேம்படுத்தாள் - மேலார் (ஆகிய வள்ளுவர் பெருமான் அருளிய) வாய்மை மொழியை மேன்மையாம்படிச் செய்யும் தோற்றத்தினை யுடையவள்; கண்ணாடி மண்டலம் போல் விட்டு இலங்கும் - வட்டாகாரமான கண்ணாடி போல விட்டு விட்டு ஒளிரும், நல் உகிர் சேர் மெல்விரலாள் - தூய நகங்கள் அமைந்த மென்மையான விரல்களை யுடையவள்; கட்டு அரவம் அஞ்ச பரந்து அகன்ற அல்குலாள் - திரண்ட (படமெடுக்கும்) பாம்பும் அஞ்சும்படிப் பரவி அகன்றுள்ள நிதம்

பத்தை யுடையவள்; ஆய் நலத்த வஞ்சிக்கொடி நுடங்கு நுண் இடையாள் - ஆராயும் நலம் உடைய வஞ்சிக் கொடி போலத் துவள்கின்ற சிறுத்த இடையை யுடையவள்;

எஞ்சாத பொன் இரண்டு செப்பு முகடு - குறைவு இல்லாத பொன்னாலாகிய இரண்டு முழுக்குடத்தின் (அதாவது பூர்ண கலசத்தின்) உச்சியில்; மணி அழுத்தி வைத்தன போல் வளர்ந்து ஏந்தி - நீலமணியைப் பதித்து வைத்திருப்பதுபோல வளர்ச்சிபெற்று (உள்ள காம்புகளைச்) சுமந்து; ஒத்து - (இரண்டும்) சமம் ஆகி; சுணங்கும் திதலையும் சூழ் போந்து - மென்மையும் தேமலும் சுற்றிலும் நிறைந்து; கண்டார்க்கு அணங்கும் அமுதமும் ஆய் தோன்றி - நோக்கினோர்க்கு (இது நமக்கு வாய்க்காது என்றபோது) வருத்தமும் (வாய்க்கப்பெறின் இன்பம் அளிக்கும்) அமுதமுமாகக் காணப்பட்டு; இணங்கு ஒத்த கொங்கையாள் - (ஒன்றுடன் ஒன்று) நெருங்கி ஒத்து உள்ள தனங்களை உடையவள்;

கோலங்கட்கு எல்லாம் ஓர் கோலம் ஆம் நங்கையாள் - அழகுடைய அனைத்திற்கும் (அழகு செய்யும்) ஒப்பற்ற அழகினையுடைய பெண் மக்களிற் சிறந்தவள்; நாகு இளவேய் தோளினள் - (ஈன்று அணிமை யுடைத்தெனும் அத்துணைச்) சிறிய மூங்கில் ஒத்த இரு தோள்களை யுடையவள்; அம் கையால் காந்தள் குலம் பழித்தாள் - கைகளின் அழகால் காந்தள் (மலர்த்) தொகுதியைத் தோற்கச் செய்தவள்; காமவேள் காதலாள் - மன்மதன் விரும்பும் இரதிபோல்வாள்; சாந்தம் இலங்கும் அகலத்தாள் - சந்தனம் (பூசி) ஒளிரும் மார்பு உடையவள்;

உடன் வாய்ந்து - இரண்டாக அமைந்து; ஏய்ந்து - (ஒன்றை யொன்று) ஒப்பாகி; குவிந்து - குவிவுபெற்று; திரண்டு - திரட்சியுற்று; மறிந்து - மடங்கி; இருபால் தேய்ந்து - இருமுனையினும் (வரவரத்) தேய்வு பெற்று; துடித்த - (மலரும் போதும் குவியும் போதும்) துடித்துக்கொண்டு இருக்கின்ற; செழும் பவளம் - செழுமையான பவளம் (போன்ற உதடுகளும்); காய்ந்து இலங்கி - மிக்கு ஒளிர்ந்து; முத்தமும் தேனும் பொதிந்து - (பற்களாகிய) முத்துக்

-களும் (ஊறல் நீரான) தேனும் நிறைந்து ; முனிவரையும் சித்தம் திறை கொள்ளும் செவ்வாயாள் - (பற்றற்ற) முனிவர் மனத்தையும் கப்பமாகக் கொள்ளும் சிவந்த வாயினை யுடையவள் ;

வரி ஒத்து கிடந்து-செவ்வரிகள் சமமாகப் படர்ந்து; அஞ்சனம் ஆடி - அஞ்சனம் பூசி ; மணிகள் உருவம் நடு உடைய ஆகி - (கரு விழிகளான) நீல மணிகளின் உருவம் நடுவில் இருப்பதாய் ; பெருகிய தண் அம் கயலும் - (பிறழ்ச்சியாலும் ஒளியாலும்) மிக்க குளிர்ந்த அழகிய கயல் மீனும் ; சலஞ்சலமும் தோன்றுதலால் - சலஞ்சலம் (என்ற வெண் சங்கும் வெள்ளை விழிகளாகக்) காணப்படுதலினால் ; கடல் வண்ணம் அனைய வாள் கண்ணாள் - கடலின் தன்மை ஒத்த ஒளிவீசும் கண்களை யுடையவள் ; ஒள் நிறத்த குண்டலம் சேர் காதினாள் - ஒண்மை நிறம் உள்ள குண்டலங்கள் சேர்ந்திருக்கும் செவிகளை யுடையவள் ; கோலம் குளிர் மதிய மண்டலமே போலும் மதிமுகத்தாள் - சிறந்த குளிர்ச்சியுள்ள மதிமண்டலம் போன்ற மதிக்கத்தக்க திருமுகமுடையவள் ; வண்டு அலம்ப யோசனை நாறு குழலாள் - வண்டுகள் (தேன் உண்ணச் சுற்றி) ஒலிக்க (ஒரு) யோசனை தூரம் மணம் வீசும் கூந்தலை யுடையவள் ; ஒளி நுதல் மேல் வாசிகை கொண்டு வடிவு அமைத்தாள் - ஒளியுடைய நெற்றி யின் மேல் வாசிகை (என்னும் ஆபரணத்தைச்) சேர்த்து அழகைப் பொருத்தினவள் ;

மாசு இல் சீர் பாதாதி கேசம் பழிப்பு இலாள் - குற்றம் இல் லாச் சீர்த்தியும் அடிமுதல் முடிவரை பழிப்பு சொல்லற்கு இயலாத சாமுத்ரிக இலக்கணமும் அமைந்தவள் ; பாங்கு அமைந்த சீதாரி கொண்டு - தகுதியாக அமைந்து உள்ள சீதாரி (யெனும் ஓர் வகை மரத்தால் அமைத்த) வாசனையை எடுத்து; மெய் புகைத்தாள் - உடம் பிற்குப் புகையூட்டினாள் ;

மாது ஆர்ந்த பண் கவரும் சொல்லார் - அழகு நிறைந்த இசை யையும் வயப்படுத்தத் தக்க மொழிகளையுடைய தோழியர்கள் ; பல் லாண்டு ஏத்த - பல்லாண்டு பாட ; பாய் ஒளி சேர் - பரவிய ஒளி பொருந்திய ; வெள் கவரி வெள்ளத்து இடையிருந்து - வெண் சாமரை (யெடுத்துப் பலர் வீச, அக்) கூட்டத்தின் நடுவில் இருந்து

ஒள் கேழல் - ஒளிரும் நிறம் உடைய; கண் அவனை அல்லது காணா - கண்கள் அப்பரமனை யல்லாது (வேறு ஒன்றையும்) காணாது; செவி அவனது எண் அரும் சீர் அல்லது இசை கொள்ளா - செவிகள் அந்த இறைவனது நினைத்தற்கு அரிய புகழை அல்லாது (வேறு எவர் புகழையும்) ஏற்காது; அண்ணல் கழல் அடி அல்லது கைதொழா - பெருமையிற் சிறந்த சிவபிரானது வீரக்கழல் அணிந்த திருவடிகளை யல்லாமல் (வேறெவரையும் எனது) கைகள் கும்பிடாது; அம் கை அழல் கொண்டான் மாட்டு அன்பு - அழகிய திருக்கரத்தில் அழல் ஏந்திய பெருமானிடத்துக்கொண்ட (என் மனத்து) அன்பு; அஃதான்று - அதுவேயாம்; என்று எழில் உடைய வெண்பா விரித்து உரைக்கும் போழ்தில் - என்று சொல்லும் அழகுடைய வெண்பாவை விரிவாக (இப்பேரிளம் பெண்) பாடிக் கொண்டிருக்கும் அவ்வமயம்;

விளங்கு ஒளி சேர் கண் பாவு நெற்றி - விளக்கம் தங்கிய ஒளி பொருந்திய கண் பரவியிருக்கும் நெற்றி (உடையவனும்); கறைக் கண்டன் - திருநீலகண்டனும்; விண்பால் - ஆகாயத்து (இருந்த); அரி அரணம் செற்று - (முப்புரவாசிகள் எனப்பெறும்) பகைவர்களின் (பொன் வெள்ளி இரும்பு எனப்பெறும்) மதில்களை (ப்புன்னகையால்) அழித்தவனும்; அலை புனலும் பாம்பும் புரிசடைமேல் வைத்த புராணன் - அலைகளையுடைய கங்கையையும் அரவினங்களையும் முறுக்கேறிய சடைமுடிமேல் வைத்திருக்கின்ற மிகப் பழையவனும்; எரி இரவில் ஆடும் இறைவன் - (சர்வ சம்மாரகாலத்து) நள்ளிரவில் தாண்டவஞ் செய்பவனும் ஆன எம்பெருமான்; அமரர் குழாம் தன் சூழ மாடம் மறுகில் வரக்கண்டு - தேவர்கள் கூட்டம் தன்னைச் சூழ்ந்து தொடர (உயர்ந்த) மாளிகைகளையுடைய வீதியில் (உலா) வர நோக்கி;

கேடு இல் சீர் வண்ணம் சிலம்பு அடி மாதரார் - கெடுதியில்லாத சிறப்புள்ள அழகான சிலம்பணிந்த பாதங்களை யுடைய பெண்கள்; தாம் உண்ட கண் எச்சில் - தாம் கண்டதால் ஆன கண் (பார்வையால் நேர்ந்த) தோடங்களை (எல்லாம்), அண்ணலே - பெருமானே!

எம்மையே ஊட்டுவான் வந்தாய் - எமக்கே சேர்ப்பதன் பொருட்டு வந்தனை; வளைகவர்ந்தாய் - (வந்ததும் எம் கை) வளையல்களைக் கொள்ளை கொண்டாய்; மாலும் அரும் துயரும் தந்தாய் - (மேலும், காம) மயக்கமும் (நீங்குதற்கு) அரிய துன்பமும் கொடுத்தனை; இது தகவோ என்று கட்டுரைத்து - (உயிர்களை வாழ வைக்கும் பெருந்தகையான உனக்கு) இது தகுதியாமோ என்று வாய்மைபடக் கூறி; கை சோர்ந்து - (அதற்கு மேல் பேச முடியாமல்) அயர்ச்சி மிக்கு; அகம் உருகி - மனம் (கசிந்து) உருகி; மெய் வெளுத்து - (ஒருதலைக் காதலால் பொன்னிறமான) உடல் வெண்மை நிறம் அடைந்து; மட்டு இவரும் பூ கோதை மால் கொண்டாள் - தேன் நிமிரும் பூ மாலை சூடிய அப்பேரிளம் பெண்ணாவாள் (பேய் பிடித்த வள் போல) மயக்கம் கொண்டவளாயினாள்;

விண் ஓங்கி மஞ்சு அடையும் நீள் குடுமி - ஆகாயத்தை அளாவி மேகங்கள் (இளைப்பாறும் நிமித்தம்) வந்து தங்கும் நீண்ட சிகரங் களையுடைய; வாள் நிலா வீற்றிருந்த செம் சடையான் போந்த தெரு - ஒளியுடைய பிறைமதி சிறப்புடன் அமர்ந்திருந்த செக்கர் வானம்போன்ற சடைமுடி யுடைய பெருமான் உலா வந்த வீதி யில்; கொட்டு இமை சேர் - கொட்டிக் கொண்டே இருக்கும் இமை கள் சேரப் பெற்ற (கண்களையும்); பண் ஆரும் இன் சொல் - இசை (வந்து) அமையும் இனிய மொழிகளையும்; பணை பெரும் தோள் - (மூங்கிலெனப்) பருத்த பெரிய தோள்களையும்; செம் துவர் வாய் - சிவந்த பவளம்போன்ற வாயையும் உடைய; பெண் ஆரவாரம் (இப்) பெண்களினுடைய ஆரவாரம்; பெரிது அன்றே - பெரிதா யிருந் தது, (எ - று).

பெண்ணீர்மை § காமின் பெருந்தோ ளிணைகாமின் *
உண்ணீர்மை மேகலையு முள்படுமின்—றெண்ணீர்மைக்
காரேறு கொன்றையந்தார்க் காபாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா.

(ப - ரை.) பெண் நீர்மை காமின் - பெண்களின் இயல்பைக் காத்துக்கொள்ளுங்கள்; பெரும் இணை தோள் காமின் - பெருமை வாய்ந்த (வளையலணிந்த) இரண்டு தோள்களையும் காத்துக் கொள் ளுங்கள்; உள் நீர்மை மேகலையும் உள்படுமின் - நினைக்கத் தக்க

§ காண்மின் * காண்மின்

நேர்மை உள்ள மேகலையையும் (அவிழா வண்ணம்) அகப்படுத்துங்கள்; (ஏனெனில்): தெள் நீர் - தெளிந்த (கங்கை) நதியையும்; கார் ஏறு கொன்றை அம் தார் காவாலி - கார் காலத்தில் மிக்கு மலரும் கொன்றையாகிய அழகிய மாலையையும் சூடிய கபாலியும்; கட்டங்கன் - மழுவை யேந்தியவனுமான பெருமான்; ஊர் ஏறு போந்தது உலா - ஊர்கின்ற விடைமேல் உலா வந்தான், (எ - று).

முப்பது முதல் நாற்பது வயது வரை நவிலப் பெறுவது பேரிளம்பெண் பருவம்; இப்பருவப்பெண்ணரசி யொருவள் பலநாள் பரமனையே எண்ணி உருகிய இதயத்தள்; தன் கண்ணும் செவியும் கையும் அன்பும் அப்பரமனுக்கே ஆளான வரலாற்றை வெண்பா இயலால் விரித்துப் பாடுகின்றாள்; நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதன் வானவர் கூட்டம் புடைவர அவளிருக்கும் மாடவீதிவழி வருகின்றான்; வந்தானை நோக்கினாள்; காதல் தலைநிமிரத் தன்னையும் மறந்து வாய்திறந்தாள்; காரிகையார் நோக்கி நோக்கிக் கண்ணேறு பட்டிருக்கும் கண்ணுதால்! என்கிறாள்; உடல் இளைக்க வளை நெகிழ்ந்து கீழ் விழுகிறது; வந்தனை; வளையல் கவர்ந்தனை; மயக்கமும் துன்பும் தந்தனை; உனக்கு இது தகுதியேயோ என்கிறாள்; அயர்ச்சி மிக்கது; உள்ளம் உருகிற்று; மெய்யும் வெளுத்தது: உலகையும் மறந்தவளாயினாள்.

இங்ஙனமாகவே பெருமான் உலாப் போந்த வீதியெல்லாம் உள்ள எழுவகைப் பருவப் பெண்களின் ஆரவாரமே பெரிதாயிற்று.

இதனைத் தம் மனக்கண்ணால் நோக்கிய பெருமாக் கோதையார், பெண்ணின் நீர்மையைக் காத்திர்; இணைத் தோளைக் காத்திடுதிர்; மேகலையை நெகிழா வண்ணம் காமின்! காமின்!! உலாப் போந்துளான் உமை கேள்வன் என உயிர்த்தொகுதிகட்கு உள்ளுறைப் பொருள் தோன்ற இவ் வேத மொழியை ஓதுகின்றார்; விழிமின்; எழுமின்; ஓம்.

---

Printed at the Model Press, Godown Street, George Town, Madras.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| II | 6 | வண்ணுணை | வண்ணுனை |
| IV | 19 | முதலியன | முதலிய |
| VIII | 19 | மிளமுளையா | மிளமுலையா |
| 14 | 7 | புறங்கடைகட் | புறங்கடைக்கட் |
| 46 | 7 | ஒருவள் | ஒருத்தி |
| 61 | 27 | எடுத்துப் | எடுத்து |
| 68 | 25 | ஒருவள் | ஒருத்தி |
| 73 | 21 | பேண்மை | பெண்மை |
| 75 | 21 | ஒருவள் | ஒருத்தி |
| 80 | 3 | வைகரை | வைகறை |
| 83 | 13 | ஒருவள் | ஒருத்தி |
| 87 | 28 | காபாலி | காவாலி |
| 88 | 9 | ஒருவள் | ஒருத்தி |

# விளம்பரம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| திருக்கயிலாய ஞானவுலா விருத்தியுரை | 0 12 0 |
| சிதம்பரம்: இராமலிங்க சுவாமிகள் பக்திரச தோத்திரப்பா :—இது, அடிகள் உளக் கிடையை நினைவுக்குக் கொணர்ந்து உருகிய உளத்தொடு பாடிய ஓர் இனிய நூல்; சுவாமிகளின் சரித்திரச் சுருக்கமும் திருவுருவப் படமும் அடங்கியது. | 0 1 0 |
| பொன் வண்ணத் தந்தாதி விருத்தியுரை | அச்சில் |
| திருவாரூர் மும்மணிக் கோவை விருத்தியுரை | ,, |
| திருப்பாவை (ஆண்டாள் அருளியது) விருத்தியுரை | ,, |
| பெரிய புராணம் முதல் நான்கு சருக்கங்கள் :— ஸ்ரீ கா. ஆலால சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய விசேடவுரை | 11 0 0 |

கிடைக்குமிடம் :— அ. ப. எல்லப்ப நாயகர்,
அமைச்சர்

நெ. 11, அல்லூர். வேங்கடாத்திரி மந்திரம்
கொல்லவார் அக்ராரம் ரோட்டு,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.